15 மார்ச் 1994 □ ரூ. 3.00

www.padippakam.com

கிரிமினல் ஜெயா நீதித்துறைக்கும் சவால்

# புதிய ஜனநாயகம்

## விலையேற்றம், தாராளமயமாக்கம்: மக்களை கசக்கிப் பிழியும் அரக்கர்கள்

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE




P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE

படிப்பகம்

www.padippakam.com

# அம்பேத்கார் பெயரில் பேருந்து தலித்துக்களுக்கோ தடியடி!

மரத்துவாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கார் பெயர் சூட்டியதற்காக தலித்துக்கள் மீது தாக்குதல தொடுத்து வரும் சிவசேனா அமைப்பைத் தடைசெய்யக் கோரியதும் அதன் தலைவர் பால்தாக்ரேயைக் கைது செய்யக் கோரியதும் என்ன அவ்வளவு பெரிய குற்றமா? இப்படி வெறியோடு பாய்ந்து தாக்குகிறதே போலீசு! மதுரையில் 12-2-94 அன்று தலித் சிறுத்தைகள் என்ற அமைப்பினர் ரயில் மறியல் செய்த தற்காகத் தான் இத்தகைய காட்டுமிராண்டித் தாக்குதல். அறிவித்தபடி இவ்வமைப்பினர் கட்டபொம்மன் சிலையிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு மதுரை ரயில் நிலையத்தில் மறியல் செய்யப் புறப்பட்டனர். ஏற்கனவே ஊர்வலமாக வந்த ஒரு பிரிவினரையும் உள்ளிருந்து மறியல் செய்தவர்களையும் கைதுசெய்தது, போலீசு. அடுத்து வந்த இன்னொரு பிரிவு மக்களை தடுத்து நிறுத்தியதோடு அத்துமீறித் தடியடி பிரயோகம் செய்யவே பதட்டம் ஏற்பட்டது. போலீசின் தாக்குதலில் 2 பேர் மயங்கி விழுந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்; பத்திரிக்கையாளர்கள், பொதுமக்கள் பலரும் தாக்கப்பட்டனர். ஆத்திரமான தலித் அமைப்பினர் போலீசைத் திருப்பித் தாக்கியும், பேருந்துகளைத் தாக்கியும் சாலையில் அமர்ந்து மறியல் செய்தும் எதிர்ப்பைக் காட்டினர். இதைத் தொடர்ந்து பலர் கைதாகினர். தலித் அமைப்பினர் ஏறக்குறைய 400 பேர் கைது செய்யப்பட்டனர். அம்பேத்கார் பெயர் சூட்டியதை எதிர்ப்பவனைக் கைது செய்யக் கோரியதற்கு இப்படிக் காட்டுமிராண்டித்தனமாக தடியடிப் பிரயோகம் செய்தும் மறுபுறம் (அதிலும் பேருந்துகளில் முதல்நாள் ''டாக்டர் அம்பேத்கார்'' என்று எழுதிவிட்டு, மறுநாள் டாக்டர் பட்டத்தை ஜெயா உத்திரவின் பேரில் அழித்துவிட்டது; தலித்துகள் டாக்டர் பட்டத்தை எழுதுவதும், அரசு அழிப்பதும் நாள்தோறும் நடக்கிறது.) சென்னையில் பேருந்திற்கு அம்பேத்கார் பெயர் சூட்டி ஜெயா யாரை ஏய்க்கிறார்?

— தகவல், பு.மா.இ.மு., மதுரை.

## மதுக்கடைகளை எதிர்த்துப் பெண்கள் ஆர்ப்பாட்டம்

மதுக்கடைகளை மூடக்கோரியும் கள்ளச் சாராயத்தை ஒழிக்கக் கோரியும் திருச்சியைச் சேர்ந்த பெண்கள் விடுதலை முன்னணியினர் 29-1-9 அன்று சத்திரம் பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்திற்கு வாணி தலைமை தாங்க சுதந்திரா சிறப்புரையாற்றினார் மதுவால் விலையும் பாதிப்புகள் பிரச்சினைகளை விளக்கியதோடு அரசு, அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தியும் பேசினார்கள். பொதுமக்களில் பலர் கலந்து கொள்ள சுமார் 60 பேர் திரண்டிருந்த இந்த தொடர் ஆர்ப்பாட்டம் சிறந்த வரவேற்பைப் பெற்றது.

— பெண்கள் விடுதலை முன்னணி.

## டங்கலுக்கு எதிராக குமுறும் நெஞ்சங்கள்

விவசாயத்தையே பாழாக்க இருக்கும் டங்கல் திட்டத்தை எதிர்த்து உத்தமபாளையம் வட்ட விவசாயிகள் விடுதலை முன்னணியினர் பிரச்சார இயக்கம் மேற்கொண்டனர். கடந்த 22-ந்தேதி முதல் பல குழுக்களாகப் பிரிந்து கம்பம் பகுதி தெரு முனைகளில், பேருந்து நிலையங்களில், கடைகளில், பேருந்துகளில் குடியிருப்புகளில் பிரசுரம் விநியோகித்து, பேசி பிரச்சாரம் செய்தனர். கம்பம் நகரெங்கும் சுமார் 300 இடங்களில் சுவரெழுத்து எழுதப் பட்டது, மக்களிடையே சிறந்த வரவேற்பைப் பெற்றுத்தந்தது. பிரச்சாரத்தில் பெண்கள், சிறுவர்கள் கலந்துகொண்டதோடு திறம்பட அரசியல் பேசியதும் அனைவரையும் கவர்ந்தது. தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ. சுப்புராயர் டங்கலை ஆதரித்துப் பேசிய போது சிறுவயது பெண் தோழர்களின் கேள்விக் கணைகளால் வாயடைத்துப் போனார். பலர் டங்கலை எதிர்த்த புத்தகம் வாங்கியும் நிதியளித்தும் ஆதரவு நல்கினர்.

சீர்காழியில் டங்கல் திட்டத்தை எதிர்த்து ஊர்வலம், பொதுக்கூட்டம், புரட்சிகர கலைநிகழ்ச்சி 12-2-94 அன்று வி.வி.மு.வால் நடத்தப்பட்டது. தஞ்சை ம.க.இ.க. தோழர் காளியப்பன் சிறப்புறையாற்றினார்; கலை நிகழ்ச்சியோடு கூட்டம் சிறப்பாக முடிந்தது.

## மன்னர் கல்லூரி ஆசிரியர் போராட்டம்

மதுரை - மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் நிர்வாகத்திற்கு எதிராக 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பல்கலைக் கழக (MUTA) ஆசிரியர்கள் கடந்த ஆண்டு முதல் போராடி வருகிறார்கள். ஓய்வு பெற வேண்டிய முதல்வர் ரெங்கராமானுஜம் தொடர்ந்து பதவியிலிருப்பதற்கும் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள். கடந்த ஜனவரி மாதம் கல்லூரி வாயிலில் ஆசிரியர்கள் நடத்திய கூட்டத்தில் ரௌடிகளை ஏவி தாக்கியுள்ளார், முதல்வர். இதனால் பிரச்சினை மேலும் தீவிரமடைந்து கல்லூரி நிர்வாகமும் ஆசிரியர் சங்கமும் தனித்தனி வகுப்புகளை நடத்தி வருகிறார்கள். சாலையோரத்திலும் வீட்டு மொட்டை மாடிகளிலும் பாடம் நடத்தும் ஆசிரியர் சங்கத்தினரது வகுப்புகளுக்கு மாணவர்கள் பெரும்பான்மையோர் கலந்து கொண்டு ஆதரவளிக்கின்றனர். 7-2-94 முதல் 14-2-94 வரை MUTA சார்பாகத் தொடர் மறியல் போராட்டம் நடத்தி பலர் கைதாகினர். மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் 12-ந் தேதி இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலம் ஒன்று நடத்தி மாவட்ட ஆட்சியாளரிடம் மனு கொடுத்துள்ளனர். பிற கல்லூரி மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்தும், MUTA அல்லாத ஆசிரியர் சங்கங்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். மாநில அரசு பிரச்சினையைத் தீர்க்க சிரத்தை காட்டவே இல்லை. ஆசிரியர் சங்கப் போராட்டத்திற்கு ஆதரவாக மதுரை பு.மா.இ.மு. சுவரொட்டிகள் ஒட்டி பிரச்சாரம் மேற்கொண்டது.

பெண்கள் விடுதலை முன்னணியினர் ஆர்ப்பாட்டம்





படிப்பகம்

www.padippakam.com


புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

**7-8**

16 பிப். - 15 மார்ச் '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16



படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.


# கிரிமினல் ஜெயா கும்பல் நீதித் துறைக்கு சவால்

இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், ஆடம்பர - உல்லாச - ஊதாரித்தனங்கள், பொதுச் சொத்துக்களை சூறையாடுவதும், அவற்றுக்குத் தடையாக வரும் எந்தச் சக்தியையும் பாசிச வெறியோடு தாக்குவதும், அவற்றை மூடிமறைக்கக் கிரிமினல் குற்ற நடவடிக்கையில் ஈடுபடுவதும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலுக்குப் புதிதானவை அல்ல. அதுவே வாடிக்கையான ஆட்சி முறையாகிவிட்டது. நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பின் புனிதான மரபுகளைக் கொண்ட தூண்கள் எனப் பீற்றிக் கொள்ளப்பட்ட சட்டமன்றம், பத்திரிக்கைத் துறை ஆகியவற்றைத் தனது அராஜக - கிரிமினல் நடவடிக்கைகளால் செல்லாக் காசாக்கிவிட்டது. இப்போது நீதித்துறைக்கு எதிராகத் தனது தாக்குதல் முனையைத் திருப்பி இருக்கிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வெளிநாடுகளில் இருந்து நிலக்கரி இறக்குமதி செய்த விவகாரத்தில் நூறுகோடி ரூபாய்க்குமேல் ஜெயா - சசி கும்பல் லஞ்சம் வாங்கியது அம்பலமானது தெரிந்ததே. அதன் மீது தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி வழக்குத் தொடர்ந்தார்; கப்பலில் வந்த தரக்குறைவான நிலக்கரியை இறக்குமதி செய்யக் கூடாது என்று அந்த வழக்கில் இடைக்காலத் தடை விதித்தார், நீதிபதி லட்சுமணன். ஆனால் 'ரிட்மனு' என்னும் குறுக்கு வழியில் போய் நீதிபதி கனகராஜ் மூலம் அத்தடையை நீக்கும்படி செய்தது, ஜெயா கும்பல். அதன் பிறகு, நிலக்கரி இறக்குமதி ஊழல் மீதான பிரதான வழக்கை நீதிபதி லட்சுமணனே தொடர்ந்து விசாரித்து வந்தார்; அது முடியும் தருவாயையும் எட்டியது. இதற்கிடையே வேறுசில வழக்குகளில் அரசுக்கு எதிராகத் தீர்ப்பும் வழங்கியுள்ளார். பெரும் தொகை கொடுத்து உச்சநீதிமன்ற மூத்த வழக்கறிஞரை வைத்து வாதாடியும் தனக்கு எதிரான ஊழல் குற்றம் நிரூபிக்கப்பட்டுவிடும் என்று பீதியடைந்தது, ஜெயா கும்பல். எனவே நீதிபதி லட்சுமணனை மிரட்டிப் பணியவைப்பது, அல்லது வழக்கை வேறு நீதிபதிக்கு மாற்றுவது அதன் மூலம் விசாரணையை இழுத்தடிப்பது என்கிற சூழ்ச்சியை மேற்கொண்டது.

செங்கை மாவட்ட போலீசை ஏவி, நீதிபதி லட்சுமணனின் மருமகனைக் கடத்திக் கொண்டுபோய், தன்னிடமுள்ள மாமூலான கஞ்சா - சாராய வியாபாரிகளின் பொய் வாக்கு மூலங்களை வைத்து, கஞ்சா - சாராய வியாபாரத்தில் ஈடுபட்டதாக ஒரு வழக்குச் சோடித்து சிறையிலடைத்தது. இது சோடிக்கப்பட்ட வழக்கு என்பது அம்பலமாகி நீதிபதிலட்சுமணனின் மருமகன் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனால் பார்ப்பன பாசிச, ஜெயா கும்பலின் நோக்கம் என்னவோ நிறைவேறிவிட்டது. அதாவது, நீதிமன்றத்துக்கு வெளியில் நடக்கும் சில சம்பவங்கள் தன்னை வெகுவாகப்பாதிக்கும் தனிப்பட்ட காரணத்தைக் கூறி நிலக்கரி இறக்கு மதி வழக்கைத் தான் விசாரிப்பதில் இருந்து விலகிக் கொள்வதாக லட்சுமணன் அறிவித்தார். வேறு இரண்டு நீதிபதிகள் வழக்கை ஆரம்பத்தில் இருந்து விசாரிப்பர் என்றானது. ஆனால் எதிர்க் கட்சிகளும், குறிப்பாக காங்கிரசும், வழக்கறிஞர்கள், நீதிபதிகளும் அத்தோடு விடுவதாக இல்லை. காங்கிரசார் மாநிலந்தழுவிய உண்ணா விரதப் போராட்டம், ஆளுநர், அரசுத் தலைவர், பிரதமரிடம் முறையிடுவது என்று போனார்கள். நீதித்துறை, ஜெயா அரசால் மிரட்டப்படுவதைக் கண்டித்து பல வழக்கு மன்றங்களிலும் வழக்கறிஞர்கள் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர், உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் பொது குழுவில் கண்டனத் தீரமானம் நிறைவேற்றக் கூடிய போது ஜெயா ஆட்சி வழக்கறிஞர்கள், குண்டர்கள், சாதாரண உடை போலீசுக்காரர்கள் புகுந்து தாக்கி அடிதடி, ரகளை செய்து விரட்டினர். வழக்கமாக சட்டமன்றத்தில் நடக்கும் அராஜகம் - ரௌடித்தனம் வழக்கறிஞர்கள் பொதுக் குழுவிலும் அரங்கேறியது.

அதே நாளில் ஜெயா கும்பல் தனது இரகசிய நடவடிக்கைகளின் சூத்திரதாரியான (சசிகலா) நடராஜனுடைய மத்திய - மாநில உளவுப் படையின் கைக்கூலியான நகைமுகன் மூலம் நீதித்துறையை ''இழிவு'' படுத்தி சுவரொட்டி போட்டு உயர் நீதி மன்றம் மற்றும் சட்டமன்ற வளாகத்தில் ஒட்டினர். இதை எதிர்த்து, நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எடுத்துக் கொண்ட நீதிபதிகள், அதற்குக் காரணமான குற்றவாளிகளை ஒரே நாளில் பிடித்துவரும்படி போலீசுக்கு உத்திரவிட்டது. அதற்கே போலீசு ஒரு மாதகால அவகாசம் கேட்டு மறுக்கப்படவே, அடுத்தநாளே நகைமுகன் கும்பலைப் பிடித்து வந்தது; ஆனால் சுவரொட்டியில் கண்ட அச்சகத்தில் அது அச்சிட்டிருக்க முடியாது என அதன் உரிமையாளர் ஆதாரபூர்வமாக மறுக்கவே, குற்றவாளிகளை தப்புவிக்கும் போலீசின் முயற்சி இவ்வழக்கிலும் அம்பலமானது. அது நீதிமன்றத்தின் கடும் எச்சரிக்கைக்கு ஆளானது. பின்னர் நீதிபதி லட்சுமணனுடைய மருமகன் மீதான பொய்வழக்கை விசாரிப்பதற்கும் தடை விதிக்கப்பட்டது. தொடர்ந்து பல வழக்குகளில் அரசுக்கு எதிராகத் தீர்ப்பு வருவதால் ஜெயா கும்பல் மேலும் ஆத்திரமடைந்துள்ளது.

''தராசு'' ஏட்டின் ஊழியர் கொலை, சந்திரலேகா மீது திராவக வீச்சு முதல் தனது கட்சி எம்.எல்.ஏக்களை, எதிர்க்கட்சியினரை அடியாட்களை ஏவி தாக்குவதும் - அம்மணமாக ஆர்ப்பாட்டம் செய்வதும்வரை பல கிரிமினல் குற்றங்களில் ஜெயா கும்பல் ஈடுபடுகிறது. ''ஸ்பிக்'', ''டான்சி'', பாடப்புத்தகம் அச்சிடுதல், நிலக்கரி இறக்குமதி, ஆசிரியர் பயிற்சி - மருத்துவக் கல்லூரி திறப்பு, தனியாருக்கு மின்நிலைய தாரைவார்ப்பு முதல் இலவச வேட்டி - சேலை , செருப்பு - முட்டை வழங்கு திட்டங்களில் கூட லஞ்ச ஊழல்களில் திளைக்கிறது. இதில் எல்லாம் உடந்தையாக இருப்பதாலேயே போலீசு - அதிகார வர்க்கத்துக்கு தாராள சலுகைகள் - உரிமைகள் வாரி வழங்குகிறது. மேலும் இது பார்ப்பன - பாசிச கும்பல் ஆட்சி என்பதாலேயே இத்தகைய கிரிமினல் குற்றங்களில் இருந்து தப்பித்துவிட மத்திய ஆளும் காங்கிரசு தலைமையும், பாரதீய ஜனதாவும் உதவுகின்றன. இதற்கு முந்தைய கட்சிகளிலும் லஞ்ச ஊழல்களும், மூடிமறைக்கும் முயற்சிகளும் நடந்தன; என்றாலும் இவற்றில் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் புதிய எல்லைகளைத் தொட்டுவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com

# மக்களை கசக்கிப் பிழிவதே தரகர்களின் தாராளமயமாக்கல்

கடந்த மூன்று வாரங்களில் அயோக்கியத்தனமான முறையில் அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் முதலான அத்தியாவசியப் பொருட்களை அடுத்தடுத்து விலையேற்றம் செய்துள்ளது, ராவ் கும்பல். நாடாளுமன்றத்தில் தற்போது பெரும்பான்மையாகிவிட்ட தைரியத்தில் நாட்டு மக்கள் மீது தொடர்ந்து மூன்றாவது முறையாக தொடுக்கும் மிகப் பெரிய பொருளாதாரத்தாக்குதல், இது. அடுத்த இரு வாரங்களில் சமர்ப்பிக்க வேண்டிய பட்ஜெட்டுக்கு முன்பே இப்படி அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உயர்த்தி பல கோடிரூபாய் கொள்ளைக்கு வழிவகுத்துக் கொண்டுள்ளது. இதன் மூலம் பட்ஜெட்டில் நியாயவானாக, பரோபகாரியாக வேடம் போடுவதற்கு வழக்கம் போலவே முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டுள்ளது. ஆண்டுக்கு ஒருமுறை பட்ஜெட் என்ற சட்டவிதியைக் கேலிக்கூத்தாக்கிவிட்டு, பல தவணைகளில் பொருளாதாரத் தாக்குதலைத் தொடுப்பதென்பது காங்கிரசு துரோகிகளின் மரபாகிவிட்டது.

முதலில் சமையல் எரிவாயு ஒரு சிலிண்டருக்கு ரூ. 10 வீதம் விலையேற்றம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ரேஷன் சர்க்கரை விலை கிலோவுக்கு 75 பைசா உயர்த்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ரேஷன் அரிசி, கோதுமை அநியாயமாக 20% அளவுக்கு விலையேற்றம் செய்யப்பட்டது. அதன் பிறகு பெட்ரோல் - டீசல் விலைகள் முறையே லிட்டருக்கு 1 ரூபாய் மற்றும் 75 பைசா வீதம் உயர்த்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 43,000 கோடி ரூபாய்க்கு வருவாயைத் தேடிக் கொண்டுள்ளது, மத்திய அரசு.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 100 நாட்களில் விலைவாசியைக் குறைப்போம் என்று சவடால் அடித்து ஆட்சிக்கு வந்த காங்கிரசுப் பெருச்சாளிகள், டிசம்பர் 1991-க்குப் பிறகு 3 முறை அரிசி விலையை உயர்த்தியுள்ளனர். கடந்த ஈராண்டுகளில் அரிசி விலை 86%-ம், கோதுமைவிலை 72%-ம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டைவிட மொத்த உணவு தானியங்களின் விலை 32% உயர்ந்துள்ளது.

மத்திய அரசுக்கு தாங்கள் சற்றும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் பாசிச ஜெயா அரசு, ரேஷன் அரிசி, சர்க்கரை விலை உயர்வை மக்கள் தலையில் சுமத்தியும், வீட்டுவரி, நிலவரிகளை உயர்த்தியும் பால்விலை, பேருந்துக் கட்டணம், மின் கட்டணங்களைக் கூட்டியும், காரணமே இல்லாமல் நூல் விலையேற்றம் செய்தும் தமிழக மக்களை வதைக்கிறது.

அரிசி, கோதுமை, சர்க்கரை ஆகியவற்றின் கொள்முதல் விலை உயர்வு காரணமாக ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை ஈடுகட்டவே இந்த விலையேற்றம் என்று காங்கிரசு துரோகிகள் வெட்கமின்றி இதை நியாயப்படுத்துகின்றனர். உணவு தானியங்களின் கொள்முதல் விலை உயர்வுக்குக் காரணம், உலக வங்கியின் உத்திரவுப்படி உரமானியம் வெட்டப்பட்டதுதான். இதன் மூலம் கூடுதல் உற்பத்திச் செலவை விவசாயிகளின் தலையில் சுமத்திய மத்திய அரசு, இப்போது விலையேற்றத்துக்கும் விவசாயிகள் மீது பழியைப் போடுகிறது. அதேபோல, கரும்பு கொள்முதல் விலை உயர்வை ஈடுசெய்ய சர்க்கரை - சாராய ஆலை அதிபர்களிடம் கூடுதல் வரிவிதிக்க மறுக்கிறது. சாராய உற்பத்திக்கு அவசியமான 'மொலாசஸ்' எனப்படும் சர்க்கரைக் கழிவின் விலையை உயர்த்தினால், சாராய அதிபர்கள் பாதிக்கப்படுவார்கள்; கரும்பு கொள்முதல் விலையை உயர்த்தினால் சர்க்கரை ஆலை அதிபர்கள் கோபித்துக் கொள்வார்கள் என்பதால், இச்சுமை முழுவதையும் மக்கள் மீதே சுமத்தியுள்ளது. 1994-95-ம் ஆண்டுக்கு கரும்புக்கு ஆதார விலையாக டன்னுக்கு ரூ. 425 என மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.




இருப்பினும் தமிழக அரசு கூடுதலாக ரூ. 105 கொடுத்து கொள்முதல் செய்கிறது. இதுபோல் கூடுதல் மானியம் கொடுக்கக் கூடாது என்று மாநில அரசுகளை மத்திய அரசு எச்சரித்துள்ளது. மேலும் விவசாயிகள் குடிசைத் தொழிலாக வெல்லம் காய்ச்சக் கூடாது என்றும் எச்சரித்துள்ளது.

கடந்த ஈராண்டுகளாக உலக அளவில் பெட்ரோல் விலை உயரவில்லை. 1980-ம் ஆண்டை ஒப்பிடும்போது தற்போது இறக்குமதியாகும் கச்சா எண்ணெயின் விலை 52% குறைவாகவே உள்ளது. ஆனால் உள்நாட்டிலோ பெட்ரோலியப் பொருட்களின் விலை 3 மடங்கு அதிகமாகவே உள்ளது.

தற்போதைய அநியாய விலையேற்றம் இத்துடன் நின்றுவிடாது. பெட்ரோல் - டீசல் விலை உயர்வால், பேருந்து - ரயில் கட்டணங்களின் விலையேற்றத்தோடு அனைத்து அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்துக்கே வழி வகுக்கும். ரேஷன் அரிசி, கோதுமை விலை உயர்வைத் தொடர்ந்து, வெளிச்சந்தையில் அனைத்து பொருட்களின் விலையும் கிடுகிடுவென உயரும். ஏற்கனவே நூல் விலை உயர்வால் தமிழகத்தில் மட்டும் 4 லட்சம் நெசவாளர்கள் வேலையின்றி பட்டினியில் பரிதவிக்கின்றனர். அடுத்து வரப்போகும் விலையேற்றமானது, நடுத்தர வர்க்கத்தினரை ஏழைகளாக்கிவிடும், ஏழைகளைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிடும்.

இது நெருக்கடியில் சிக்கிய பொருளாதாரத்தைச் சரியான பாதைக்குத் திருப்பிவிடும் முயற்சி, சர்வதேச பொருளாதாரத்துடன் நமது நாட்டையும் இணைத்து முன்னேற்றுவதற்கான நடவடிக்கை, நாட்டு நலன் கருதி மக்கள் இந்தச் சுமைகளை ஏற்றுத்தான் ஆக வேண்டும் என்று ஆட்சியாளர்களும், முதலாளித்துவ பொருளாதாரவாதிகளும் உபதேசிக்கின்றனர்.

ஆனால் கடந்த மூன்றாண்டுகளாக புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் இத்தகைய தாக்குதல்களை மக்கள் மீது சுமத்தியும் கூட இந்தியப் பொருளாதாரம் முன்னேறியுள்ளதா?. உலக வங்கியும் ஐ.எம்.எப்.பும் விதித்த கடுமையான நிபந்தனைகளை ஏற்று, ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டது. அன்னிய வங்கிகளில் இந்தியாவின் தங்கம் அடகு வைக்கப்பட்டது. உணவு மற்றும் சேவைத் துறைகளுக்கான மானியம் வெட்டப்பட்டது; அரசுத் துறை முடமாக்கப்பட்டு, அன்னிய ஏகாதிபத்தியங்களும் தரகுப் பெரு முதலாளிகளும் நாட்டைக் கொள்ளயிட கணக்கற்ற சலுகைகள் வாரியிறைக்கப்பட்டன. ஆனால் நெருக்கடி தீரவில்லை.

தேசிய வளர்ச்சி விகிதம் 6% எதிர்பார்க்கப்பட்டு இன்னமும் 3.5% ஐத்தாண்


படிப்பகம்

www.padippakam.com

டவில்லை. தொழிற்துறை வளர்ச்சி 7% எதிர்பார்க்கப்பட்டு 1993 முடிய 1.5% தான் உயர்ந்துள்ளது. ஏற்றுமதி 6.6% உயரும் என திட்டமிடப்பட்டு அதில் பாதியளவு கூட கடந்த ஆண்டு உயரவில்லை. அன்னியக் கடன் ரூ. 72,000 கோடியிலிருந்து 1990-ல் ரூ. 1,24,500 கோடியாகியது. ராவ் கும்பலின் ஆட்சியில் அது ரூ. 2,76,000 கோடியாக இன்று பூதாகரமாகப் பெருத்துள்ளது. சுருக்கமாகச் சொன்னால், 1991 - இறுதியிலிருந்து 1993 முடிய நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 7-வது ஐந்தாண்டுத் திட்ட இலக்கைவிட குறைந்து போயுள்ளது. பணவீக்கம் இரு மடங்கு அதிகரித்து பற்றாக்குறையை பாதாளத்தில் தள்ளியுள்ளது. நவீனமயமாக்கம் என்பது வேலையற்றோரின் எண்ணிக்கையைப் பெருக்கி, நகர்ப்புற வேலையற்றோரின் எண்ணிக்கையை 4 கோடியாக்கிவிட்டது. இவையனைத்தும் நாட்டை மறுகாலனியாக்கிவரும் புதிய பொருளாதாரக் கொள்கையின் கோரமான விளைவுகள்.

தற்போதைய விலையேற்றத்தை வெறுமனே பொருளாதார ரீதியான தாக்குதலாக குறுக்கிச் சுருக்கிவிட முடியாது. அரசியல், பொருளாதாரம், இராணுவம் உள்ளிட்ட அனைத்து விவகாரங்களிலும் நாட்டை முற்றாக ஏகாதிபத்தியங்களுக்கு மறுஅடகு வைப்பதன் தொடர்ச்சியும் விளைவும்தான் இது. விலையேற்றத்தோடு கூடவே கணக்கற்ற தாராளமயக் கொள்கைகள் கடந்த மாதத்தில் அறிவிக்கப்பட்டுள்ளன. அந்நிய முதலீட்டுக்கும் கொள்ளைக்குமான பெயரளவில் இருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் நீக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தில் விவாதிக்காமல், மந்திரிகளுக்கே கூடத் தெரியாமல் இதற்காக 'குடியரசு'த் தலைவர் அவசரச் சட்டமே பிறப்பித்துள்ளார். உதாரணமாக, நிலக்கரி, சுரங்கத் தொழிலில் 50% அன்னிய முதலீட்டுக்காக அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் இதற்கான மசோதா கொண்டுவரப்பட்டபோது, எதிர்ப்புகள் காரணமாக அரசு முடக்கி வைத்திருந்தது. இப்போது உலக வங்கியின் உத்திரவுப்படி, பாராளுமன்றத்துக்கே தெரிவிக்காமல் பாசிச முறையில் அவசரச் சட்டம் போடப்பட்டு, அன்னியக் கொள்ளைக்கு மேலும் அகலமாக கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளது. இதேபோல விமானப் போக்குவரத்தைத் தனியாருக்குத் தாரை வார்க்கவும் அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

நாட்டை அன்னிய வல்லரசுகளுக்குத் தாரைவார்க்கும் அதேசமயம் தொழிலாளர்களின் உரிமைகளைப்பறிக்கும் கருப்புச் சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன. ராமானுஜம் கமிட்டியின் பரிந்துரையின்படி தொழிற் தகராறு மற்றும் தொழிற்சங்க சட்டங்களைத் திருத்தியமைக்க அரசு முடிவு செய்துள்ளது. ராவ் அரசின் காபினெட் மந்திரிகளின் ஒப்புதல் பெற்ற நிலையில், பட்ஜெட் கூட்டத் தொடரில் அது நிறைவேற உள்ளது.


இப்புதிய சட்டத்தின்படி அந்நிய நிறுவனங்கள் எந்நேரமும் காரணமின்றி இந்தியத் தொழிலாளியை வேலையிலிருந்து விரட்ட முடியும். தமது ஆதாயத்துக்காக எப்போது வேண்டுமானாலும் உற்பத்தியை நிறுத்தி ஆலையை மூடிக் கொள்ள முடியும். தொழிலாளியோ தொழிற்சங்கமோ இது பற்றி வாய்திறக்கவே முடியாது. ஏகாதிபத்தியங்களின் கொள்ளைச் சுரண்டலுக்காக, வேலைக்கு உத்திரவாதம் அளிக்கும் அடிப்படை உரிமையைக்கூட தட்டிப் பறித்துக் கொள்ள காங்கிரசு துரோகிகள் கிளம்பியுள்ளனர்.

ஏற்கனவே உலக வங்கியின் உத்திரவுப்படி, விவசாயத்தையும் கிராமப்புறங்களையும் முற்றாகப் புறக்கணித்து வரும் ஆட்சியாளர்கள், இப்போது டங்கல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு விவசாயத்திற்காக மானியங்களைக் குறைத்து வயிற்றிலடிக்கக் கிளம்பியுள்ளனர். விவசாயத்துக்கு இலவசமாக அல்லது மானிய விலையில் மின்சாரம் வழங்குவதை தடுத்து நிறுத்தி, ஒரு யூனிட்டுக்க 50 பைசா மின்கட்டணம் வசூலிக்க அரசு முயற்சித்து வருகிறது. ஆறுகளிலிருந்து குழாய் மூலம் தண்ணீர் எடுக்கும் ஆற்றுப் பாசன விவசாயிகளுக்கு ஒரு அடி குழாய்க்கு ரூ. 3 வீதம் தண்டத் தீர்வை தற்போது விதிக்கப்பட்டு வருகிறது. இது அதிகரிக்கப்படுவது தவிர தொழில்துறையைப் போல, விவசாயத்துக்கும் வரி விதிக்க உத்தேசித்து வருகின்றனர். டங்கல் திட்டம் கையெழுத்தாகியுள்ள ஆரம்ப நிலையிலேயே இப்படியென்றால், இன்னும் விதை, உரம், பயிர் வகைகளுக்குக் காப்புரிமை வைத்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்தும் வல்லரசுகளின் இரும்புப்பிடி இறுகினால் இந்திய விவசாயம் என்னவாகும் என்று சொல்லத் தேவையில்லை.

நாட்டை மறுகாலனியாக்கும் இப் பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து, பாரதீய ஜனதா உட்பட எல்லா எதிர்க்கட்சிகளும் கண்ட ஆர்ப்பாட்டங்களை நடத்திவருகின்றன. பட்ஜெட் கூட்டத் தொடரின்போது பாராளுமன்றத்தின் முன் முற்றுகை மறியல் போராட்டம் நடத்தப் போவதாகவும் அவை அறிவித்துள்ளன. நாடு சுதந்திரமடைந்துவிட்டதாக கூறிக் கொண்டே, மறுபுறம் நாடு மறுகாலனியாகி விட்டது என்று போலிக் கம்யூனிஸ்டுகள் வெட்கமின்றி பசப்புகிறார்கள். நாட்டை மறு அடகு வைக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து பெருங்கூச்சல் போடும் எதிர்க்கட்சிகளிடம் இதற்கு மாற்றான கொள்கையோ, திட்டமோ கிடையாது. இன்னும் சொல்லப் போனால், தமது ஆட்சிக் காலத்தில் இதே கொள்கையைத்தான் அவர்கள் செயல்படுத்தி வந்துள்ளனர். இப்போது மக்களிடம் தனிமைப்படாமல் இருக்கவும், காங்கிரசு எதிர்ப்பைச் சாதகமாக்கிக் கொண்டு அரசியல் ஆதாயம் தேடவும் தான் விலைவாசி எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துகின்றனர். இத்தகைய மண்குதிரை ஓட்டுக் கட்சிகளை உழைக்கும் மக்கள் இனிமேலும் நம்ப முடியாது.

ஏகாதிபத்திய வல்லரசான அமெரிக்காவில் கூட வேலையற்றோருக்கு உதவிப்பணம், நலிந்தோருக்கு உணவு, மருத்துவ செலவு என சலுகைகள் - மானியங்கள் உண்டு. ஆனால் ஏழைநாடான இந்தியாவில் அதுகூட கிடையாது என்று உலகவங்கியின், டங்கல் ஒபபந்தத்தின் உத்திரவை நிறைவேற்ற கிளம்பிவிட்டது, ராவ் கும்பல். இடுப்புத் துணியை மட்டுமல்ல; கட்டிய கோவணத்தையும் பறித்துக் கொள்ளும் இத்தகைய அநியாயத்தை இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. எனவே, நாடு சூறையாடப்படுமுன்னே விழித்தெழுங்கள்! நாட்டு மக்களை பட்டினிச் சாவுக்குத் தள்ளுமுன்னே, மக்கள் விரோத - தேசவிரோத காங்கிரசு துரோகிகளைத் தூக்கியெறிய புரட்சிகர அமைப்புகளில் பெரும்படையாய்த் திரண்டெழுங்கள்!

● பாலன்





படிப்பகம்

www.padippakam.com

# புலி பீதியூட்டும் கழிசடை அரசியல்

**ஓட்டுக் கட்சி அரசியல் பொறுக்கிகள் அற்பத்தனமாகவும் மிகவும் மட்டரகமாகவும் புலிபீதியூட்டி பிழைப்பு நடத்துகின்றனர்.**

கடற்கரையோரங்களில் வெடிமருந்து பெட்டிகள் மிதந்து வந்ததாகவும், கைப்பற்றியதாகவும், குண்டுகள் வெடித்ததாகவும் செய்திகள் அண்மைக் காலமாக வந்து கொண்டிருக்கின்றன. இவை புலிகளின் நடமாட்டத்தைச் சுட்டிக்காட்டுவதாக கூடவே பிரச்சாரமும் நடக்கிறது. மேலும், புலிகளின் முக்கிய புள்ளிகள் தமிழகத்தில் உலவுவதாகவும், சிவராசன் - கிட்டு - தாணு இறந்த நாட்களில் புலிகளின் எதிரிகளைப் பழிதீர்க்க முயலுவதாகவும் வதந்திகளைப் பரப்பிக் கொண்டுள்ளனர். ஏன், சிவராசன் இறந்த நாள் வந்தபோது ராஜீவ் கொலை விசாரணை நடத்திவரும் நீதிபதிக்குக்கூட கூடுதல் பாதுகாப்புக் கொடுத்து பரபரப்பூட்டினார்கள். புலிகளிடமிருந்து மிரட்டல் வந்ததாகக் கூறி, ஜெயாவின் முன்னாள் அமைச்சர்கள் நடத்திய தஞ்சை நிகழ்ச்சியல் ஆளுநர் கலந்து கொள்வதும் ரத்து செய்யப்பட்டது.

ஆனால் இவையெல்லாம் இந்திய - தமிழக உளவுத் துறையினரால் திட்டமிட்டு நடத்தப்பட்ட சம்பவங்கள், பரப்பப்பட்ட வதந்திகள் என்பது வெளிச்சத்திற்கு வந்துவிட்டன. சென்னாரெட்டி அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதன் மூலம் ஜெயா, சென்னா மோதல், உறுதிப்படுத்தப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும் ஜெயாவை ஆட்சிக்கவிழ்ப்பு பீதியில் தொடர்ந்து வைத்திருப்பதற்காகவுமே உளவுத்துறை இப்படி தனது கைவரிசையைக் காட்டி வருகிறது. ஜெயாவும் சளைக்காமல் குடியரசு தினவிழாவில் தன்னைக் கொல்லவந்ததாக ஒருவரைக் காட்டி கூப்பாடு போட்டு லாவணி பாடினார்.

உளவுத் துறையினர் கிளப்பிவிட்ட புலி பீதி. தி.மு.க. வையும் உடைத்துள்ளது. அன்று வை.கோ.வை ஈழத்திற்கு ரகசியமாக அனுப்பிப் பேரம் பேசவைத்தார், கருணாநிதி. இன்று வை.கோ.வை கட்சியை விட்டு நீக்கி தி.மு.க வை உடைத்தார். இரண்டையுமே கருணாநிதி ''ரா'' ஆலோசனைப்படிதான் செய்தார். அன்றும், இன்றும் தனக்கு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி தனிச் செல்வாக்கையும் தலைமையையும் நிலைநாட்ட முயற்சிக்கிறார், வை.கோ.'' ஐயோ! என்னைக் கொல்ல புலிகள் சதி'' என்ற அலறல் ஜெயா, சுப்ரமணியசாமி வாழப்பாடி கும்பலுக்கு ஏதோ, ஒரு விதத்தில் பயன்பட்டது; ஆனால் பாவம் கருணாநிதிக்கோ கட்சியையே உடைத்து, தலைவலியாக்கிவிட்டது. இதேபோல் பிழைப்புக்காக, முற்போக்கு சவடால்களுக்காக புலிகள் விவகாரத்தைக் கையிலெடுத்த ராமதாசிற்கும் அது தலைவலி தந்துள்ளது. காங்கிரசு மற்றும் உளவுத் துறைகளோடு நெருக்கமுள்ள பிழைப்புவாதி பண்ருட்டி ராமச்சந்திரன், ராமதாசின் புலி. ஆதரவு நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டியும் தீவிரவாத முத்திரை குத்தியும் பா.ம.கவை உடைத்துக் கொண்டு போய்விட்டார்.

★☆★

ஊர் வாய்க்கு மென்னக் கிடைத்த அவல் போலாகிவிட்டது புலிகள் பிரச்சினை. இன்னார் என்றில்லாமல், இன்ன விசயம் என்றில்லாமல் அரசியல் கழிசடைகள் வசதிக்கேற்பவும் அற்பத்தனமாகவும் மிகவும் மட்டரகமாகவும் புலி பீதியூட்டி அரசியல் நடத்துவதை என்னவென்று சொல்வது? வார்த்தையே இல்லை!

ஒருவர் பாக்கியில்லை; ராஜீவ், எம்.ஜி.ஆர். ஜெயலலிதா, கருணாநிதி, வாழப்பாடி ராமமூர்த்தி, சோ, சுப்ரமணியசாமி, பண்ருட்டி ராமச்சந்திரன், ராமகோபாலன், ஜனாகிருஷ்ணமூர்த்தி, சசிகலா, நடராஜன், ஆளுநர் சென்னாரெட்டி... என அரசியல் புல்லுருவிகள், அரசியல் அநாமதேயங்கள் எல்லாம் ''ஐயோ! என்னைக் கொல்ல புலிகள் சதி'' என அலறிவிட்டார்கள்; கிசுகிசுவை பரப்பிவிட்டார்கள். இதே புலிகளோடு முன்பு உறவாடி - ஊடுருவி அடுத்துக் கெடுத்தவர்களும், தமது அரசியல் ஆதாயத்திற்காக புலிகளை ஆதரித்தவர்களும், பயன்படுத்திக் கொண்டவர்களும்தான் இவர்களில் பலர்.

அரசின் தனிச்சிறப்பான பாதுகாப்பைப் பெறுவதற்காகவும் சிறப்பு அந்தஸ்து கருதியும் இப்படி அலறி கீழ்த்தரமாக நடந்து கொள்கிறவர்களும் இவர்களில் உண்டு. புலிகளை உண்மையில் எதிர்க்கும் ராமகோபாலன், சோ போன்று உயிர் பயத்தால் அலறுபவர்களும் உண்டு.

ஜெயா - காங்கிரசு நாய்ச்சண்டையில் புலிபீதியூட்டுவது ஒரு முக்கியப் பொருளாக உள்ளது. ராஜீவ் கொலைக்குப்பின் ஏறக்குறைய ஒரு வருட காலம் புலி பீதியூட்டுவது ஜெயாவிற்கு பல பிரச்சனைகளுக்கு வடிகாலாக இருந்தது. மக்கள் மீதான விலையேற்ற சுமைகள் - அடக்குமுறைகள், ஜெயா கும்பலின் ஊழல்கள், ஊதாரி செலவுகள், அதிகார முறைகேடுகள், ரௌடித்தனங்கள், எதிர்க்கட்சியினர் ஜனநாயக முற்போக்கு அமைப்பினர் அல்லாமல் அப்பாவிகளையும் புலிகள் - புலி ஆதரவாளர்கள் என முத்திரைக் குத்தி பாய்ந்து குதறிய கொடுமை முதலிய அனைத்துமே புலிபீதியூட்டிய அரசியலில் அமிழ்ந்து போயின.

எந்த அளவிற்கு ஜெயா கீழ்த்தரமாகவும், கோரமாகவும் இறங்கி புலி பீதி அரசியலைப் பயன்படுத்தினாரோ, அந்த அளவிற்கு 'பூமராங்'போல் அது காங்கிரசு கும்பலால் திருப்பிவிடப்படுகிறது. புலிபீதி அரசியலை ஜெயா தொடர்ந்து எடுத்துச் செல்ல முடியாத அரசியல் சூழ்நிலை, தனது ஊழல் போன்ற நடவடிக்கையால் அம்பலப்பட்டு தனிமைப்பட்டு வந்தது, புலிகளின் பழிவாங்கும் நடவடிக்கைப் பற்றிய உயிர் மீதான பயம் ஆகிய காரணங்களால் ஜெயா புலிகள் மீதான தீவிர நடவடிக்கையை படிப்படியாக குறைத்துக் கொண்டார். இது ஜெயாவின் 'எதிர்ப்பாளர்களாக மாறிய சோ, சுப்பிரமணியசாமி, வாழப்பாடி - மூப்பனார் கும்பலுக்கு சாதகமாகிப் போனது.

புலிகளுக்காக கடற்கரையோரத்தில் அத்தியாவசியப் பொருட்கள் கடத்தப்படுவது, புலிகள் சிறைகளிலிருந்து தப்பித்தவை, புலி ஆதரவாளர்களின் குண்டு வெடிப்புகள் - வாழ்க கோஷங்கள், ஈழ ஆதரவு இயக்கங்களில் வந்த புலி ஆதரவு குரல்கள் - தானு, பிரபாகரன் படங்கள், கிட்டு கப்பல் முற்றுகை விவகாரம் முதலியவற்றை ஆதாரமாகக் காட்டி ''புலிகள், புலிகள்'' என கூச்சலிட்






படிப்பகம்

www.padippakam.com

டது. சோ, சாமி, வாழப்பாடி கும்பல். புலிகளை ஜெயாவுடன் தொடர்புபடுத்தியும் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டதாகவும் கூச்சலிட்டே ஜெயாவை வெகுநாளைக்கு ஆட்சிக் கவிழ்ப்பு பீதியில் வைத்தார்கள்.

ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கைதிகளின் சிறை உரிமைப் போராட்டம், மதுரையில் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் கிரிமினல்களால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம், ஈழ அகதிகளில் சில சிறு குற்றவாளிகள், தமிழக கிரிமினல்களின் கொலை - கடத்தல் ஆகியவற்றை எல்லாம் வரைமுறையே இல்லாமல் புலிசாயம் பூசியது இவர்களின் மட்டரகமான அரசியலுக்கு உதாரணங்கள். சந்தனக் கடத்தல் வீரப்பன், அஸ்ஸாம், காஷ்மீர் போராளிகள், ஆந்திர நக்சல் பாரி போராளிகள், பஞ்சாப் தீவிரவாதிகள் ஆகியோருடன் புலிகளுக்கு ஆயுதம் - பயற்சி ரீதியாக தொடர்பிருப்பதாக உளவுத் துறையின் புளுகுகளையெல்லாம் பெரிதாக்கி ஆதாயம் தேடமுயன்றது, காங்கிரசுக் கும்பல்.

அண்மையில் பாகிஸ்தானின் உளவுத் துறையான ஐ.எஸ்.ஐ.யும் புலிகளும் சேர்ந்து இந்தியாவில் ஊடுருவி, சதிவேலைகளில் ஈடுபடுவதாக புரளி கிளப்பி விட்டனர். எப்படி இங்கு நடக்கும் ஆயுத மோதலுக்கு எல்லாம் பாகிஸ்தானின் தூண்டுதல்-கைவரிசை என (தற்போது ஹைதராபாத்தில் நடந்த போலீசு, இராணுவத்தினருக்கிடையேயான ஆயுத மோதல்களையும் இப்படித்தான் சித்தரிக்கிறார்கள்) சித்தரிக்கிறார்களோ, அதுபோல் புலிகள் விசயத்தையும் கீழ்த்தரமாகப் பயன்படுத்துகிறார்கள், தமிழக - இந்தியக் கழிசடைகள்.

யூகங்கள், சந்தேகங்கள், சில நடப்பு சம்பவங்களைக் கொண்டு, புலிகளை மையமாக வைத்து இக்கழிசடைகள் தங்களுக்குள் தாக்கி, சந்திசிரித்துப் போவதை பார்த்தால் வேடிக்கையாகவும் இருக்கிறது. ஜெயாவுக்கும் புலிகளுக்கும் கள்ள உறவு இருப்பதாகவும் ரகசியமாக நடந்த புலிகளுடனான பேச்சு வார்த்தை-சந்திப்பிற்கு தம்மிடம் ஆதாரம் இருப்பதாகவும் புரளி கிளப்பிவிட்டார், சாமி. தற்போது, ''ராசீவ் கொலை செய்தி ஜெயாவுக்கு முன்பே தெரியும்; அதனால்தான் திருப்பெரும்புதூர் - தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை'' என்று கத்திக் கொண்டிருக்கிறார். கடற்கரையோர கடத்தலில் ஜெயா கும்பலுக்கு கணிசமான பணம் புலிகள் தருவதாகவெல்லாம் செய்தி பரப்பினார்கள். இவற்றையெல்லாம் காங்கிரசு ஆமோதித்ததோடு சவாண் போன்ற அமைச்சர்கள் மூலமாக தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சரியில்லை என்று பலவாறாக நெருக்கடி கொடுத்தது. ஜெயாவோ பதிலுக்கு சவாண் தன்னிடம் நேரில் சந்தித்தபோது புலிகளுடன் சமாதானமாக நல்லுறவு வைத்துக்கொள்ளும்படி அறிவுரை வழங்கியதாக வதந்தி கிளப்பினார்.

ராசீவ் - எம்.ஜி.ஆர். கும்பல் இந்திய பிராந்திய மேலாதிக்க நோக்கில் இலங்கையைப் பணிய வைப்பதற்காக முதலில் ஈழப் போராளி அமைப்புகளுக்கு பயிற்சியும் ஆயுத உதவியும் அளித்து தூண்டிப் பயன்படுத்திக் கொண்டனர். பின்னர் புலிகள் எதிரியானதும் புலிகளுக்கு எதிரான அமைப்பை ஊக்குவித்தும் இலங்கை அரசோடு சேர்ந்து நேரடியாகவும் இந்திய அரசு புலிகளை ஒடுக்கியது. புலிகளுடன் பேரம் நடத்தி ஒரு பொம்மையாட்சியை நிறுவவும் முயன்றனர். எம்.ஜி.ஆரின் இச்சுயநல அரசியலுக்கு எடுபிடியாக திறமையான தரகராக செயல்பட்டவர்தான் பண்ருட்டி ராமச்சந்திரன். புலிவாலைப் பிடித்தே அரசியல் நடத்திவந்த கருணாநிதி ஆட்சிக்கு வந்ததும் ராஜீவுடன் சேர்ந்து புலிகளை ஒரு பேரத்திற்குப் பணியவைக்கவே பாடுபட்டார்.

பாசிச ராஜீவ் கொலைக்கு முன்பு தமிழகத்தில் இருந்த புலிகள் ஆதரவு அரசியலில் தன்னையும் இணைத்துக் கொண்டு புலிகளை ஆதரித்தார், ஜெயலலிதா. வாழப்பாடி - மூப்பனார் கும்பலும் மௌனமாக இருந்தனரே ஒழிய ஈழம் மற்றும் புலிகளின் தீவிர எதிர்ப்பாளராகக் காட்டி தமிழக மக்களின் ஓட்டை இழக்க விரும்பவில்லை. மேலும் ராஜீவ் - மூப்பனார் - வாழப்பாடி, எம்.ஜி.ஆர், கருணாநிதி, ஜெயலலிதா எல்லோரும் தமது கட்சி அணிகள் - பிரமுகர்கள் புலிகளுடன் உறவு வைத்துக் கொண்டதையும், அவர்களது புலிகள் ஆதரவு நடவடிக்கைகளையும் ஓட்டு லாபம் கருதி தடுக்காமல் பயன்படுத்திக் கொண்டனர். ஆனால், பிறகு எல்லோரும் ''புலிகள் கொல்ல சதி'' கூச்சல் போட்டதோடு; அதற்கு வெட்கப்படவுமில்லை.

முன்பு உளவுத்துறை ''ரா''வைப் பயன்படுத்தி ஈழப் போராளிகளைப் பிளக்க, பயிற்சிக் கொடுத்து தூண்டிவிட, பேரம்பேச முயன்று ராசீவ் ஆதாயமடைந்தார். இன்று வெறுமனே புலி பீதியூட்டி எதிர்க்கட்சிகளைப் பிளக்க, ஆட்சிக் கவிழ்க்க, மக்கள் பிரச்சினைகளிலிருந்து திசை திருப்ப அதே ''ரா''வைப் பயன்படுத்துகிறார், நரசிம்மராவ். ராசீவிற்கும் ராவ்விற்கும் தமிழக அரசியல் கழிசடைகள், தமது கரத்தையும் கழுத்தையும் கொடுக்கத் தயங்குவதே இல்லை என நிரூபித்து வருகிறார்கள்.

இன்று புலி பீதியூட்டி மயிர் பிடித்து மோதிக் கொள்ளும் ஜெயாவும் காங்கிரசும் தமது கூட்டு நீடித்தவரை புலி பீதியூட்டியே தி.மு.க., பா.ம.க., தமிழின - புரட்சிகர அமைப்புகள் மீது பாய்ந்தார்கள். இன்னும் சொல்லப்போனால், மரகதம் சந்திரசேகர், கொடிக்கரை கடத்தல் புள்ளி சண்முகம் போன்ற சில காங்கிரசுக்காரர்களுக்குப் புலிகளுடன் தொடர்புடையதாக செய்திகளும் சில ஆதாரங்களும் வெளிவந்த போதும் இருவரும் கைகோர்த்துக் கொண்டு இருட்டடிப்பு செய்தார்கள். புலிகளை ஆதரிக்கிறோமா, எதிர்க்கிறோமா; புலிகள் இருக்கிறார்களா, இல்லையா என்பதெல்லாம் இக்கும்பலுக்கு கவலையில்லை; தமது பதவி - அதிகாரப் போட்டிக்குப் பயன்படுகிறதா என்பதுதான் இவர்களது அளவுகோள்.




பெருகிவரும் அரசியல் - பொருளாதார நெருக்கடி, ஓட்டுப் பொருக்கிகளை நாளும் அச்சுறுத்தி விரட்டிக் கொண்டிருக்கிறது. பொறுக்கி, கவர்ச்சி, கிரிமினல் அரசியலின் ஏகோபித்த பிரதிநிதிகளாக இருந்தாலும் தமக்குள்ளான போட்டிக்கும், மக்களை ஏய்க்கவும் இவர்களுக்குப் புதிய, புதிய பொருள்கள் - விசயங்கள்



படிப்பகம்

www.padippakam.com

- முறைகள் தேவைப்படுகின்றன. சந்தைப் போட்டியில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள ''குமுதம்'' பத்திரிக்கை பரப்பும் ஆபாச - சீரழிவுக் கலாச்சாரத்தின் எல்லை எப்படி விரிந்துகொண்டே போகிறதோ, அப்படி இப்பொறுக்கி - கவர்ச்சி அரசியலின் வரம்பும் அறுதியிட முடியாமல் உள்ளது. புலி பீதியூட்டி அரசியல்வாதிகள் ஆதாயம் தேடுவது, பொறுக்கி - கவர்ச்சி அரசியலின் ஒரு அம்சமே ஆகும். சேலை, வேட்டி, குடை கொடுத்து நடிகை, நடிகர்களை காட்டி இறந்த தலைவர்கள்களைக் காட்டி சோசலிசம் - புரட்சி வார்த்தைகள் கவர்ச்சி அரசியல் நடத்தும் கழிசடைகளுக்கு புலிகள் பெயர், ''தீவிரவாதம்'', ''கொல்லசதி'' போன்றவைகளும் அவற்றில் ஒன்றாகி விட்டன.

**சந்தைப் போட்டியில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள ''குமுதம்'' பத்திரிக்கை பரப்பும் ஆபாச-சீரழிவுக் கலாச்சாரத்தின் எல்லையைப் போல் இப்பொறுக்கி கவர்ச்சி அரசியலின் வரம்பும் விரிந்து கொண்டே போகிறது.**

இப்படி புலி எதிர்ப்பு கும்பல் மட்டுமல்ல; புலி ஆதரவு அமைப்புகளும் இத்தகைய கவர்ச்சி அரசியலில்தான் வேறு கோணத்தில் - வேறு முறையில் கவனம் செலுத்துகின்றன. ஒரு பிரிவினர் குண்டு வைத்தே மக்களை கவர கனவு காணுகிறார்கள். இன்னொரு பிரிவினர் பிரபாகரன் படத்தை, புலிகளின் ராணுவ வெற்றிகளை, கூட்டு இயக்கங்களையே முன்னிறுத்தி மக்களைத் திரட்ட முயலுகிறார்கள். இவர்கள் இவற்றிற்கே கவனம் செலுத்துவதன் மூலமும் ராசீவ் கொலை - ஜெயாவின் தீவிர ஒடுக்குமுறை ஓய்ந்ததற்குப் பின்னரே அதுவும் சுணக்கமான எதிர்ப்புகளை காட்டி வருவதன் மூலமும் ஜெயா, சோ, சுப்ரமணியசாமி, வாழப்பாடி - காங்கிரசு கும்பலின் புலி பீதி அரசியலுக்கு ஒருவிதத்தில் உடந்தையாகி நிற்கிறார்கள். மாறாக கவர்ச்சி - கழிசடை அரசியலைத் தீவிரமாக எதிர்த்து அம்பலப்படுத்துவது. உறுதியாகப் போராடுவது மூலம்தான் மேற்படி கழிசடை கும்பலின் புலி பீதியூட்டும் வாய்களை அடைக்க முடியும்.

● ராசு

# பஞ்சாபில் போலீசின் பயங்கரவாத ஆட்சி

**சீக்கிய - பயங்கரவாதத்தை முறியடித்து விட்டதாகப் பாராட்டப்படும் பஞ்சாப் போலீசின் பயங்கரவாதம் எல்லை மீறிப் போய்விட்டது.**

கடுங்குளிர் சூழ்ந்த டிசம்பர் மாதம் மெதுவாக உதித்த கதிரவனின் மங்கிய ஒளியில், பஞ்சாபின் அமிர்தசரஸ் பொற்கோயில் மஞ்சள் கலந்த பொன்னொளியாய் மின்னிக் கொண்டிருந்தது. பொற்கோயிலிலிருந்து கல்லெறி தூரத்தில் இருந்த போலீசு நிலையக் கொட்டடியின் இரும்புக் கதவுகள் 'கிரீச்'சிட்டு திறந்தன. ஒரு வார காலமாக சித்திரவதைக்கு ஆளாகி, உடலெங்கும் ஊமைக்காயங்களின் வலி தாளாமல் கொட்டடியில் முனகிக் கொண்டிருந்த சுர்ஜித் கவுர் எனும் 50 வயதான தாய் மெதுவாக தலையை உயர்த்திப் பார்த்தார். ''வெளியே வாடி நாயே!'' என்று கதவைத் திறந்த போலீசுக்காரன் உறுமினான். தனக்கு விடுதலை கிடைத்திருக்குமோ அல்லது இன்று மீண்டும் சித்திரவதை தொடருமோ என்று எண்ணியவாறே பயந்தபடியே அந்தத் தாய் வெளியே வந்தார்.

திடீரென ஒரு போலீசுக்காரன் அவரைக் கீழே பிடித்துத் தள்ளினான். நான்கு போலீசுக்காரன்கள் அவரது கை-கால்களை அழுத்திப் பிடித்துக் கொண்டனர். போலீசாரால் அழைத்து வரப்பட்ட ஒருவன் பச்சை குத்தும் மின்சார எந்திரத்தை எடுத்துவந்து, அவரது நெற்றியில், ''நான் ஒரு திருடி'' என்று பச்சை குத்தினான். வலியால் சுர்ஜித் கவுர் அலற, போலீசு மிருகங்கள் கெக்கலி கொட்டிச் சிரித்து எக்காளமிட்டனர்.

''அடுத்த நாயை இழுத்துவா!'' என்று உத்திரவிட்டான், தலைமை போலீசுக்காரன். பர்மேஜீ, மகிந்தர் கவுர், குருதேவ் கவுர் என அடுத்தடுத்து கொட்டடியிலிருந்து பெண்கள் இழுத்து வரப்பட்டனர். அவர்கள் கதறக் கதற அவர்களது நெற்றியிலே ''நான் ஒரு திருடி'' என்ற வாசகங்கள் பச்சை குத்தப்பட்டது. காக்கிச்சட்டை காட்டு மிராண்டிகளின் எக்காளம் போலீசு நிலையமெங்கும் எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

சங்ரூர் மாவட்டத்தைச் சேர்ந்த இந்நான்கு பெண்களும் தரண்தரண் நகருக்குச் செல்லும் பொருட்டு அமிர்தசரஸ் பேருந்து நிலையத்தில் காத்திருந்தனர். இவர்களைப் ''பிக்பாக்கெட்'' திருடர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் டிசம்பர் 8-ம் நாளன்று போலீசார் கைது செய்து இழுத்துச் சென்றனர். நான்கு மாதங்களுக்கு முன்பு நடந்த ஒரு திருட்டை தாங்கள் தான் செய்தோம் என்று ஒப்புக் கொள்ளச் சொல்லி போலீசார் அவர்களைத் தாக்கினர். நாங்கள் நிரபராதிகள்; எந்த குற்றமும் செய்யவில்லை என்று அவர்கள் காலில் விழுந்து கெஞ்சிய போதிலும் போலீசார் ஏற்கவில்லை. சிறு திருட்டுகளில் ஈடுபடும் ''சான்சி'' எனும் நாடோடி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்களை முத்திரை குத்திய போலீசு, அவர்களைக் கொட்டடியில் தள்ளி நிர்வாணப்படுத்தி வதைத்தது. முழங்காலின் மீது ஒரு உருளையை வைத்து அதன் மீது நான்கு போலீசார் ஏறி மிதித்த சித்திரவதையால் பர்மேஜீயின் முழங்கால் மூட்டு நழுவிப் போனது. தண்ணீரை ஊற்றி பிட்டத்தில் தடியால் அடித்ததால் சுர்ஜித் கவுரின் இடுப்பு எலும்பு முறிந்து போனது. மகிந்தர் கவுரின் கைவிரல்கள் அசைக்க முடியாமல் ரணமாகியது. ஒரு வார காலம் தொடர்ச்சியாக நடந்த இக்கொடூரமான சித்திரவதைக்குப் பிறகு, வக்கிரம் பிடித்த போலீசு காட்டு மிராண்டிகள் அவர்களது நெற்றியிலே திருடி என பச்சை குத்தி அவமானப்படுத்தியுள்ளனர்.

பஞ்சாபி பெண்கள் தலையைச் சுற்றி ''துப்பட்டா'' அணியும் வழக்கத்தைச் சாதகமாக்கிக் கொண்டு அவர்களது நெற்றியை மறைத்து, சிறு திருட்டு வழக்கொன்றில் குற்றம் சாட்டி டிசம்பர் 16 அன்று அவர்களைக் கோர்ட்டிலே முன்னிலைப்படுத்தியது போலீசு. சித்திரவதையைப் பற்றி வெளியே சொன்னால் கொன்றுவிடுவோம் என்று போலீசார் அச்சுறுத்தியதால் பீதியடைந்த அப்பெண்கள் கோர்ட்டிலே ஊமையாகி தலைகுனிந்து நின்றனர். பிணையில் வெளிவந்து தமது சொந்தக் கிராமத்திற்குத் திரும்பிய அவர்கள் அவமானம் தாளாமல் விம்மினர்.

''எங்களை இப்படிக் கேவலமாக அவமானப்படுத்தியதைவிட சுட்டுக் கொன்றிருக்கலாம்'' என்று வேதனையில் குமுறினார் சுர்ஜித் கவுர். ''வாழ்நாள் முழுக்க எங்களை வெளியே தலைகாட்ட முடியாமல் அவமானப்படுத்திய அந்தக் கயவர்களைத் தூக்கிலிட வேண்டும்'' என்று கோபம் கொப்பளிக்க கூறினார் பர்மேஜீ.

அவர்களுக்கு ஆறுதல் கூறிய கிராம மக்கள், சங்ரூரிலுள்ள ஒரு வழக்க



படிப்பகம்

www.padippakam.com

றிஞரிடம் கூட்டிச் சென்று, இந்த அநியாயத்துக்கு எதிராக வழக்கு தொடருமாறு கோரினர். அவர், குருதர்ஷன் சிங் என்று முதுநிலை குற்றவியல் வழக்கறிஞர் மூலமாக உயர்நீதி மன்றத்தில் போலீசாருக்கு எதிராக வழக்கு தொடுத்தார். நீதி மன்றத்தில், ''இவர்கள் தாங்களாகவே பச்சை குத்திக் கொண்டு போலீசு துறை மீது அபாண்டமாகப் பழி சுமத்துகிறார்கள்'' என்று போலீசார் வெட்கமின்றி புளுகினர். அதன் பிறகு, ''திருடியபோது பிடிபட்ட இவர்களை பொது மக்களே இப்படி பச்சை குத்தி அவமானப் படுத்தியுள்ளனர்'' என்ற அண்டப் புளுகை அவிழ்த்துவிட்டனர். போலீசாரின் வாதங்கள் வழக்கு மன்றத்தில் அம்பலப்பட்டுப் போன பிறகு, பாதிக்கப்பட்ட இப்பெண்களுக்கு நிவாரணம் அளிக்குமாறும், பச்சை குத்தியதை அழிக்க 'பிளாஸ்டிக்' அறுவை சிகிச்சைக்கு நிதியளிக்குமாறும் மாநில அரசுக்கு உயர்நீதி மன்றம் உத்திரவிட்டுள்ளது.



''நான் திருடி'' என்று நெற்றியிலே போலீசாரால் பச்சைக் குத்தி அவமானப்படுத்தப் பட்ட அப்பாவிப் பெண்கள்.

சீக்கிய பயங்கரவாதத்தின் முதுகெலும்பை முறித்து விட்டதாக அரசாலும் பத்திரிகைகளாலும் பாராட்டப்படும் பஞ்சாப் போலீசார், அதை சாதகமாக்கிக் கொண்டு கணக்கற்ற காட்டுமிராண்டித் தனங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். பத்திரிகைகளாலும் ஓட்டுக்கட்சிகளாலும் இருட்டடிப்பு செய்யப்படும் இக்கொடூரங்கள் இப்போது மெதுவாகக் கசியத் தொடங்கியுள்ளன. அப்பாவிப் பெண்களின் நெற்றியிலே பச்சை குத்திய காட்டுமிராண்டித்தனம், விதி விலக்கான சம்பவம் அல்ல; இப்படிப் பஞ்சாப் போலீசின் அட்டூழியங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாகப் பெருத்துப் போய்விட்டன.

சந்த்ரூ - பூலாவதி; பிழைப்புக்காக ராஜஸ்தானிலிருந்து பஞ்சாபில் குடியேறிய கூலித் தொழிலாளிக் குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் கடந்த டிசம்பர் 2-ம் நாளன்று, கொலை வழக்கொன்றில் சம்பந்தப்பட்டிருப்பதாக பொய் குற்றம் சாட்டி பூலாவதி - சந்த்ரூ உட்பட அவர்களது மொத்தக் குடும்பத்தையுமே கைது செய்து மாலவுட் போலீசார் கொட்டடியில் அடைத்தனர். அவர்களை நிர்வாணப்படுத்தி தலைகீழாகக் கட்டி தொங்கவிட்டு சித்திரவதை செய்த போலீசார், சட்ட விரோதமாக ஒரு மாத காலம் கொட்டடியில் அடைத்து வைத்து பூலாவ

## வழக்கறிஞர்களுக்கு நேர்ந்த கதி!

''போலீசார் எதையும் செய்வார்கள் என்பதை மறந்து விட்டீர்களா? இந்த வழக்கை எடுத்துக் கொண்டு ஆபத்தை விலைக்கு வாங்காதீர்கள் என்று என் நண்பர்கள் என்னை எச்சரித்தனர். இருப்பினும் நீதிக்காக இந்த வழக்கில் நான் துணிவோடு வாதாடினேன்'' என்கிறார், பஞ்சாபின் முதுநிலை வழக்கறிஞர்களில் ஒருவரான குருதர்ஷன்சிங். இவர், போலீசாரால் பச்சை குத்தி அவமானப்படுத்தப்பட்ட அப்பாவிப் பெண்களின் சார்பாக வாதாடும் வழக்கறிஞர் ஆவார். தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு சிறை - சித்திரவதைகளுக்கு ஆளாகும் அப்பாவிகளின் சார்பில் வாதாடுவோரும், போலீசு அட்டூழியங்களுக்கு எதிராக தொடுக்கப்படும் வழக்குகளை நடத்தும் வழக்கறிஞர்களும் போலீசாரால் மிரட்டப் படுவதென்பது பஞ்சாபில் அன்றாட நடவடிக்கையாகிவிட்டது. இது, நாடெங்குமுள்ள போலீசார் பின்பற்றும் கிரிமினல் உத்திதான் என்றாலும், பஞ்சாபின் நிலைமையோ வேறானது

★ ஜலந்தர் நகரில் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்த ஜக்விந்தர் சிங், 1992-ம் ஆண்டு செப். 24-ந் தேதியன்று கபூர்தலா போலீசாரால் நள்ளிரவில் இழுத்துச் செல்லப்பட்டார். இன்று வரை அவர் எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. அவரைக் கோர்ட்டில் முன்னிலைப்படுத்தக் கோரி பஞ்சாப் வழக்கறிஞர்கள் ஒரு மாத காலம் போராடியும்கூட போலீசார் அசைந்து கொடுக்கவில்லை. அவரை விசாரித்து விடுதலை செய்துவிட்டதாக புளுகி வருகிறது, போலீசு.

★ 1992, டிசம்பர் 26-ம் நாள் போலீசு நிலையத்துக்குச் சென்ற, பதிந்தா நகரைச் சேர்ந்த மான்சியா என்ற வழக்கறிஞர் இன்று வரை வீடு திரும்பவில்லை.

★ தனது கட்சிக்காரர்களின் வழக்கை முன்னிட்டு ரோபார் போலீசு நிலையத்துக்கு 1993, ஜனவரி 25-ந் தேதியன்று இரவு 9 மணிக்கு தனது காரில் சென்ற வழக்கறிஞர் குல்வந்த் சிங் இன்று வரை காணவில்லை. காரில் அவருடன் சென்ற அவரது மனைவியும் ஒன்றரை வயது மகனும் என்னவானார்கள் என்றும் தெரியவில்லை.

கடந்த நான்காண்டுகளில் 10-க்கும் மேலான வழக்கறிஞர்கள் இவ்வாறு மர்மமான முறையில் காணாமல் போயுள்ளனர். ''வழக்கறிஞர்களை இரகசியமாகக் கடத்திச் சென்று கொன்றுவிடுவதன் மூலம் அவர்கள் மத்தியில் பயபீதியை உருவாக்குவது; போலீசு அட்டூழியங்களுக்கு எதிராக கோர்ட்டில் வழக்காட முடியாதபடி அச்சுறுத்துவது என்பதே பஞ்சாப் போலீசாரின் காட்டு மிராண்டித் தனமான நடவடிக்கையாக உள்ளது என்கிறார், பஞ்சாப் மனித உரிமைக் கழகத் தலைவரும், ஓய்வு பெற்ற நீதிபதியுமான அஜித் சிங் பெயின்ஸ். 1992-ம் ஆண்டில் இவரும் பயங்கரவாத ''தடா'' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, கை விலங்கிட்டு கொடுமை படுத்தப்பட்டார். அரசு பயங்கரவாத அடக்குமுறை தொடரும் பஞ்சாபில் நீதிபதிக்கே இந்த கதி என்றால், வழக்கறிஞர்களின் கதியைப் பற்றி விவரிக்க வேண்டியதில்லை.


படிப்பகம்

www.padippakam.com





**போலீசின் கும்பல் கற்பழிப்பு - சித்திரவதைக்கு ஆளாகி உருக்குலைந்த பூலாவதி - தனது குடும்பத்தாருடன்; உள்ளே அவரது சகோதரி சந்த்ரூ.**

தியை தினமும் கும்பலாக கற்பழித்துள்ளனர். 3 மாத கர்ப்பிணியான பூலாவதிக்கு இப்பாலியல் வன்முறையால் கருச்சிதைவு ஏற்பட்ட து. ஆனாலும் அவர்களை விடுவிக்கவில்லை. இதைப்பற்றி வெளியே சொல்லாமல் பய பீதியூட்டுவதற்காக சித்திரவதையைத் தொடர்ந்தனர். பூலாவதியின் கணவர் மற்றும் குழந்தைகளை நிர்வாணமாக குப்புறப் படுக்க வைத்து அவர்கள் மீது நாற்காலிகளைப் போட்டுக் கொண்டு போலீசார் கும்பலாக ஏறி உட்கார்ந்து மிதித்தனர். உடலெங்கும் ரணமாகிக் கிடந்த அவர்களுக்கு ''உருளை'' சித்திரவதையும் நடந்தது. பாலியல் வன்முறைக்கு ஆளான பூலாவதியின் உடல் நிலை மோசமடையவே, பீதியடைந்த போலீசார், அவரையும் அவரது சகோதரி சந்த்ரூவையும் மட்டும் விடுவித்து, கணவரையும் குழந்தைகளையும் தொடர்ந்து கொட்டடியில் அடைத்து வதைத்தனர்.

பூலாவதிக்கு நேர்ந்த கொடூரத்தைக் கண்டு அதிர்ச்சியடைந்த கிராம மக்கள், அவர் உயர்நீதி மன்றத்தில் முறையிட உதவினர். அதன் பிறகே இக்கொடூரம் வெளியுலகுக்குத் தெரிய வந்தது. ''பூலாவதிக்கு நேர்ந்த கொடூரத்தை அறிந்ததும் எனது முதுகெலும்பே சில்லிட்டு நடுங்கியது. எனது 25 ஆண்டு கால வழக்கறிஞர் பணியில் இப்படியொரு பயங்கரத்தை நான் கேள்விப்பட்டதேயில்லை'' என்கிறார் உயர்நீதிமன்ற முது நிலை வழக்கறிஞரான ரேணு சர்மா. ''நாங்கள் கூலித் தொழிலாளிகள் தான். ஆனால் லட்ச ரூபாய் கொடுத்தாலும் இனிமேல் நாங்கள் பஞ்சாபுக்கு வரவே மாட்டோம்'' என்று பீதியுடன் கூறுகிறார் பூலாவதி.

'பயங்கரவாதத்தால் நிலை குலைந்து போன பஞ்சாப்பில் அமைதி தவழ்கிறது. காங்கிரசு ஆட்சி வந்த பிறகு, கட்டுமானப் பணிகளில் போலீசார் ஈடுபட்டு மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர். அச்சம் குடிகொண்டிருந்த பஞ்சாபியர்களிடம் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் பூத்துக் குலுங்குகிறது' என்று 'தேசியப்' பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதின. அத்தனையும் கடைந்தெடுத்த பொய் என்பதை பஞ்சாபில் தொடரும் போலீசுக் காட்டுமிராண்டித்தனங்கள் நிரூபித்துக் காட்டிவிட்டன.

''பஞ்சாபில் போலீசு ராஜ்ஜியம் தான் நிலவுகிறது. கடத்தல், கற்பழிப்பு, மிருகத்தனமான சித்திரவதை, அறிவிக்கப்படாத பத்திரிகை தணிக்கை முறை முதலியன போலீசாரின் அன்றாட நடவடிக்கைகளாகி விட்டன. முன்பு பயங்கரவாத ''தடா'' சட்டத்தின் பேரில் இந்த அட்டூழியங்களைச் செய்து வந்தனர். இப்போது பகிரங்கமாகவே செய்யத் துணிந்துவிட்டனர்'' என்றார் பஞ்சாப் மனித உரிமைக் கழகத் தலைவரான முன்னாள் நீதிபதி அஜித் சிங் பெயின்ஸ்.

பஞ்சாபில் தலை விரித்தாடும் அரசு பயங்கரவாத வெறியாட்டத்தையும், மனித உரிமை மீறலையும் சாதகமாக்கிக் கொண்டு, இந்தியா மீது அரசியல், பொருளாதாரச் சுமைகளைத் திணிக்க அமெரிக்க வல்லரசு முயற்சிக்கிறது. காஷ்மீர் விவகாரத்தைப் போலவே, பஞ்சாபிலும் தலையிட்டு, மனித உரிமை மீறல் விவகாரத்தை ஒரு ஆயுதமாக்கிக் கொண்டு இந்தியாவை மிரட்டிப் பணிய வைக்க முயற்சிக்கிறது. அண்மையில் அமெரிக்க அதிபர் கிளிண்டன், சீக்கியர்களின் மனித உரிமை பற்றிப் பேசியதற்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரசுப் பெருச்சாளிகள் டெல்லியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடகமாடுவதன் மூலம், காங்கிரசு பெருச்சாளிகள் தமது பயங்கரவாதக் கொடூரங்களை மறைத்துவிட முடியாது. ஏகாதிபத்திய எதிர்ப்பையும் மனித உரிமை மீறலையும் சேர்த்து குழப்பி ஆதாயமடைவதை நாட்டு மக்கள் அனுமதிக்கவும் முடியாது.

பெருகிவரும் போலீசு கற்பழிப்புகளும், கொட்டடிக் கொலைகளும், போலீசு எந்திரம் பாசிச முறையில் கட்டியமைத்து பயிற்றுவிக்கப் பட்டுள்ளதையே நிரூபித்துக் காட்டுகின்றன. இராணுவ ஆட்சிக்குப் பதிலாக பஞ்சாபிலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி வந்தாலும் அதன் பாசிசத் தன்மை ஒரு போதும் மாறி விடாது; ஜனநாயகம் - மனித உரிமைகளை மதித்து நடக்கவும் செய்யாது. அதே சமயம் பஞ்சாப் மக்களும் இப்படியே மவுனமாகி அடங்கிப் போய்விட மாட்டார்கள். போலீசு கும்பலின் பயங்கரவாத அட்டூழியங்களுக்கு எதிராக குமுறிக் கொண்டிருக்கும் அவர்கள் விரைவிலேயே பெரும்படையாய்த் திரண்டெழுவார்கள். ''நான் ஒரு காமுகன்'', ''நான் ஒரு கொலைகாரன்'', ''நான் ஒரு காட்டுமிராண்டி'' என போலீசாரின் நெற்றியிலே பச்சை குத்தி தமது அவமானத்துக்குப் பழி தீர்ப்பார்கள்.

★ மனோகரன்


''புதிய ஜனநாயகம்'' பற்றிய
அறிக்கை
4-வது பாரம் (8-ம் பிரிவுப்படி)

| | | |
|---|---|---|
| 1. | வெளியிடும் இடம் | - சென்னை |
| 2. | வெளியிடும் காலம் | - மாதம் இருமுறை |
| 3. | அச்சிடுபவர் | - இரா. சண்முகநாதன் |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - எழில் பிரிண்டர்ஸ், 321, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024 |
| 4. | வெளியிடுபவர் | - இரா. சண்முகநாதன் |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. |
| 5. | ஆசிரியர் | - இரா. சண்முகநாதன் |
| | தேசிய இனம் | - தமிழர் |
| | முகவரி | - 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. |
| 6. | உரிமையாளர் | - இரா. சண்முகநாதன் |
| | தேசிய இனம் | - தமிழர். |
| | முகவரி | - 4, சாமியார் தோட்டம், ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. |

இரா. சண்முகநாதனாகிய நான் மேற்கூறிய தகவல்கள் அனைத்தும் உண்மையே என இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

1.3.94 (ஒப்பம்) இரா. சண்முகநாதன்
வெளியிடுபவர்.




படிப்பகம்

www.padippakam.com

# பஞ்சாபில் மறைக்கப்பட்ட பயங்கரவாதக் கொடூரங்கள்

அப்பாவிப் பெண்களைப் பிடித்து கும்பலாகக் கற்பழிப்பது, சித்திரவதை செய்வது, பச்சை குத்தி அவமானப்படுத்துவது முதலான பஞ்சாப் போலீசாரின் வெறியாட்டங்கள் மட்டுமே இப்போது வெளியுலகுக்குத் தெரிய வந்துள்ளது. ஆனால் வெளியே தெரியாமல் மறைக்கப்பட்ட பயங்கரவாதக் கொடூரங்கள் கணக்கற்றவை. மனித உரிமைக் கழகத்தினரின் முயற்சியால் அவற்றில் ஒரு சில வழக்குகள் மெதுவாக கசியத் தொடங்கியுள்ளன.

★ மன்ஜித் கவுர் - 41 வயதான விதவை. அவரது மகன் பாபர் கல்சா எனும் தீவிரவாத இயக்கத்தின் ஆதரவாளர். தேடுதல் வேட்டைக்குப் பிறகு அவர் தலைமறைவாகிவிட்டார். கூலித் தொழிலாளியாக ராட் மஜ்ரா கிராமத்தில் ஒரு சிறிய குடிசையில் மன்ஜித் கவுர் வாழ்ந்து வருகிறார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நள்ளிரவில் திடீரென வந்த போலீசார் அவரது கட்டிலருகே 12 கட்டில்களைப் போட்டு படுத்துக் கொண்டனர். அவமானத்தாலும் அச்சத்தாலும் மன்ஜித் கவுர் அலற, இந்த அநியாயத்துக்கு எதிராக ஊரே திரண்ட போது, ரோபார் மாவட்ட போலீசு சூப்பிரண்டு, "அவளுடைய மகனை என்னிடம் ஒப்படையுங்கள், உடனே போலீசாரை வெளியேறச் சொல்கிறேன்; இல்லையேல் இந்த இரவு விளையாட்டு தொடரும்" என்று திமிராகக் கொக்கரித்துள்ளார்.

★ ராஜிந்தர் கவுர் - 30 வயதான கர்ப்பிணிப் பெண். அவரது கணவர் தீவிரவாதி என்ற சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வருவதால் ஈராண்டுகளுக்கு முன்பு தலைமறைவாகி விட்டார். ராஜிந்தர் கவுர் கர்ப்பமாகியுள்ளதைச் சாக்கிட்டு "உன்னுடைய கணவன் எங்கே?" என்று கடந்த ஆண்டில் அடிக்கடி விசாரித்து வந்த போலீசார், கடந்த செப்டம்பரில் ஒரு நாள் நள்ளிரவில் பொது மக்கள் முன்னிலையில் அவரை மிருகத்தனமாக அடித்து இழுத்துச் சென்றனர். பின்னர் அவரை நிர்வாணப்படுத்தி ஒரு சாக்கு மூட்டையில் கட்டி, அக்கடுங் குளிர் வேளையில் சிரிந் ஆற்றினுள் மூன்று மணி நேரத்துக்கு தொடர்ந்து முக்கி எடுத்து தடியால் அடித்தனர். இக்காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்து உள்ளூர் மக்களும் சில வழக்கறிஞர்களும் போலீசு நிலையத்தில் முறையிட்ட போது "நாங்கள் இப்படிச் செய்யவேயில்லை; வேறு மாவட்டத்தைச் சேர்ந்த போலீசார் செய்திருக்கக்கூடும்" என்று ரோபார் மாவட்டப் போலீசார் கூசாமல் புளுகினர்.

★ கடந்த நவம்பரில் தரண்தரணிலுள்ள மருத்துவமனைக்கு துப்பாக்கிக் குண்டுக் காயங்களுடன் இரண்டு பிணங்களைக் கொண்டுவந்த போலீசு இன்ஸ்பெக்டர் சீதாராம், அவற்றைப் பிரேதப் பரிசோதனை செய்து அறிக்கை தருமாறு கோரினார். மருத்துவர்கள் அப்பிணங்களைச் சோதித்த போது, ஒருவருக்கு இன்னும் உயிர் ஊசலாடிக் கொண்டிருப்பதைக் கண்டனர். உடனே மாவட்டத் தலைமை மருத்துவமனைக்குக் கொண்டு சென்று அவரைக் காப்பாற்ற முயற்சித்தனர். இன்ஸ்பெக்டர் சீதாராம், தான் அதற்கு உதவுவதாகக் கூறி அவரைத் தனது வாகனத்திலேயே ஏற்றிக் கொண்டு விரைந்தார். அரை மணி நேரத்தில் அவர் திரும்பி வந்து, "இப்போது நீங்கள் பிரேதப் பரிசோதனை செய்யலாம்" என்று பிணத்தைக் கொடுத்தார். அப்பிணத்தில் புதிய குண்டுக் காயங்கள் காணப்பட்டன. இந்த இரக்கமற்ற அரக்கத் தனத்தை அறிந்ததும் பஞ்சாப் மக்கள் அதிர்ச்சியில் உறைந்து போனார்கள். மனித உரிமை அமைப்புகளின் போராட்டத்துக்குப் பிறகு, இதுபற்றிய விசாரணை நடத்துமாறு அமிர்தசரஸ் மாவட்டக் கோர்ட்டுக்கு உச்சநீதி மன்றம் இப்போது உத்திரவிட்டுள்ளது.

★ 1992-ம் ஆண்டு இறுதியில் காஜி நானாகல் கிராமப் பஞ்சாயத்துத் தலைவரான சர்தூல் சிங் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரைச் சுட்டுக் கொன்று தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி 5 கிராமவாசிகளைப் போலீசார் கைது செய்து சிறையிலடைத்து வழக்கை மூடிவிட்டனர். ஆனால் கடந்த பிப்ரவரி 3-ம் நாளன்று சரணடைந்த பாபர் கல்சா இயக்கத்தைச் சேர்ந்த 11 தீவிராவதிகள், தாங்கள்தாம் பஞ்சாயத்துத் தலைவரைச் சுட்டுக் கொன்றோம் என்று வாக்குமூலம் அளித்துள்ளனர். அப்பாவிகளைப் பிடித்து பொய் வழக்கு சோடித்து அம்பலப்பட்டுப் போயுள்ள போலீசார், இப்போது 5 கிராமவாசிகளை விடுதலை செய்துள்ளனர்.

★ போலீசின் அட்டூழியங்களை அம்பலப்படுத்தி ஜலந்தரிலிருந்து வெளிவரும் "ஆஜ் தி அவாஸ்" என்ற பஞ்சாபி தினசரி பத்திரிகையின் ஆசிரியர், உரிமையாளர், அச்சகர் உட்பட 5 பேரை கடந்த ஜனவரியில் "தடா" சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைத்துள்ளனர். ஈராண்டுகளுக்கு முன்பு கைது செய்யப்பட்டு பஞ்சாப் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிசார் அகமது என்ற தீவிரவாதி அண்மையில் பஞ்சாப் போலீசுக்கு வாக்குமூலம் அளித்தாராம். பாகிஸ்தானின் ஆதரவோடு பஞ்சாபில் தீவிரவாதத்தை விதைத்து பிரிவினையைத் தூண்ட இப்பத்திரிகையைப் பயன்படுத்தியதாகக் கூறினாராம். அதன்படி திடீர் சோதனை நாடகமாடிய போலீசார், அப்பத்திரிகை அலுவலகம் தீவிரவாதிகளின் புகலிடமாக உள்ளது என்றும் ஆயுதங்களுக்கு பணமும் அங்கே மறைத்து வைக்கப்பட்டுள்ளதென்றும் பொய் வழக்கு சோடித்து, பயங்கரவாத "தடா" சட்டத்தின் கீழ் 5 பேரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அரசை விமர்சிக்கும் பத்திரிகைகளை நிறுத்தி விடுவதற்காக போலீசார் செய்யும் கீழ்த்தரமான சதியே இது என்று பத்திரிகையாளர்களும் செய்தியாளர்களும் அண்மையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

நிர்வாணமாக சாக்கு மூட்டையில் கட்டி, கால்வாயில் முக்கி சித்திரவதை செய்யப்பட்ட ராஜிந்தர் கௌர் - குடும்பத்தினருடன்.





படிப்பகம்

www.padippakam.com

# பத்திரிகைகளை விழுங்கும் பன்னாட்டு பகாசூர கம்பெனிகள்

**ஏழுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு பத்திரிகைகள் நுழைய மனு போட்டுள்ளன; ராவ் கும்பல் கதவைத் திறந்துவிடப் போகிறது.**

ரூபர்ட் முர்டோச் என்பவர் நரசிம்மராவ் முதலான அரசுத் தலைவர்கள், அத்வானி, அசோக் ஜெயின், அருண்பூரி, கொயங்கா முதலான அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பத்திரிக்கை - டி.வி. நிறுவன முதலாளிகள் என பலரை சந்தித்துவிட்டு சென்றார். யார் இவர்? எந்நாட்டு அரசுத் தலைவர் அல்லது அரசின் பிரதிநிதி? இவர்களை எல்லாம் பின்னிருந்து இயக்கக் கூடிய ஏகாதிபத்திய முதலாளிகளில் ஒருவர்; வெளிநாட்டு மஞ்சள் - மசாலா பத்திரிக்கைகள், ஸ்டார் மற்றும் ஜீ டி.வி.க்களுக்குச் சொந்தக்காரர். இந்திய பத்திரிக்கைகள், தனியார் டி.வி.க்களை விலைக்கு வாங்குவதற்காக அல்லது கூட்டு சேருவதற்காக நோட்டம் பார்ப்பதற்கே இந்தியா வந்துபோனது, இந்த தகவல் தொடர்புத் துறை பெருச்சாளி.

"ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியாக மனுஷனையும் கடிப்பது" போல் அந்நிய ஏகாதிபத்திய பெரு முதலாளிகள், இந்திய பத்திரிக்கைத் துறையின் கழுத்திலும் கத்தி வைத்திருக்கிறார்கள். இந்திய - பத்திரிக்கைச் சட்டப்படி ஒரு இந்தியக் குடிமகனே பத்திரிக்கை உரிமையாளராகவும் வெளியிடுபவராகவும் இருக்க முடியும். அதேப் போல வெளிநாட்டு செய்தி நிறுவனங் கள், இந்திய செய்தி நிறுவனங்கள் மூலமாகவே செய்திகளை வழங்க முடியம் இக்கட்டுப்பாட்டை முற்றிலும் தளர்த்தி அந்நிய செய்தி நிறுவன, பத்திரிக்கை முதலாளிகளுக்கு கதவு திறந்துவிட கடந்த அக்டோபரிலேயே இந்திய அமைச்சரவை அங்கீகரித்து விட்டது. (இன்னும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றி சட்டமாக்குவதுதான் பாக்கியுள்ளது) இதைத் தொடர்ந்து சில அந்நியப் பத்திரிக்கைகள் இந்தியாவிற்குள் நுழைந்து தயாரிப்புகளையும் செய்து விட்டன.

சர்வதேச ஆங்கிலப் பத்திரிக்கைகளான "பைனான்சியல் டைம்ஸ்", "டைம்ஸ்", "இன்டர் நேஷனல் ஹெரால்டு ட்ரிபியூன்" என ஏழுக்கும் மேற்பட்டவைகள் இந்தியாவிற்குள் நுழைய மனு போட்டுள்ளன. "பிசினஸ் ஸ்டான்டர்ட்ஸ்", "இந்திய டுடே", "டெக்கான் குரோனிக்கல்", "ஹிந்து" போன்ற பத்திரிக்கைகளும் மற்றும் இந்துஜா போன்ற தரகு முதலாளிகளும் வெளிநாட்டு பத்திரிக்கைகளுடன் கூட்டு சேரத் தயாராக காத்திருக்கிறார்கள். அதே சமயம் உள்நாட்டு செய்தி நிறுவனங்களான (UNI, PTI) யு.என்.ஐ., பி.டி.ஐ; ஆங்கிலப் பத்திரிக்கைகளான "டைம்ஸ் ஆஃப் இந்தியா", "டெக்கான் ஹெரால்டு" மற்றும் பிற பத்திரிக்கை ஊழியர்கள், சமூக நலவாதிகள் என பலர் இந்நுழைவை கடுமையாக எதிர்க்கின்றனர்.

இவர்கள் கர்நாடகம், டில்லி உயர் நீதி மன்றங்களில் பத்திரிக்கைகள் நுழைவுக்கு எதிராக வழக்கு போட்டு இடைக்கால தடைகளும் வாங்கியுள்ளனர். இந்திய பத்திரிக்கை குழுமமும் (Press Council) இத்தரப்பினருக்கு ஆதரவாக அரசுக்குப் பரிந்துரைத்துள்ளது. வெளிநாட்டு "பைனான்சியல் டைம்ஸ்" பத்திரிக்கை கல்கத்தாவின் ஆனந்த் பசார் குரூப் நிறுவனத்துடன் சேர்ந்து ஒரு கூட்டு பத்திரிக்கை கம்பெனியை பதிவும் செய்துவிட்டது. இதைத் தொடர்ந்து எதிர்ப்பு கிளம்பி டில்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பத்திரிக்கை பதிவு செய்வதையும் நிறுத்தி வைத்துள்ளனர்.

அந்நிய பத்திரிக்கைகளை அனுமதித்தால் இந்திய பத்திரிக்கைகளின் தரம் உயரும்; நவீன தொழில் நுட்ப முறைகள் பத்திரிக்கைத் துறைக்குக் கிடைக்கும்; அந்நிய செலாவணி கிடைக்கும்; பத்திரிக்கை ஊழியர்களின் சம்பளம் உயரும் என்றெல்லாம் அரசும் அதன் கொள்கையை ஆதரிக்கும் பத்திரிக்கைகள் சிலவும் வக்காலத்து வாங்குகின்றன. ஆனால், இவற்றிலெல்லாம் எதிர்மறையான விளைவுகளே ஏற்படும். பெப்சி, கொக்கோ கோலா ஆகிய பன்னாட்டு கம்பெனிகள் இங்கு நுழைந்ததால் கோல்ட் ஸ்பாட் முதலான குளிர்பான கம்பெனிகள் விழுங்கப்பட்டன. உள்ளூர் காளிமார்க், வின்செண்ட் போன்றவை சந்தையை இழந்தன. இதுவேதான் பத்திரிக்கைத் துறையிலும் நிகழும். தேசங்கடந்த தொழில் கழகங்கள் (TNC), பன்னாட்டு தொழிற் கழகங்களின் (MNC) மூலதனம் முன்னேறிய தொழில் நுட்பத்துடன் போட்டியிட முடியாமல் உள்நாட்டுப் பத்திரிக்கைகள் படிப்படியாக இழுத்து மூடப்படும்.

இந்தியாவில் உள்ள மலிவான மூலப்பொருள்கள்; மலிவான உழைப்புச் சந்தை, மற்ற நாடுகளைவிட மக்கள் தொகையளவில் அதிகம் உள்ள படிப்பாளிகள் முதலியவற்றைக் கணக்கிட்டு, குறைந்த மூலதனத்தில் அதிகக் கொள்ளை லாபம் அடிக்கும் நோக்கிலேயே அந்நிய முதலாளிகள் நுழைகிறார்கள். இந்தியாவிலிருந்து பத்திரிக்கையை வெளியிட்டு மத்திய, கிழக்கு ஆசிய நாடுகளில் தமது வியாபாரத்தைப் பெருக்கவும் திட்டமிடுகிறார்கள். இதில் இந்திய அரசுக்கு அந்நியச் செலாவணி வருமானத்தைவிட, அச்சர்வதேச முதலாளிகள் லாபமாகச் சுருட்டிச் செல்வதாலும் புதிய தொழில் நுட்பங்களை இங்கு இறக்குமதி செய்வதாலும் ஏற்படும் அந்நியச் செலாவணி இழப்புதான் அதிகம் இருக்கும். இதேபோல் வெளிநாட்டு நிறுவனத்துடன் கூட்டு சேரும் பத்திரிக்கை ஊழியர்களுக்கு வேண்டுமானால் ஊதியம் உயரலாமே ஒழிய நலிவடையும் உள்நாட்டுப் பத்திரிகைகளின் ஊழியர்கள் வேலை இழப்பதும்தான் பெரிதும் நடக்கும்.

அத்வானியும் பன்னாட்டு தகவல் தொடர்பு தனியார் துறை பெருச்சாளி ரூபர்ட் முர்டோச்சும்.





படிப்பகம்

www.padippakam.com

இவற்றை யெல்லாம் விட நமது நாட்டு பத்திரிக்கைகளின் 'சுயேட்சை - ஜனநாயகத் தன்மை, நமது பாரம்பரிய கலாச்சார முறைகளும்' பாழாகும்; அந்நிய பத்திரிக்கை முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்குள் செல்லும், டிஸ்க் ஆன்டெனா - கேபிள் தொலைக்காட்சிகள் (BBC, STAR CNN, ZEE) நுழைவால் அவற்றுடன் போட்டிப் போட்டுக் கொண்டு 'தரம்' என்ற பெயரில் சினிமா ஆபாசக் குப்பைகளை திணிப்பது போல்தான் பத்திரிக்கைத் துறையிலும் நடக்கும். இன்னும் மேலதிகமாக மேலை நாட்டு கலாச்சார சீரழிவுகள் இறக்குமதியாகி நமது கலாச்சாரத்தின் முகவரி அழிக்கப்படும். இன்றைய இந்தியப் பத்திரிக்கைகளில் சிறு துளிகளாக தெரியும் ஆக்கப்பூர்வமான எழுத்தாளர்கள், சிந்தனையாளர்களுக்கான வாய்ப்புகள் பறிபோகும். அவர்களது முன்முயற்சிகள் பட்டுப் போகும். ஜனநாயகப் பூர்வ - முற்போக் கான சிந்தனையுள்ள பத்திரிக்கையாளர்கள் படைப்பாளிகள் வியாபாரச் சந்தையிலிருந்து வீசியெறியப்பட்டு சிறு பத்திரிக்கைகளுக்குள் முடங்கிப்போக நேரிடும்.




பன்னாட்டு பத்திரிகைகள்: இந்திய பத்திரிகைகளுக்கும் முற்போக்கு பத்திரிகையாளர்களுக்கும் அச்சுறுத்தல்.

இவை ஏதோ ஆங்கிலப் பத்திரிக்கைகளுக்கு மட்டும் நிகழும் பாதிப்புகள் அல்ல; ஆங்கிலப் பத்திரிக்கைகளின் பல மொழிப் பதிப்புகளைக் கொண்ட வலைப்பின்னல், செய்தி நிறுவனங்களைச் சார்ந்திருக்கும் பிராந்திய மொழிப் பத்திரிக்கைகள் அனைத்திற்கும் உரிய பாதிப்பே. அரசு மற்றும் அரசியல்வாதிகளை விமர்சிக்கும் எதிர்க்கும் (ஒரு சார்பாகவோ, நடுநிலைமையாகவோ) இதழியல் படைப்பாளிகள், மாற்று கட்சிகளின் சிறு பத்திரிக்கைகளை ஒடுக்குவதற்குரிய கறுப்புச் சட்டங்களும், அந்நிய ஏகாதிபத்திய சார்பு பத்திரிக்கைகளின் கொள்ளைக்கு அரசு சலுகைகளும் அதிகரிப்பதும் நாம் எதிர் நோக்கியிருக்கும் அபாயம்.

இன்றைக்கு பத்திரிக்கை துறையில் தொழில் - மூலதன முதலைகள், வியாபாரத் தரகர்கள், கள்ளச் சந்தைப் பேர்வழிகள் நுழைந்து ஆதிக்கம் செலுத்துவதைப் பார்க்கிறோம். இப்பத்திரிக்கை பணத் தரகர்கள் அதிகாரிகள் - அரசியல் வாதிகள் - பெரும்பண முதலைகளுடன் வலைப்பின்னலை அமைத்துக் கொண்டு பல அரசியல் சதி வேலைகளில் ஈடுபடுவதைப் பார்க்கிறோம். அந்நிய பத்திரிக்கைத் துறை மாஃபியாக்கள் நுழைவால் இப்போக்கு அதிகரிப்பதைத் தடுக்க முடியாது. இச்சர்வதேச பத்திரிக்கைகள் மூலம் உளவு பார்ப்பது, ரகசிய பேரங்களை நடத்துவது, பொய்ப் பிரச்சாரம் - அவதூறுகளால் தமக்கு சாதகமான கும்பலுக்கு அடித்தளத்தை நிறுவுவது என பல சதி வேலைகளை ஏற்கனவே ஏகாதிபத்திய வல்லரசுகள் செய்து வருகின்றன. இதற்காகவே இந்தியாவிலும் நுழைய, குறிப்பாக அமெரிக்க பன்னாட்டுப் பத்திரிக்கை செய்தி நிறுவனங்கள் முந்துகின்றன.



ஆர்.பி.கோயங்கா

வெளிநாட்டு அரசுகளோடு சேர்ந்து இங்குள்ள இந்துஜா மற்றும் பத்திரிகை முதலாளிகளும் நெருக்கடி கொடுப்பதால் அந்நிய முதலாளிகள் நுழைவதை ராவ் கும்பல் தடுத்து நிறுத்தாது.

மூலதனம், உழைப்பு, உற்பத்தி சர்வதேசமயமாகி வருவதன் நிகழ்வுக்கு இணையாகவும் துணையாகவும் கலாச்சாரத்தையும், சிந்தனா முறையையும் உருவாக்க முயலுகின்றன, ஏகாதிபத்திய வல்லரசுகள்; இதற்காக செயற்கை கோள் தொலைகாட்சி ஒளிபரப்பு மூலம் தொடங்கிய தனது விளம்பர பிரச்சாரப் பணியை பத்திரிக்கைத் துறைக்கு விரிவாக்கி வருகின்றன. பன்னாட்டு தேசங்கடந்த தொழில் நிறுவனங்கள் ஆகியவை சகல துறைகளிலும் படருவதற்காக ஏழை நாட்டு அரசுகளை நிர்பந்தித்து அந்நாட்டுக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தக் கோருகிறார்கள். நமது நாடு பிரிட்டன், ஜெர்மன், பிரான்சு, ஜப்பான் நாட்டு அரசுகளுடன் பேச்சு வார்த்தை நடத்தும் போதெல்லாம் இத்தகைய நெருக்கடி தொடர்ந்து கொடுக்கப்படுகிறது. இவர்களுக்குச் சேவகம் செய்து நக்கிப் பிழைக்கவே இதற்கு அடி விரும்பும் இந்திய ஆட்சியாளர்கள், பணிந்து தாராளமயமாக்கத்தை விரைந்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

வெளிநாட்டு அரசுகளோடு, சேர்ந்து இங்குள்ள இந்துஜா முதலான தரகு கும்பலும், பத்திரிக்கை முதலாளிகளும் நெருக்கடி கொடுப்பதால் அந்நிய முதலாளிகள் பத்திரிக்கைத் துறையில் நுழைவதை ராவ் கும்பல் தயங்காமல் வரவேற்கிறது. மேலும் பத்திரிக்கைத் துறையில் சிறுவீதம் பேரே இவற்றை எதிர்ப்பது, 6 சதவீகிதம் பேரே பத்திரிக்கை படிப்பாளிகளாக இந்திய மக்களிடையே உள்ள யதார்த்தம் காரணமாக எதிர்ப்பு குரல்கள் எளிதாக நசுக்கப்பட்டுவிடும். ராஜீவ் மற்றும் ராவ் கும்பல்கள் தமது அனைத்து மக்கள் விரோத நடவடிக்கைகளையும், தீவிரவாத - பிரிவினைவாத - பயங்கரவாத பீதியூட்டி அதன் திரைக்குப் பின்னே நடைமுறைப்படுத்தி வந்தார்கள். அனைத்து பத்திரிக்கைகளு இதற்கு ஒத்தூதி வந்ததுதான் உள்ளது. தொழிற்துறை முதல் பலவற்றிலும் ஆட்சியாளர்களின் மக்கள் விரோத - தாராளவாத கொள்கைகள் அமுலுக்கு வந்ததை வேடிக்கைப் பார்த்த பத்திரிக்கைகள், இதில் மட்டும் அரசின் தாராளவாத கொள்கையைத் தடுத்துவிட முடியாது என்பதுதான் உண்மை. எனவே ஜனநாயக சிந்தனையுள்ள பத்திரிக்கையாளர்கள், பத்திரிக்கை வாசகர்கள் தொடர்ந்து இந்த அரசையும், வியாபார பத்திரிக்கைகளையும் நம்பி ஆதரிக்கப் போகிறார்களா என்பதுதான் கேள்வி?!

★ சுப்பு

www.padippakam.com

# உ.பி.: தலித்துகள் மீது சாதிவெறித் தாக்குதல்

உத்திரப் பிரதேச மாநிலத்தில் சமாஜ்வாடி - பகுஜன் சமாஜ் கட்சி கூட்டணி ஆட்சியைக் கைப்பற்றியதும், அதனை பிற்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் ஒற்றுமைக்குக் கிடைத்த வெற்றியாக, சமூக நீதிக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாக மண்டல் ஆதரவாளர்கள் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். ஆனால் இக்கூட்டணி பதவிக்கு வந்த ஒரு மாதத்திற்குள்ளாகவே மாநிலமெங்கும் தொடரும் சாதிவெறித் தாக்குதல்கள் அவர்களது பிரமைகளைத் தகர்த்தெறிந்து வருகின்றன.

அலகாபாத் அருகே தாவ்னா கிராமத்தைச் சேர்ந்த ஆசாத் ஒரு தாழ்த்தப்பட்ட ஏழை விவசாயி. தனது துண்டு நிலத்தில் பாடுபடும் அவர், இதர காலங்களில் கூலி வேலை செய்பவர். அவரது நிலத்தில் விளைந்திருந்த அவரைக்காயை மேல்சாதியைச் சேர்ந்த ராஜேஷ் என்ற இளைஞன் திருட்டுத்தனமாக பறித்துச் சென்றதும் இருவருக்குமிடையே வாய்ச்சண்டையும் கைகலப்பும் நடந்தது. அதைத் தொடர்ந்து சாதிவெறி பிடித்த நிலப்பிரபுவான ராஜேஷின் தந்தை போலீசில் புகார் செய்தார். மறுநாள் போலீசார் வருவதை அறிந்ததும் ஆசாத் தப்பியோடி தலைமறைவாகிவிட்டார். போலீசாரும் ஆசாத்தின் தாயிடம் எச்சரித்துவிட்டு கிளம்பி விட்டனர்.

ஆனால் மேல்சாதி வெறியர்களான "குர்மி"கள் போலீசாரின் நடவடிக்கையால் திருப்பதியடையவில்லை. தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவன், குர்மிகளை எதிர்க்கத் துணிந்துவிட்டதை ஒருபோதும் சகித்துக் கொள்ள முடியாது என்று குமுறினர். ஆசாத் அவர்களிடம் சிக்காத ஆத்திரத்தில், குர்மி சாதி வெறியர்கள் கையிலே துப்பாக்கி, அரிவாளுடன் கும்பலாகத் திரண்டு சென்று ஜனவரி 21-ந் தேதியன்று ஆசாத்தின் குடிசையை முற்றுகையிட்டனர். அப்போதுதான் கூலிவேலைக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தார் ஆசாத்தின் தாயான சிவபதி.

"எங்கேடி உன் மகன்?" என்று கேட்டு 45 வயதான அத்தாயை மிருகத்தனமாக தாக்கிய குர்மிகள், சாதிவெறி போதை தலைக்கேற அவரது சேலையை உருவி நிர்வாணப்படுத்தி வீதியெங்கும் ஊர்வலமாக இழுத்துச் சென்றனர். மானத்தைத் தனது கைகளால் மறைத்துக் கொண்டு கதறிய அத்தாயின் கைகளைப் பிடித்து தடியால் அடித்தபடியே நாயைப் போல வீதியில் இழுத்துச் சென்று அவமானப்படுத்தினர். தன் கண்ணெதிரிலேயே இக்காட்டுமிராண்டித்தனம் நடந்த போதிலும் அச்சேரியிலிருந்த யாருமே இந்த அநியாயத்தை தடுக்க முன்வரவில்லை. "அவர்கள் கைகளிலே ஆயுதமும் கண்களிலே கொலை வெறியும் உள்ள நிலையில் நாங்கள் என்ன செய்ய முடியும். அவர்கள் மேல்சாதி நிலப்பிரபுக்கள்; நாங்களோ தாழ்த்தப்பட்டவர்கள். அவர்களை எதிர்த்து முணுமுணுத்தால்கூட எங்கள் சேரிகள் சாம்பலாக்கப்பட்டு விடும்" என்று விம்மியபடியே குமுறுகிறார் இக்கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட விவசாயி ஒருவர்.

நாட்டு மக்களையே அதிர்ச்சியில் உறையச் செய்யும் இந்த அட்டூழியத்தைப் பற்றி மெதுவாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்த பிறகு, மகளிர் அமைப்புகளும் மனித உரிமை இயக்கங்களும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்திய பின்னரே, அரசு 12 குர்மி சாதி வெறியர்களைக் கைது செய்து, சேரிப் பகுதியில் பாதுகாப்புக்காக போலீசை நிறுத்தியுள்ளது. இருப்பினும் குர்மி சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டோரை சாட்சி சொல்லிவிடாதிருக்கும்படி தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றனர். கைதான ராஜ்நாத் என்ற குர்மி சாதி வெறியன், "நான் சிறையிலிருந்து வெளியான பிறகு தாழ்த்தப்பட்டோரைக் கொன்றொழிக்காமல் விடமாட்டேன்" என்று பகிரங்கமாகவே மிரட்டியுள்ளான்.

நாட்டையே வெட்கித் தலைகுனிய வைக்கும் இச்சாதி வெறிக் காட்டு மிராண்டித்தனம் விதிவிலக்கான சம்பவம் அல்ல. சமாஜ்வாடி - பகுஜன் சமாஜ் கட்சிக் கூட்டணி பதவிக்கு வந்த பிறகு தாழ்த்தப்பட்டோர் மீதான தாக்குதல்களும் பாலியல் வன்முறைகளும் சிறியதும் பெரியதுமான அதிகரித்து வருகின்றன. முலாயம் சிங் யாதவ் முதல்வராகப் பதவியேற்ற 15 நாட்களுக்குள் 6 இடங்களில் தாழ்த்தப்பட்டோர் மீது மேல்சாதி வெறியர்களின் வன்முறைத் தாக்குதல்கள் நடந்துள்ளன. இவற்றில் 9 தாழ்த்தப்பட்டோர் மாண்டு போயுள்ளனர். 20-க்கும் மேலானோர் படுகாயமடைந்துள்ளனர். பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர். அதைத் தொடர்ந்து.

> ஒரு பிரிவு 'பிற்பட்ட' சாதிவெறி - கிரிமினல் குண்டர்களின் சமாஜ்வாடி கட்சி ஆட்சிக்கு வந்ததும், இரட்டிப்பு வெறியோடு தலித்துகளைத் தாக்கி கொட்டமடிக்கின்றனர்.

★ படேபூரில் ஆயுதமேந்திய குர்மி சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டோர் சேரிகளைத் தாக்கி, வீடுகளை இடித்துத் தள்ளி 6 பேரை பட்டப்பகலில் கொன்றுள்ளனர்.

★ பாதவுன் மாவட்டத்தில் யாதவ் சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டோர் மீது நடத்திய கொலை வெறித் தாக்குதலில் இருவர் மாண்டனர். சேரிகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

★ அரித்துவாரில் 3 தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் தாக்கூர் சாதி வெறியர்களால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

★ அஜம்காரில் குதிரை மீதேறி ஆயுதமேந்தி வந்த மேல்சாதி வெறியர்கள் தாழ்த்தப்பட்டோரை நள்ளிரவில் வந்து தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். இதனை கொள்ளையர்கள் நடத்திய தாக்குதலாக போலீசார் சித்திரித்து வருகின்றனர்.

★ ஹாஷிம்பூரில் ஒரு தாழ்த்தப்பட்ட இளம் பெண்ணை குர்மி சாதியினர் கும்பலாக கற்பழித்துள்ளனர்.

— இத்தனையும் கடந்த ஜனவரி-பிப்ரவரி மாதத்தில் நடந்த அட்டூழியங்கள். இத்தனைக்கும் பிறகு "அம்பேத்காரின் வாரிசு" என்று புகழப்படும் பகுஜன் சமாஜ் கட்சி தலைவரான கன்ஷிராம் முலயாம் சிங்கிடம் முறையிட்டதோடு சரி. சிவபதி என்ற தலித்தாயை நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக இழுத்து வந்த கொடுஞ் செயலைக் கண்டித்து சம்பந்தப்பட்ட போலீசு அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றுதான் அவர் கோரியுள்ளார். தலித்துகள் மீது 'பிற்பட்ட' சாதி வெறியர்கள் அடுத்தடுத்து தாக்குதல் நடத்தி உ.பி. மாநிலத்தையே ரணகளமாக்கி வரும்போது, அவர் தமது தலித்துகள் - பிற்பட்டோர் கூட்டணிக்கு வலுசேர்க்க இந்தியாவின் நாலாதிசையிலும் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார்.

தமது சாதிவெறி அட்டூழியங்களுக்கு எதிர்ப்பே இல்லாத நிலையில், மேல்சாதியினரின் கொட்டம் எல்லை மீறிப் போனது. வாரணாசியில் தலித் ஒருவரை மேல்சாதி தாக்கூர்கள் வெட்டிக் கொன்றனர். ஆத்திரமடைந்த தாழ்த்தப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டோர் இதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக 3 தாக்கூர்களைக் கொன்றொழித்தனர். கடந்த பிப்ரவரி 4-ம் தேதியன்று நடந்த இக்கொலையை பகுஜன் சமாஜ் கட்சியின் மந்திரியான தீனநாத் பாஸ்கர் தலைமையேற்று நடத்தினார் என்ற உறுதிப்படுத்தப்படாத செய்தி மேல்சாதியினரிடையே வெறியைக் மேலும் கிளறிவிட்டது. வாரணாசி காசிபூர் வட்டாரத்தில் மேல்சாதியைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் கலவரத்தில் இறங்கினர். மந்திரி பாஸ்கரைப் பதவியிலிருந்து நீக்கு என்று சாலை மறியல், ஆர்ப்பாட்டம், கொடும்பாவி எரிப்பு, அரசு வாகனங்கள் தீ வைப்பு, தாழ்த்தப்பட்ட மாணவர்களைக் கும்பலாக சேர்ந்து தாக்குவது என்பதாக மாணவர்களின் போராட்டம் சாதி வெறி வன்முறைக்குத் திரும்பியது.

இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, முலயம்சிங்கே பதவி விலகு என்ற கோரிக்கையுடன் இந்து வெறி பாரதீய ஜனதா கட்சியினர் சாதியக் கலவரத்தை மேலும் விசிறிவிட்டனர். கான்பூரில் தாழ்த்தப்பட்டோர் மீது வன்முறைத் தாக்குதலை தலைமையேற்று நடத்திய கிரிமினல் குண்டர் படைத் தலைவனும், பாரதீய ஜனதா கட்சிப் பிரமுகருமான காலாபச்சா என்பவன் குண்டு வீசிக் கொல்லப்பட்டான். இதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக கடந்த பிப்ரவரி 7-ந் தேதியன்று பாரதீய ஜனதா குண்டர்கள் தலித் ஒருவரை உயிரோடு எரித்துக் கொன்றனர். வதந்திகளும் ஊகங்களும் பெருகி, அறிவின் இடத்தை சாதி வெறி ஆக்கிரமித்துக் கொள்ள மீரட், டேராடூன், லக்னோ - என மாநிலமெங்கும் படுகொலைகள் பற்றிப் பரவியது. பகுஜன் சமாஜ் கட்சியின் மந்திரிகள், எம்.எல்.ஏ.க்கள்கூட சாதிவெறியர்களால் தாக்கப்பட்டு அவர்களது வாகனங்கள் தீயிடப்பட்டுள்ளன. சாதியக் கலவரத்தீ பற்றி எரியும் உத்திரப் பிரதேசத்தின் பல பகுதிகளில் ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு துணை ராணுவப்படைகள் குவிக்கப்பட்டுள்ளன. பார்ப்பன பத்திரிகைகளும் பாரதீய ஜனதாவும் உ.பி.யில் அரசியல் படுகொலைகளும் கிரிமினல்களின் அட்டூழியங்களும் பெருகிவிட்டதாக கூப்பாடு போட்டு அரசியல் ஆதாயம் தேட முயற்சித்து வருகின்றன.

சமாஜ்வாடி கட்சித் தலைவரும் மாநில முதல்வருமான முலயாம்சிங் யாதவ், ''இது எதிர்க்கட்சிகள் செய்யும் சூழ்ச்சி; சாதிவெறியைக் கிளறிவிட்டு ஆதாயமடையத் துடிக்கிறார்கள்'' என்று குற்றம் சாட்டுகிறார். ஆனால், சமாஜ்வாடி கட்சி என்பதே ஒரு பிரிவு 'பிற்பட்ட' சாதி வெறியர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கிரிமினல் குண்டர்களின் கட்சி. ஏற்கனவே தலித்துகளை சாதி வெறிபிடித்து தாக்கிவரும் இவர்கள், தமது கட்சி ஆட்சிக்கு வந்ததும் இரட்டிப்பு வெறியோடு கொட்டமடிக்கின்றனர். போதாக்குறைக்கு முலயாம் சிங் பதவிக்கு வந்ததும் அவரது ஆசிபெற்ற கிரிமினல் குண்டர் படைத் தலைவர்கள் பலர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். குண்டர் தடுப்புச் சட்டமே தேவையில்லை. அதை நீக்குவது இன்றைய தேவையாக உள்ளது என்கிறார் முதல்வர் முலயாம்சிங் யாதவ்.



குர்சி சாதி வெறியர்களால் நிர்வாணப்படுத்தி தெருவில் ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்ட தலித் தாய் சிவபதி: நாட்டையே வெட்கித் தலைகுனிய வைக்கும் இக்காட்டுமிராண்டித்தனம் விதிவிலக்கான சம்பவம் அல்ல.

சமூக நீதி செம்மல்கள் என்று போற்றப்படும் முலயாம்சிங்கும் கன்ஷிராமும் உ.பி. மாநிலத்தின் சார்பாக நாடாளுமன்ற மேலவைக்கு பம்பாயைச் சேர்ந்த தரகுப் பெருமுதலாளி ஜெயந்த் மல்ஹோத்ராவையும், சிமெண்ட் தொழிற் குடும்பத்தின் வாரிசான சஞ்சய் டால்மியாவையும் எம்.பி.க்களாக தேர்ந்தெடுத்துள்ளனர். இதற்காக தனது கட்சி சார்பில் நிறுத்தப்பட்ட தலித் வேட்பாளரை போட்டியிலிருந்து விலகிக் கொள்ளச் செய்துள்ளார் கன்ஷிராம். இதுதவிர பிரதமர் நரசிம்மராவின் நெருங்கிய கூட்டாளியான ஜிதேந்திர பிரசாத்தை எம்.பி.யாக தேர்ந்தெடுக்க கன்ஷிராமிடம் காங்கிரசுப் பெருச்சாளிகள் பேரம் நடத்தியுள்ளனர். சமாஜ்வாடி - பகுஜன் சமாஜ் கட்சிகள் எந்த திசையில் செல்கின்றன என்பதை இவை பளிச்சென படம் பிடித்துக் காட்டுகின்றன.

மேலும், உ.பி.யின் பிற்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் கூட்டணி என்பது கீழிருந்து கிராம அளவில் கட்டி வளர்க்கப்பட்டு ஒரு புதிய அரசியல் சக்தியாக உருவானதல்ல. தேர்தல் ஆதாயத்துக்காக சமாஜ்வாடி - பகுஜன் சமாஜ் கட்சிகளுக்கிடையே மேல் மட்டத்தில் உருவான ஒரு சந்தர்ப்பவாத கூட்டணிதான். தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குலுக்குப் பின் கன்சிராம், ஒற்றுமை முழக்கத்தைக் கைவிட்டுவிட்டு தம் சாதிக்காக முழங்க வேண்டிவந்துவிட்டது. அண்மையில் பிற்பட்டோர்களுக்கான சலுகைகளை எதிர்த்து அறிக்கை விட்டுள்ளார்.

எனவேதான், முற்பட்ட, 'பிற்பட்ட' மேல்சாதியினரின் எதிர்ப்புகளைத் தவிர்க்கும் பொருட்டு, ''நிலச்சீர்த்திருத்தம்'' என்பது கம்யூனிசப் பைத்தியக்காரத்தனம்; சொத்துடைய தலித் விவசாயிகளின் ஒரு புதிய வர்க்கத்தை உருவாக்கி சம உரிமையோடு மக்கள் வாழ வேண்டும் என்பதுதான் எமது குறிக்கோள்'' என்கிறார் கன்ஷிராம். ஆனால் தற்போதைய சாதிக் கலரவங்கள் பெரும்பாலும் நிலப்பிரச்சினையை ஒட்டியே எழுந்துள்ளன. முந்தைய அரசுகள் தலித்துகளுக்கு அளித்த துண்டு நிலங்களை பிற்பட்ட சாதியினர் அபகரித்துக் கொண்டு ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். தங்களது கட்சி ஆட்சிக்கு வந்ததும், தலித்துகள் மெதுவாக தலை நிமிர்ந்து நியாயம் கேட்க முற்பட்டதும் அவர்கள் மீது தாக்குதல்கள் ஏவப்படுகின்றன. உண்மையில் இம்மோதல் பார்ப்பன - மேல்சாதிக் கும்பலுக்குச் சாதகமாகி உள்ளன. இம் மோதலைக் காட்டி பா.ஜ.க. தம்மை பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களின் உண்மையான பிரதிநிதியாகக் காட்டிக் கொண்டு ஆதாயம் தேட முயலுகிறது.

விவசாயப் புரட்சி இல்லாமல் நாற்காலி பதவிகளால் மட்டும் தலித்துகள் விடுதலை அடைந்துவிட முடியாது. நாடாளுமன்ற முறையில் அதிகாரத்தைப் பிடிப்பதன் மூலம் சமூக நீதியையும், பொருளாதார விடுதலையையும் ஒரு போதும் சாதிக்கவும் முடியாது. ஒடுக்கப்பட்ட மக்கள் மேலிருந்து ஆட்சியைப் பிடிக்கும் முயற்சியை ஆளும் வர்க்கங்களும் அரசு எந்திரமும் சாதி வெறியர்களும் அனுமதித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கவும் மாட்டார்கள். உ.பி.யில் தொடரும் சாதி வெறித் தாக்குதல்கள் இந்த உண்மைகளை மீண்டுமொரு முறை நிரூபித்துக் காட்டிவிட்டன.

● குமார்



படிப்பகம்

www.padippakam.com

# தஞ்சையில் தமிழ்மக்கள் இசை விழா

**கலைஞர்கள் - அறிஞர்கள் எழுச்சிமிகு சூளுரை; நாட்டுப்புறக் கலைஞர்கள் திறம்பட நிகழ்த்திய தமிழ் கலை வடிவங்கள்; பழங்கருவிகளின் - இசைப்பாடல்களின் போர் முழக்கம் பார்ப்பனர்களை நடுநடுங்க வைத்தது.**

எதிர்ப்புகளை இருட்டடிப்பு செய்வதன் மூலம் தங்களைப் பெரும் இசை வித்தகர்களாகக் காட்டி வந்த அவாளின் முகாமில் அச்சத்தைத் தோற்றுவித்தது. மக்கள் கலை இலக்கியக் கழகம் தஞ்சையில் நடத்திய தமிழ் மக்கள் இசை விழா. கொட்டும் பனியிலும் நள்ளிரவு ஆனாலும் கலையாது மெய் மறந்திருந்த மக்கள் திரளினர். ''பார்ப்பனர்களின் இசைத் திருட்டை''க் கேட்டு நெஞ்சம் குமுறினர்; தமிழர்களின் ஆடல், பாடல், இசைத் திறமையைக் கண்டும் கேட்டும் உள்ளம் பூரித்தனர்; ஒன்று, இரண்டு, ஐந்து, பத்து என அவர்கள் அள்ளித் தந்த நன்கொடை மூவாயிரத்தைத் தொட்டது; நிகழ்ச்சி முடிந்த பின்பும் நகர மறுத்த கால்கள் அநேகம்; ''இத்துணை காலம் இந்த உண்மையை மறைத்து விட்டார்களே'' என்ற பேச்சொலி ஆங்காங்கே கேட்டது. தஞ்சையில் சூல் கொண்ட இச் சிறுபொறி விரைந்து தமிழகமெங்கும் பெரும் காட்டுத் தீயாய் பரவும்; பார்ப்பன இசைத்திருடர்களையும் அவர்களது துதிபாடிகளையும் சுட்டெரிக்கும் என்பதற்கும் இதுவே சாட்சி.

''இத் தமிழ் மக்கள் இசை விழா பொழுது போக்குவதற்காக நடத்தப்படுவது அல்ல; ஒரு நீண்ட போராட்டத்திற்கான முன் தயாரிப்பு'' என்பதை திருவையாறில் நிகழ்ச்சியை நடத்த தடைவிதித்ததே நிரூபித்துவிட்டது எனத் தனது தலைமை உரையில் ம.க.இ.க. மா.செ. குழு உறுப்பினர் தோழர் காளியப்பன்சுட்டிக் காட்டினார். 'நீதி' மன்றம் நான்கு நாட்கள் இழுத்தடித்த பின், ''தஞ்சாவூரில் நடத்த அனுமதித்தால் திருவையாறுக்கு வரும் பாடகர்கள் தாக்கப்படுவார்கள் என்று அரசு தரப்பு வழக்குரைஞர் உயர் நீதி மன்றத்தில் வாதாடியதை முறியடித்து நாம் இந்த அனுமதியைப் பெற்றுள்ளோம் என அவர் பார்ப்பனக் கும்பலின் நயவஞ்சகத்தை அம்பலப்படுத்தினார்

''தமிழ் மக்கள் இசை ஏன்?'' ''எது தமிழ் மக்கள் இசை'' என்ற மையமான கேள்விகளுக்கு விடை அளிப்பதாகவும் விவாதத்தை தூண்டுவதாகவும் அமைந்தது ம.க.இ.க. செயலாளர் தோழர் மருதையனின் முதன்மை உரை. ''பிற மாநில மக்கள் தங்களுடைய சொந்த இசையிலும் மொழியிலும் பாடல்களைக் கேட்டு இன்புறும் பொழுது. தமிழ் நாட்டில் 'தமிழிசை' என்றால் பார்ப்பனர்கள் மட்டுமல்ல நீதிமன்றமும் அரசும் கூட ''துவேஷம்'' எனக் கரித்துக் கொட்டுகின்றன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தமிழிசைதான் கர்நாடக இசையின் அடிப்படை என ஆபிரகாம் பண்டிதர் நிரூபித்துக் காட்டிய பின்னும், அரசு நடத்திவரும் இசைக் கல்லூரிகளில் அவரது நூல் கற்றுக் கொடுக்கப்படுவதில்லை; செத்துப் போன சமஸ்கிருதம் இன்றும் கற்பிக்கப்படுகிறது. பல்வேறு இசைக் குறிப்புகளைப் பற்றிக் கூறும் ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தின் ''அரங்கேற்றுக்காதை'' எந்தவொரு வகுப்பு பாடத் திட்டத்திலும் கிடையாது'' - இப்படி தமிழிசை வஞ்சிக்கப்படும் வரலாற்றை ஒவ்வொன்றாக எடுத்துக் கூறினார், அவர்.

''சதிர்'', ''தேவதாசிமுறை'' எனத் தாங்கள் ஒதுக்கிய நடனக் கலையை 'பரதம்' என்ற பெயரில் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும் பார்ப்பனர்கள் இப்பொழுது ''கர்நாடக இசை நாட்டுப்புற இசையிலிருந்து பிறந்தது'' எனச் சரடு விடத் தொடங்கியுள்ளனர். இதன் மூலம் தங்களை 'மண்ணின் மைந்தர்களாக'க் காட்டிக் கொள்வதும், செவ்வியல் இசையை வளர்த்தவர்கள் நாங்கள்தான்'' என மார்தட்டிக் கொள்வதும்தான் அவர்களின் வஞ்சகத் திட்டம். ஆனால் உண்மையிலேயே ''நாட்டுப் புற இசையில் இருந்து தோன்றியவையே தமிழ்ப் பண்கள் - அதாவது தமிழ் செவ்வியல் இசை. இதைத் தான் களவாடிக் கொண்டு 'கர்நாடக இசை' எனப் பெயர் சூட்டியிருக்கிறார்கள் பார்ப்பனர்கள் என அம்பலப்படுத்திய'' தோழர் மருதையன், ''தமிழ் மக்களின் இசையைக் காக்க ஒன்பது கோரிக்கைகளை முன் வைத்து அதற்காக எல்லாத் தளங்களிலும் போராட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி'' தனது உரையை முடித்தார்.

**கொம்பு முழங்கியது; தமிழர்களது போர்ப் பிரகடனம் தொடங்கியது.**



இதன் பின் ''ஏழிசைத் தமிழ்'' எனும் நாடகத்தை அரங்கேற்றியுள்ள சிவ. சங்கிலி அவர்கள் ஆபிரகாம் பண்டிதரின் படத்தைத் திறந்து வைத்து நாத்தமுதழுக்க ''இது நான் பெற்ற பெரும் பாக்கியம்'' என நன்றி தெரிவித்தார் ''திண்டுக்கல்லில் ஆசிரியர் பணி முடித்து தஞ்சை திரும்பிய பண்டிதர் தனது நேரத்தையும் செல்வத்தையும் தமிழிசை பற்றி ஆராய்வதிலே செலவிட்டுள்ளார். ஏட்டிற்கும் பாட்டிற்கும் உள்ள முரண்பாடுகள் பற்றி பண்டிதர் கேட்ட கேள்விகள் குறித்து மைசூர் அரண்மனை வீணைப் பண்டிதர் சேஷண்ணா 'அவை நியாயமானவை; ஆனால் எங்களிடம் தான் பதிலில்லை' என ஒத்துக் கொண்டுள்ளார். பண்டிதரின் முன் முயற்சியால் ''தஞ்சை சங்கீத வித்யா மகாஜன சங்கம்'' தொடங்கப் பெற்றது. இக் காலக்கட்டத்தில் அரசியல் அரங்கில் இன உரிமைக்கான சங்கங்களும் தோன்ற ஆரம்பித்தன''

1917-ல் 1346 பக்கங்களடங்கிய ''கருணாமிர்த சாகரம்'' என்ற தமிழிசை ஆய்வு நூலை வெளியிட்டதோடு தஞ்சையில் இசை மாநாடுகள் ஏழு நடத்தி ''தமிழிசைதான் கர்நாடக இசையின் மூலம்'' என நிரூபித்துக் காட்டியுள்ளார் பண்டிதர். இதோடு இன்றும் பருண்மையாக பல பண்டித சிகாமணிகள் நினைப்பதைப் போன்று ''சுரங்களின் மொத்த எண்ணிக்கை 22 அல்ல; 24 ஆகும்'' என்பதை பரோடாவில் நடந்த மாநாட்டில் நிரூபித்துக் காட்டினார் பண்டிதர். சுருதிக் கணக்கு ஆரிய - திராவிடப் போராட்டம் என்றளவுக்குச் சென்றது.'' எனப் பண்டிதரின் தமிழிசைக்கான போராட்டத்தைச் சுவைபட விவரித்தார்.

''சமுதாயமும் இசையும்'' என்ற தலைப்பில் பேசிய பேராசிரியர் பரட்டை, ''சமத்துவ சமுதாயப் போராட்டத்திற்கு 'சந்தபம்' பயன்படுமா?'' என்ற வினாவைப் பார்வையாளர்களை நோக்கி எழுப்பினார். ''முதலாவதாக கர்நாடக இசை தனி மனித இசை; கருத்தின்றி ஒன்றையே திரும்பத் திரும்பச் சொல்வதும், இராக ஆலாபனைகளும்


படிப்பகம்

www.padippakam.com

உள்ளடக்கத்தில் மட்டுமன்றி வடிவத்தி லும் போராட்ட உணர்வைத் தூண்டாது. போராட்ட உணர்வின்றிப் பின் சக்தி அதாவது ஒடுக்குபவனை எதிர்ப்பதற்கா கன ஆற்றல் எங்கிருந்து வரும்? அதே பொழுதில் நாட்டுப்புற இசையில் சாமி யாட்டப் பாடல்களை எடுத்துப் பாடுங் கள். அவை கேட்டோரின் நாடி நரம்பைப் புடைக்கச் செய்வதோடு அவாளின் ஆன் மீகத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இறுதியாக கர்நாடக இசையில் கருத்தில் லாததால் வித்தைகள்தான் உண்டு. தமிழி லும் பாடுகிறோம் என்ற பெயரில் வார்த் தைகளை உடைக்கிறார்கள்'' - என அவா ளின் வித்தையின் முகத்திரையைக் கிழித் தெரிந்தார்.

''நாட்டுப்புறக் கலைகளின் மூலமா கத்தான் பரந்துபட்ட மக்களை அணிதி ரட்ட முடியும்'' என்ற மருதையனின் கருத்துக்கு வலு சேர்ப்பதாக அமைந்தது நாட்டுப்புறக் கலைஞர் முனைவர் **கே.ஏ. குணசேகரனின்** வழக்கு மொழியில் அமைந்த உரை. ''கர்நாடக இசையும் தமி ழிசையும் எம் பயலுகளுக்குப் புரியல;'' என்றார் அவர். ''நாட்டுப்புறக் கலைகள் அது இசையாகட்டும், கூத்தாகட்டும் ஆதிக்கத்தை எதிர்ப்பதும் மனிதனைப் பாடுவதும்தான் அதன் இயல்பு. ஆனால் அரசும், அதன் வெகுசன ஊடகங்களும் இவை இரண்டும் கூடாது என்கின்றன.'' என்றார், தொடர்ந்து.

சபையோருக்கு வணக்கம் செலுத்து வதற்குப் பதிலாக முருகன் துதி, விநாய கர் துதி என்று அவர்கள் துவங்குகிறார் கள். 'நம்ம உணவு மந்திரி மூஞ்சிய பார்க்கணும்'' எனப் பாடினால் 'முகம்'னு இருக்கட்டுமே என பேச்சு மொழியின் வீச்சைக் கண்டு அரண்டு போகிறார்கள் வனொலிக்காரர்கள். கிராமப்புற மக்க ளின் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் கூறும் ஒப்பாரி பாடல்களுக்கு அனுமதி கிடையாது சாமியையும் காதலையும் பாடினால்தான் மதிப்பு; மெல்லிசைக் கரு விகளுக்கும் லஞ்சத்திற்கும்தான் மரி யாதை. அரசியல் தொடர்பும், மேல் சாதி யும் தான் வானொளி - வானொலியில் நுழைவதற்கான துருப்புச் சீட்டு. தவறி நுழைந்துவிட்டால் ''15 நிமிடம்தான் நேரம்; அப்படி பார்க்காதே; பவுடர் போடு; இந்தப் புடவையைக் கட்டு'' என்ற அவர்களின் அதிகாரத் திமிர் நாட் டுப்புறக் கலைஞர்களின் இயல்பைக் குலைக்கிறது'' என்றார் அவர். ''அரசின் வெகுசன ஊடகங்கள் கிராமத்துக்கே வரும் பொழுது மட்டுமே நாட்டுப்புறக் கலைகளின் ஜீவனைக் கொல்லாமல எங் களால் தர முடியும்'' என முடித்தார்.

''சீர்'' என்ற சொல்லே ''சீர்த்தி'', ''கீர்த்தி'' என மாற்றிப் பின் ''கீர்த்தனை'' என்றாகியது. ''பல்லவி'' என்ற கன்னடச் சொல்லுடன் ''அனு'' - வைச் சேர்த்து ''அனுபல்லவி'' ஆக்கி ''சரணம்'' என்ப தைச் சேர்த்துக் கொண்டார்கள்; மகா ராஷ்டிராவை அடுத்துள்ள தென்பகுதி எனப் பொருள் தரும் அக்காலத்திய சொல்லான ''கன்னாடகம்'' என்ப தையே ''கர்நாடகம்'' என்பதாக்கிக் கொண்டனர் - என பார்ப்பனர்கள் சொற் களைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிப் புனைந்ததை விரிவாக எடுத்துரைத்து விளக்கினார் பேராசிரியர் **அருளி.**

''ஆயப்பாலை, வட்டப்பாலை, செம்பாலைப் பண் போன்ற தமிழ் பண்க ளிலிருந்துதான் சங்கராபரணம், கரகரப் ரியா, தோடி, கல்யாணி முதலிய கர்நா டக இசை ராகங்கள் பிறந்தன. முத்தமி ழில் இசைத் தமிழை மையமாக வைத்து; துக்கத்தைக்கூட ''ஒப்பாரி'' என்ற இசை வடிவத்தில் வெளிப்படுத்தியது; யாழ் எனும் இசைக் கருவிக்குத் தனியாக இலக் கண நூல் எழுதியது - இவையெல்லாம் தமிழின் இசை அறிவின் சிறப்புகள். ஆனால் வரிப் பாடல் பாடக் கூடாது; ஆடல், பாடல் கூடாது என்பதுதான் அவாளின் மனு தர்மப் போதனை'' என 'பார்ப்பனர்களுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை' அம்பலப்படுத்தினார் அவர்.

''தமிழிசையில் இயற்பியல் விஞ் ஞானம்'' எனும் தலைப்பில் ஆய்வு செய் யும் பேராசிரியர் **வீரப்பாண்டியன்** ''இது புத்துயிர் ஊட்டுகின்ற நிகழ்ச்சி'' எனத் தனது உரையைத் தொடங்கினார். ஐ.நா. சபை இந்த வருடத்தை ''தொல்பழங்குடி




**தமிழ் மக்கள் இசையைத் திருடிய பார்ப்பனர்களைத் தோலுரித்த பேராசிரியர்கள், பேச்சாளர்கள்.**

**பரவை முனியம்மா குழுவினர் பாட, ''தன்னானே'' இசைக்குழுவினர் ஆட, நிறைந் தது தமிழர்களின் நெஞ்சங்கள்.**






படிப்பகம்

www.padippakam.com

மக்களாண்டு'' என அறிவித்திருக்கிறது. எனவே இத்தடை பற்றி ம.க.இ.க. வினர் ஐ.நா.விற்கு தெரிவிக்க வேண்டும் என்றார் அவர். 12000 ஆதி இசைகள், 103 பண்கள் மற்றும் ஏழு இசைக் குறிகள் வடமொழிச் சொற்கள் அல்ல; திராவிடன் அமைத்த காரண, இடு குறிப் பெயர்கள் என்ற தனது ஆராய்ச்சி முடிவுகளை நூல்களில் எழுதும் முன்பே 'தி ஹிந்து', சுதேசமித்திரன் பத்திரிகைகளுக்குப் பல கடிதங்களில் எழுதியிருக்கிறார், பண்டிதர். ஆனால் அவை அக்கடிதங்களையே பிரசுரிக்காது இருட்டடிப்பு செய்து விட்டன. பண்டிதரின் ஆய்வு முடிவை ஏற்றுக் கொள்ளும் பார்ப்பனர்கள்கூட தமிழிசை என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதில்லை'' என்று பார்ப்பனர்களின் நய வஞ்சகத்தைத் தோலுரித்தார். ''தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்கு இசையைக் கற்றுக் கொடுக்க வேண்டும்'' என்பதை வலியுறுத்தி அமர்ந்தார் அவர்.

இறுதியாக, உரையாற்றிய கரந்தை கலைக் கல்லூரி பேராசிரியர் இளமுருகன் தான் உடனிருந்து பழகிய ''தனது ஆயுட்காலத்தின் இறுதி மூச்சு வரை தனியொரு மனிதனாக'' தமிழசைத் தொண்டாற்றிய சுந்தரேசனாரின் இசைப் புலமை பற்றியும், பண் ஆராய்ச்சி குறித்தும் உணர்ச்சிப் பெருக்கோடு நீண்டதொரு உரையாற்றினார். ''பாடத் தொடங்கும் முன்பே தமிழிசை குறித்து சொற்பொழிவாற்றுவார், சுந்தரேசனார்'' என நினைவு கூர்ந்தார் அவர். பண்டிதரைப் போன்றே தமிழிசை வரலாற்றை ஆராய்ந்து எட்டு நூல்களை எழுதியுள்ள சுந்தரேசனார் பிற தமிழ் அறிஞர்களோடு சேர்ந்து 1972-ல் தொடங்கி தொடர்ந்து மூன்றாண்டுகள் திருவையாறில் தியாகய்யர் உற்சவத்துக்கு எதிராக தமிழிசை விழாவை நடத்தியுள்ளார். ஆனால் தமிழால் அரசியல் அதிகாரத்துக்கு வந்தவர்கள் தமிழிசைக்கு எதுவும் செய்யவில்லை என்றதைச் சாடினார், இளமுருகன்.

சுந்தரேசனார் வயிற்றுப் போக்கு கண்டு இறந்து போன போது அவருக்கு சொந்தமாக இருந்தது ''கிழிந்த நாலுமுழ வேட்டியும் அலுமினியக் குவலையும்'' தான் என்பதை அவரின் சமரசமற்ற போராட்டத்திற்கு உதாரணமாகக் காட்டி முடித்தார். அவரது உரையின் முடிவில் சுந்தரேசனார் பாடிய சிலப்பதிகார கானல்வரிப் பாடலின் ஒலிநாட ஒலிபரப்பப்பட்டது. மக்கள் கருத்தரங்கம் முடிந்து கலை நிகழ்ச்சி தொடங்கும் முன்பே கூட்டம் அதிகரித்து மைதானம் நிரம்பிப் போனது. மேடையில் கொம்பு ஒலித்தது. கூடியிருந்தோர் மத்தியில் இருந்து பம்பை, உடுக்கு, பறை, பெரிய மேளம் ஓங்கி ஒலிக்க கலைஞர்கள் மேடையை நோக்கி அணி வகுத்து நடந்தனர். சபை வணக்கத்தின் பின் ''சாவுக்கு அடிக்கும் பறை போர்ப்பறையாக மாறியிருக்கிறது'' எனக் கூறி கலை நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார் ''தன்னானே'' இசைக்குழு இயக்குநர் கே.ஏ.குணசேகரன்.




**தப்பாட்டம், பெரிய மேளம், காவடியாட்டம் மேடைக்கு வந்தது; இனி பார்ப்பனீய இசையும் ஆட்டமும் பாடைக்குத்தான்.**

வானொலியை வம்புக்கிழுத்தது ''கூட்டம் ரொம்ப கூடியிருச்சு'' என்ற பரவை முனியம்மா குழுவினர் பாடல்; அவர்களின் ''நாடு சும்மா கெடந்தாலும் கெடக்கும்'' என்ற பாடலில் 'நவநாகரீக'த்தைப் பற்றிய கேலி பொங்கி வழிந்தது; குணசேகரனின் ''பாவாடை சட்டை கிழிஞ்சு போச்சுதே'' பாடலில் சோகம் இழைந்தோடியது. துணிச்சலுக்குத் தீப்பந்தாட்டம்; நளினத்திற்கு மயிலாட்டம்; குறவன் - குறத்தி நடனம்; கரகாட்டம்; காவடியாட்டம்; நெல்லை மாவட்டக் குழுவினரின் ''சுடலை மாடன் கதை'' சொன்ன மகுடாட்டம்; தன்மானத்திற்கு ''மனுசங்கடா நாங்க மனுசங்கடா'' என்ற பாடல் - என உயிரோட்டமான உணர்ச்சிகளை பாடலிலும், இசையிலும், நடனத்திலும் காணவும் கேட்கவும் முடிந்தது. வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு நிரந்தர தீர்வு ஆயுதப் புரட்சிதான் என வசனமில்லாது காட்சிருபமாக நடித்துக் காட்டிய மாணவர் குழு மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது. ம.க.இ.க. குழுவினர் சீரங்கப் பெருமாள் அரங்கநாதரின் சாதிப் பற்றையும், தியாகய்யர் உற்சவத்தையும் அம்பலப்படுத்தினர்; காவேரி இல்லையெனில் அந்நதிக் கரையோர மக்களின் ஜீவன் இல்லை என்பதை ''ஏத்தப் பாடலிலும் நாத்து நடும் பாடலிலும்'' வடித்தனர்; ஆனால் காவேரிக் கரையில் கச்சேரி நடத்தும் அவாளிடம் இதைப் பற்றிய பாடல் எதுவும் இல்லை என அம்பலப்படுத்தினர்.

காலையில் கருத்தரங்கம் தொடங்கி கலை நிகழ்ச்சி நள்ளிரவில் முடியும் வரை எந்தவொரு சிறு சலசலப்போ இடையூறோ இன்றி நிகழ்ச்சிகள் நடந்து முடிந்தன. எட்டாயிரத்திற்கும் அதிகமாக கூடியிருந்த பொது மக்களிடமும் கூட கட்டுப்பாட்டை காணமுடிந்தது. இதன் காரணம் ஒடுக்கப்படும் இனத்தின், மக்களின் உணர்ச்சியை வெளிப்படுத்திய நிகழ்ச்சியிது என்பதுதான். ''திருவையாற்றில் அனுமதி மறுத்ததின் மூலம் அவர்கள் தஞ்சையை சேரியாக அறிவித்துவிட்டார்கள்'' என்றார், மருதையன். இந்த நாட்டாண்மையை எதிர்க்கத் துணியாவிட்டால் தமிழ் மக்கள் தம் முகவரியை இழக்க நேரும். ''அடுத்த ஆண்டு இசை விழா திருவையாறில்'' என்ற அறிவிப்பு ''வருங்காலம் நமது'' என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவதாக அமைந்தது.

மறுபுறம், இச்சிறு பொறி அவாளைப் பிதற்ற வைத்திருப்பதையும் உடனடியாகக் காண முடிந்தது; ''இசைக்கு மொழி தேவையில்லை'' என குன்னக்குடி வைத்தியநாதன் பேசியிருப்பதோடு ''அப்பரும் சுந்தரரும் தியாகய்யரைப் பாராட்டி யிருக்கின்றனர்'' என வரலாற்றையும் புரட்டி உளறியிருக்கிறார். இதனை எதிர்த்து தமிழிசை சங்கத்தின் பொறுப்பாளர்களுள் ஒருவரான தொழிலதிபர் எம்.ஏ.சிதம்பரம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

''ஏன் சாதாரண இசை விழாவிற்கு அரசு இப்படி பயப்பட வேண்டும்?'' எனக் கேட்டார், ஒரு காவல் துறை அதிகாரி. அது திருடர்களின் அச்சம் என்று அந்த போலீஸ்காருக்கு புரியவில்லை போலும்!

● தொகுப்பு: ரஹீம்



படிப்பகம்

## போலீசு, ராணுவ மோதலில் அப்பாவிகளும் தாக்கப்பட்டனர்

ஐதராபாத்திலுள்ள இந்திய இராணுவப் பயிற்சி முகாமில், கார்வால் துப்பாக்கிப் படையின் சுபேதாரான மேஜர் பிரேம் குமாரின் இரு குழந்தைகள் கடந்த ஜனவரி 31-ம் தேதியன்று சமூக விரோதிகளால் கடத்திச் செல்லப்பட்டு கிணற்றில் மூழ்கடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. குழந்தைகளைக் காணவில்லை என்று போலீசு நிலையத்தில் புகார் கொடுத்து இரு நாட்களாகியும் கூட உரிய நடவடிக்கை எடுக்காத ஆத்திரத்தில், 50-க்கும் மேற்பட்ட ராணுவ சிப்பாய்கள் துப்பாக்கி, கத்தி, கட்டைகளுடன் வெறியோடு கூச்சலிட்டுக் கொண்டு லாங்கர் ஹாஸ் போலீசு நிலையத்தைத் தாக்கிச் சூறையாடினர். போலீசாரை ராணுவ வண்டிகளில் கடத்திச் சென்று, சீருடைகளைக் கிழித்தெறிந்து மிருகத்தனமாகத் தாக்கிக் குப்பை மேட்டில் வீசியெறிந்தனர். அதன் பிறகும் வெறி அடங்காமல் போலீசு நிலையத்தின் அருகிலுள்ள முகம்மதிய தெருவுக்குள் புகுந்து, கண்ணில் பட்டவர்களையெல்லாம் துப்பாக்கிக் கட்டையால் தாக்கி, 14 வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

முகம்மதிய தெருவைச் சேர்ந்த ரஷீத்கான் என்பவன் குடிபோதையில், ஒரு மாதத்துக்கு முன்பு ராணுவக் குடியிருப்பு பகுதியில் கலாட்டா செய்தபோது சிப்பாய்களால் அடித்து விரட்டப்பட்டான். இவன் முகமதிய தெருவைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் சமியுல்லாகானின் சகோதரன் ஆவான். தனக்கு நேர்ந்த அவமானத்துக்குப் பழிவாங்கவே அவன் குழந்தைகளை கடத்திச் சென்று கொன்றிருக்கலாம் என்ற ஊகத்தினால் ராணுவத்தினர் முகம்மதிய தெருவுக்குள் புகுந்து இவ்வாறு அட்டூழியம் புரிந்தனர். முகம்மதிய தெருவை துப்பாக்கி முனையில் முற்றுகையிட்ட ராணுவத்தினர், சப்-இன்ஸ்பெக்டர் சமியுல்லாகானின் வீட்டைச் சூறையாடியதோடு, ரஷீத்கானைத் தேடுவது என்ற பெயரில் 14 வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தியுள்ளனர்.

**முகமதியர் குடியிருப்பில் புகுந்து ராணுவக் கும்பல் வெறியாட்டம்**



''ரஷீத்கான், பாக். உளவுப் படையான ஐ.எஸ்.ஐ. யின் கையாள்; குழந்தைகள் கொலைக்கு ஐ.எஸ்.ஐ.தான் காரணம்; அதன் சதித்திட்டப்படி முகம்மதிய தெருவிலுள்ளவர்கள் தாங்களே தமது வீடுகளுக்குத் தீவைத்துக் கொண்டு இந்திய ராணுவத்தின் மீது பழிசுமத்துகின்றனர்'' என்கிறது ராணுவம். இதை மறுத்து அறிக்கை விடுத்துள்ள போலீசார், ''ஆதாரமின்றி சந்தேகத்தின்பேரில் ரஷீத்கானை கைது செய்ய முடியாது; குழந்தைகள் கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கி மாண்டிருக்கலாம்; இருதரப்பு கூட்டு விசாரணைக்கு ஒப்புக் கொள்ள முடியாது'' என்று கூறி, ராணுவத்தினர் மீது கொலை முயற்சி, சூறையாடல் குற்றங்களின் கீழ் வழக்கு பதிவுசெய்துள்ளனர். போலீசும், ராணுவமும் ஒருவரையொருவர் பழிதூற்றிக் கொள்ளும் அதே சமயம், குழந்தைகளைக் கொன்றது யார் என்பது மர்மமாகவே உள்ளது.

ராணுவத்தினரின் வெறியாட்டம் எல்லை மீறிப் போனதும், அவர்களைச் சாந்தப்படுத்தும் பொருட்டு ராணுவக் குடியிருப்புக்குச் சென்று குழந்தைகளை இழந்த தாயிடம் ஆறுதல்கூற ஆந்திர கவர்னர் புறப்பட்டுச் சென்றார். ஆனால் ராணுவ சிப்பாய்களும் அவர்களது மனைவிமார்களும் கவர்னரைக் ''கெரோ'' செய்து ஆபசமாகத் திட்டி சட்டையைக் கிழித்து விரட்டினர். பின்னர், ராணுவ உயரதிகாரிகள் தலையிட்டு, கவர்னரைப் பாதுகாப்புடன் அழைத்துச் சென்றனர்.

## 'மார்க்சிஸ்டு'களின் துரோகம் தொழிலாளர்களின் போராட்டம்

கடைந்தெடுத்த தொழிற்சங்க துரோகிகளைத் தூக்கியெறிந்துவிட்டு, தாங்களே புதிய சங்கம் அமைத்துப் போராடும் புதிய போக்கு தொழிலாளர்களிடையே பரவி வருகிறது. மே.வங்கத்தின் ஹவுரா மாவட்டத்திலுள்ள கனோரியா சணல் ஆலை கதவடைப்பு செய்ததால் பாதிக்கப்பட்ட 4,000 தொழிலாளர்கள், சி.ஐ.டி.யு., ஐ.என்.டி.யு.சி., ஏ.ஐ.டி.யு.சி. முதலான தொழிற்சங்கங்களின் துரோகத்தனத்தை முறியடித்து, தமது சொந்த சங்கத்தை நிறுவி, ஆலையையும் கைப்பற்றி இயக்கி வருகின்றனர்.

மே.வங்கத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் 10 பெரும் சணல் ஆலைகள் நலிவடைந்து மூடப்பட்டு, 40,000 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். அதன் தொடர்ச்சியாக 6 மாதங்களுக்கு முன்பு கனோரியா சணல் ஆலையும் மூடப்பட்டது. நட்டத்தைக் காட்டி தொழிலாளர்களுக்கு ஊதிய பாக்கிகளையும் தரமறுத்தது நிர்வாகம். ஆலையை நவீனப்படுத்த திட்டமிட்டுள்ளதால், 2,000 தொழிலாளர்களை வெளியேற்றுவதைத் தவிர வேறுவழியில்லை என்று நிர்வாகம் வாதிட்டது. போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட தொழிற்சங்கத் தரகர்கள் இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு தொழிலாளர்களுக்கு துரோகமிழைத்தனர். ஆத்திரமடைந்த தொழிலாளர்கள் சங்கக் கொடிக்கம்பங்களை வெட்டி வீழ்த்தி, தலைவர்களை உதைத்து வெளியேற்றிவிட்டு, ''சங்ராமி ஷ்ராமிக் சங்கம்'' எனும் புதிய தொழிற்சங்கத்தை நிறுவிக் கொண்டனர். துரோக ஒப்பந்தத்தை கிழித்தெறிந்த தொழிலாளர்கள் கடந்த ஜனவரியில் ஆலையின் பூட்டை உடைத்து, உள்ளே நுழைந்து உற்பத்தியையும் துவக்கினர். நலிவடைந்த ஆலைகளுக்கு அரசு தரும் மானியம் மற்றும் வங்கி உதவியுடன் ஆலையைத் தாங்களே இயக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

கனோரியா சணல் ஆலையைத் தொடர்ந்து மே.வங்கத்தின் விக்டோரியா சணல் ஆலை மற்றும் ரெமிங்டன் இன்ஜினீரிங் ஆலைத் தொழிலாளர்களும்



படிப்பகம்

www.padippakam.com

**போலிக் கம்யூனிஸ்டுகளின் துரோகத்திற்கு எதிராக தொழிலாளர்களின் போர்**

போலிக் கம்யூனிஸ்டு தொழிற்சங்கத் துரோகிகளைத் தூக்கியெறிந்து விட்டு, தமது சொந்த சங்கத்தை நிறுவி ஆலையைக் கைப்பற்றியுள்ளனர். ஏற்கனவே பம்பாயிலுள்ள "காமினி ட்யூப்ஸ்" நிறுவனத்தை தொழிலாளர்கள் கைப்பற்றி இயக்கி வருகின்றனர். இதைத் தொடர்ந்து பம்பாயில் நலிவடைந்து மூடப்பட்ட 10 ஆலைகளைக் கைப்பற்றி இயக்க தொழிலாளர்கள் முயற்சித்து வருகின்றனர்.

புதிய பொருளாதாரக் கொள்கை - நவீன மயமாக்கலின் விளைவாக நாடெங்கும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து வீதியில் வீசியெறியப்பட்டு வருகின்றனர். இப்புதிய நிலைமையை எதிர்கொண்டு முறியடிக்கத் திராணியற்ற தொழிற்சங்கத் தரகர்களோ, தமது துரோகத்தனத்தால் தொழிலாளர்களிடம் மேலும் அம்பலப்பட்டு தனிமைப்பட்டு கிடக்கின்றனர். அதேசமயம் ஆலைகளைக் கைப்பற்றி இயக்குவதென்பதை தொழிலாளர்களின் புரட்சிகரப் போராட்டமாக நாம் அங்கீகரிக்க முடியாது. அரசு அதிகாரம் தொழிலாளர்கள் கையில் இல்லாமல், இத்தகைய கற்பனாவாத சோசலிச, சாகச நடவடிக்கைகளில் தொழிலாளர்கள் இறங்குவது விபரீத விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதை மறந்து விடவும் கூடாது.

## நிலக்கரிச் சுரங்க விபத்து மே.வ. அரசின் அலட்சியம்

கடந்த ஜனவரி 26-ம் தேதியன்று மே. வங்கத்தின் பர்துவான் மாவட்டத்தில் அசன்சால் அருகிலுள்ள நியூ கேண்டா நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட கோரமான விபத்தில் 55 தொழிலாளர்கள் தீயில் சிக்கி மாண்டு போயுள்ளனர். அவசரநிலைப் பாசிச ஆட்சியின் போது நடந்த சாஸ்நலா சுரங்க விபத்துக்கு அடுத்து நடந்துள்ள மிகப்பெரிய கோர விபத்து இது தான்.

நிலக்கரி கனிவலம் மிக்க ராணிகஞ்ச் - அசன்சால் பகுதியில் திறந்த வெளிச் சுரங்கங்கள் குறைவு, ஏறத்தாழ 300 அடிக்கு பூமியைத் துளைத்து, "டோலி"'களில் தொழிலாளர்கள் உள்ளே இறங்கி நிலக்கரி வெட்டி எடுக்கும் உள் சுரங்கங்களே அதிகம். அரசு நிறுவனமான கிழக்கத்திய நிலக்கரி வயல் நிறுவனத்தின் (ECL) கட்டுப்பாட்டிலுள்ள கேண்டா சுரங்கமும் 350 அடி ஆழம் கொண்ட உள் சுரங்கம் ஆகும்.

ஜனவரி 26 அன்று மதியம் 3.30 மணியளவில் இச்சுரங்கத்தின் இரண்டாவது, மூன்றாவது குழிகளுக்கு நடுவே, அழுத்தம் காரணமாக வெப்பம் அதிகரித்து கூடவே "மீதேன்" வாயுப் பெருக்கத்தால் திடீரென நிலக்கரி வயல் வெடித்து தீப்பற்றிக் கொண்டது. இக்குழிகளில் வேலை செய்த 55 தொழிலாளர்கள் தீயிலும் நச்சுப் புகையிலும் சிக்கி அநியாயமாக மாண்டு போயுள்ளனர்.

விபத்து நேர்ந்ததும் சுரங்கத்தினுள் சிக்கிய தொழிலாளர்களை மீட்க 8 மணி நேரமாக நிர்வாகம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவசர மீட்புப் பணிக்கான சாதனங்கள் ஏதும் நிர்வாகத்திடம் இல்லை. உள்ளே சிக்கிக் கொண்ட தொழிலாளர்களின் குடும்பத்தாருக்குக்கூட நிர்வாகம் தகவல் தரவில்லை. அவ்வளவு அலட்சியமாகவே நிர்வாகம் செயல்பட்டது. நள்ளிரவுக்குப் பிறகு செயல்படத் தொடங்கிய மீட்புப் படையினர் சுரங்கத்தினுள் பெருந்தீயும் புகைமூட்டமும் வெப்பமும் நிலவியதால் உள்ளே செல்லவே முடியவில்லை. பின்னர் திரவ நைட்ரஜனைச் செலுத்தி வெப்பத்தைத் தணித்த போதிலும் அதிகாலை வரை அவர்களால் ஒரு தொழிலாளியின் சடலத்தையே மீட்க முடிந்தது. நச்சுப் புகை மூட்டம் காரணமாக ஜனவரி 30-ந் தேதிவரை 34 சடலங்கள்தான் மீட்கப்பட்டன.



நில அழுத்தம் காரணமாக தோண்டப்படாத நிலையிலேயே பூமிக்கடியில் நிலக்கரி பற்றி எரிவதும் அதன் காரணமாக பூமியின் மேற்பரப்பில் வெடிப்புகள் ஏற்படுவதும் இப்பகுதியில் தொடர்ந்து நடக்கிறது. இதுபற்றி சுற்றுச் சூழல்வாதிகள் எச்சரித்தும்கூட அரசும் நிர்வாகமும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேயில்லை. சுரங்கத்தினுள் 'மீதேன்', 'கார்பன்டை ஆக்சைடு' வாயு அழுத்தம் பற்றி அன்றாடம் சோதித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. புதிதாக தோண்டிச் செல்லும்போது மேற்கூரைகளைப் பலப்படுத்துவதும் இல்லை. இத்தகைய பாதுகாப்பற்ற சூழ்நிலையும் நிர்வாகத்தின் அலட்சியமுமே இக்கோரமான விபத்துக்கு காரணமாகும். ஒவ்வொரு ஆண்டும் இந்திய நிலக்கரிச் சுரங்கங்களில் 100-க்கும் மேற்பட்ட தொழிலாளர் பலியாவதும் ஏறத்தாழ 500-க்கும் மேலானோர் படுகாயமடைவதும் தொடர்கிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி கிஞ்சித்தும் அக்கறையற்று, தொழிலாளர்களை மரணக் குழிக்குள் தள்ளிக் காவுகொண்ட அரசுதான் முதல் கிரிமினல் குற்றவாளி என்பதையே இக்கோரவிபத்து மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

## தொழிலாளர் விரோத சட்டம் ராவ், ஜெர்மனிக்கு வாக்குறுதி

நாட்டை ஏகாதிபத்திய வல்லரசுகளிடம் மறுஅடகு வைத்துவிட்ட பிரதமர் நரசிம்மராவ், அடுத்த கட்டமாக நாட்டையே ஏலம் போட்டு விற்பதற்காக கடந்த மாதத்தில் ஜெர்மன், சுவிஸ் நாடுகளுக்கு 6 நாள் பயணம் மேற்கொண்டு 'வெற்றி' யுடன் திரும்பியுள்ளார். சுவிஸ் நாட்டின் டாவோஸ் நகரில், 800-க்கும் மேற்பட்ட பன்னாட்டு ஏகபோக முதலாளிகளும் 180 நாடுகளின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக உள்ள சர்வதேச பொருளாதார - வர்த்தக சங்கத்தின் கூட்டத்தில் பேசிய அவர், "இந்தியாவில் அன்னிய முதலீடுகளுக்கு எவ்விதத் தடையோ, தாமதமோ, கட்டுப்பாடோ இல்லாமல் செய்துள்ளோம்" என்று தாராளமயக் கொள்கையை விளக்கி வரவேற்றுள்ளார். நரசிம்மராவின் உத்திரவாதத்தையும், இந்தியா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் பார்த்து பூரித்துப் போன மேற்கத்திய பகாசுர முதலாளிகள், 1994-ம் ஆண்டை இந்திய முதலீட்டுக்கான ஆண்டாகக் கொண்டாட முடிவு செய்துள்ளனர்.

அதன்பிறகு ஜெர்மனிக்குச் சென்ற ராவ், அந்நாட்டு அதிபரையும், எதிர்க்கட்சிகளின் தலைவர்


படிப்பகம்

www.padippakam.com

களையும், தேசங்கடந்த ஏகபோக தொழிற்கழகங்க ளான சீமென்ஸ், பி.ஏ.எஸ்.எப்., பாயர், மெர்சிடீஸ் பென்ஸ் முதலான நிறுவனங்களின் தலைமை இயக்கு னர்களையும் சந்தித்து, இந்தியாவில் முதலீடு செய்ய இதுவே சரியான நேரம் என்றும் அதற்காக மேலும் அகலமாக கதவைத் திறந்து விடுவதாகவும் வாக்கு றுதி அளித்துள்ளார். ''அன்னிய முதலீடுகளுக்கு முழு பாதுகாப்பு அளிக்கப்படும்; தொழிற்தகராறுகள் ஏற் படா வண்ணம் தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத் தப்படும்'' என்று உத்திரவாதம் அளித்துள்ளார்.

தற்போது ஒரு தொழில் நிறுவனத்தை மூடநேர்ந் தாலோ, லே-ஆஃப் சூழ்நிலை ஏற்பட்டாலோ அதற்கு முன் தொழிலாளர் நலத்துறையிடம் முன் அனுமதி பெற வேண்டும் என்று சட்டம் உள்ளது. அன்னிய ஏகபோக முதலாளிகள் இச்சட்டத்தை நீக் கக் கோருகின்றனர். இதன்படி, நலிவடைந்த ஆலைக ளில்கூட தொழிலாளியின் வேலைக்கு உத்திரவாதம் அளிக்கும் 25 (N), 25 (O) ஆகிய தொழிற் தகராறு சட்டங்களை நீக்கிவிட ராவ் அரசு முடிவு செய்துள் ளது. இது தவிர, ''தங்கக் கைலுக்கல்'' - என்கிற கட்டாய ஓய்வுத் திட்டத்தின் மூலம் தொழிலாளர் களை வீட்டுக்கு அனுப்ப புதிய முயற்சிகள் மேற் கொள்ளவும் ஆலோசித்து வருகிறது.

இந்தியாவை விற்க ஏலம் போட்டுவிட்டு வந்த ராவ் கும்பலின் மீது நம்பிக்கை கொண்ட ஜெர்மன் நாட்டின் 5 பெரும் எதிர்கட்சிகள், ஜெர்மனியில் ஆட்சி மாறினாலும் தாங்கள் தொடர்ந்து இந்தியாவில் முதலீடு செய்யும் கொள்கையை மாற்ற மாட்டோம் என்று உறுதியளித்துள்ளன. நடப்பு ஆண்டில் கணக் கற்ற ஜெர்மானிய நிறுவனங்களின் முதலீட்டுக்கும், விரிவாக்கத்துக்கும் ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்

**நிலக்கரி சுரங்க விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினர்; எதிர்காலத்தைப் பற்றிய கவலை!**



ளன. நாட்டை குப்புறத்தள்ளி ஏகாதிபத்தியங்களுக்கு மறுகாலனியாக்க ராவ் கும்பல் இப்போது, தொழிலா ளர்களின் அடிப்படை உரிமைக்குக் குழிபறிக்கவும் கிளம்பிவிட்டது. தேசவிரோத, மக்கள் விரோத இப் பாசிச கும்பலை வீழ்த்த நாட்டு மக்கள் கிளர்ந்தெழ வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது.

## முஸ்லீம் லீகில் பிளவு: தலைவர்களின் சந்தர்ப்பவாதம்

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் இரண்டாகப் பிளவுபட்டுப் போய்விட்டது. 21 ஆண்டு காலமாக முஸ்லீம் லீக் தலைவராக நீடித்து வந்த இப்ராஹிம் சுலைமான் சேட் தலைமையில் ஒரு குழுவாகவும், தற்போதைய புதிய தலைவர் பனட்வாலா தலைமை யில் ஒரு குழுவாகவும் அது உடைந்து போயுள்ளது. பாபர் மசூதி இடிக்கப்பட்டவுடன், கேரளாவில் காங்கி ரசு கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லீம் லீக், கூட்டணியை முறித்துக் கொள்ள வேண்டும் என்று சேட் வலியுறுத்தி வந்தார். ஆனால் கேரளா முஸ்லீம் லீம் இதை ஏற்க மறுத்து விட்டது. பின்னர் உள்துறை அமைச்சர் சவாண், அயோத்தியில் பாபர் மசூதியை மீண்டும் கட்டித் தருவதாக பிரதமர் ராவ் வாக்குறுதி அளிக்கவே இல்லை என்று நாடாளுமன்றத்திலேயே பகிங்கரமாக அறிவித்ததும், காங்கிரசுடன் உறவை முறித்துக் கொள்வது பற்றி முஸ்லீம் லீகில் மீண்டும் இப் பிரச்சனை முன்னுக்கு வந்தது. அதன் பிறகு கேர ளாவில் ஒத்தப் பாலம் இடைத்தேர்தலில் காங்கிரசு தோல்வியடைந்ததும், மீண்டும் சேட் கோஷ்டியினர் இக்கோரிக்கையை வலியுறுத்தினர். முஸ்லீம் மக்களி டம் சேட்டின் கோரிக்கைக்கு ஆதரவு இருந்த போதி லும், முஸ்லீம் லீக்கின் பிற தலைவர்கள் இதனை ஏற்க மறுத்தனர்.

கடந்த பிப்ரவரி முதல் வாரத்தில் அக்கட்சியின் தேசிய நிர்வாகக் குழு கூடியபோது, சேட் இக்கோரிக் கையை முன்வைத்த போது பனட்வாலா தலைமையி லான எதிர்கோஷ்டியினர் இதைப் புறக்கணித்து விட்டு, நிர்வாகக் குழு தேர்தலை உடனடியாக நடத் தக் கிளம்பினர். விரக்தியடைந்த சேட் தாம் பதவி விலகுவதாக அறிவித்தார். நிர்வாகக் குழுவின் பெரும்பான்மையினரை தம் பக்கம் திரட்டிக் கொண் டிருந்த பனட்வாலா புதிய தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார். ஆனால் அடுத்த நாளே அவசரமாகவும் நிர்ப்பந்தமாகவும் தேர்தல் நடத்தப்பட்டதைக் கண் டித்து சேட் ஆதரவாளரான சையத் கவுஸ் காமூஷி தனது துணை தலைவர் பதவியை ராஜினாமா செய் துள்ளார். காங்கிரசுடன் கூட்டணியை முறித்துக் கொள்வது பற்றியோ, பாபர் மசூதியை மீண்டும் நிறு வுவது பற்றியோ இத்தலைவர்களுக்கு அக்றையே இல்லை; பதவி சுகத்தில் அவர்கள் கொள்கையை மறந்து விட்டனர் என்று அவர் சாடுகிறார்.

பனட்வாலா மற்றும் தமிழகத்தின் அப்துல் சமது முதலானோரைக் கொண்ட புதிய தலைமையோ, சேட்டின் கோரிக்கையில் எவ்வித நியாயமுமில்லை. பாபர் மசூதியை மீண்டும் காட்டித் தருவதாக காங்கி ரசு உறுதியளித்துள்ளது. காங்கிரசு கூட்டணியில் இருப்பதுதான் சிறுபான்மை முஸ்லீம்களுக்குப் பாது காப்பானது. சில முஸ்லீம் தீவிரவாதிகளின் நலனுக் காக சேட் கலகம் செய்வதை அனுமதிக்க முடியாது என்கின்றனர். கேரளாவில் காங்கிரசு கூட்டணியை முறித்துக் கொள்ள மாட்டோம் என்று மந்திரி பதவி சுகத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். மறுபுறம், காங்கிரசு டன் உறவை முறித்துக் கொண்டு, மதச்சார்பற்ற ஜன நாயக சக்திகளுடன் ஐக்கியப்படுவதற்குப் பதிலாக, மத அடிப்படைவாதிகள் - தீவிரவாதிகளுடன் கைகோர்த்துக் கொள்ள முயற்சிக்கிறார், சுலைமான் சேட்.

கடைசியில், முஸ்லீம் லீக்கைப் பிளவு படுத்தி காங்கிரசுப் பெருச்சாளிகள் குளிர்காயந்து கொண்டி ருக்கின்றனர். இவ்வளவு துரோகங்கள், படுகொலைக் குப் பிறகும் காங்கிரசின் காலை நக்கிக் கொண்டு, ஒரு பிரிவு முஸ்லீம் லீக்கின் சந்தர்ப்பவாத தலைவர்கள் கேரள கூட்டணி மந்திரிசபை பதவிகளில் இன்னமும் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com

# முற்றும் காஷ்மீர் விவகாரம் சுற்றும் பிணந்திண்ணி கழுகுகள்

காஷ்மீரில் ஹஸ்ரத்பால் நிகழ்ச்சியைத் தொடர்ந்து இந்திய ராணுவத்தின் பயங்கரவாதத் தாக்குதல்களும் அதற்கு எதிரான மக்களின் கிளர்ச்சிகளும் அதிகரித்த வண்ணமே உள்ளன. இத்தகைய ராணுவத் தாக்குதலில் மிகவும் கொடுமையானது குப்வாரா பகுதியில் நடந்த படுகொலையாகும். ராணுவம் மற்றும் அதன் கொடிய அடக்குமுறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜன. 26-ம் நாளை காஷ்மீர் மக்கள் துக்க நாளாக அறிவித்து "பந்த்" நடத்தினர். அன்று கடைகளை மூடியவர்கள், நடைபாதை வாசிகள் என கண்ணில் பட்ட எல்லோரையும் கண்மூடித்தனமாகத் தாக்கி வெறியாட்டம் போட்டது, ராணுவக் கும்பல். குடியிருப்புப் பகுதிகளின் மின்சாரத்தைத் துண்டித்துவிட்டு வீடு புகுந்து தாக்குவது, சுட்டுக் கொல்வது, பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வது என்பது முன்பே ராணுவத்தினரின் தொடர் நடவடிக்கையாக உள்ளது. அன்றும் இவை நடந்தன; வழக்கம்போல இராணுவத்துடன் தீவிரவாதிகள் மோதலில் இறந்ததாகப் புளுகினார்கள்.

மறுநாளும் இப்படி வெறியாட்டம் நடத்திச் சென்ற ராணுவக் கும்பலில் ஒரு பிரிவினர், குப்வாரா பகுதியில் ஒரு பாலத்தைக் கடக்கும்போது, எங்கோ மலையில் கேட்ட வெடிச்சத்தத்தைத் தொடர்ந்து, வெறிகொண்டு கண்மூடித்தனமாக சாலையின் எதிரே வந்த வாகனங்களை எல்லாம் சுட்டனர். இதில் ஒரு பேருந்தில் இருந்த 20 -க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களும் ஒரு போலீசு 'ஜீப்' பிலிருந்த 3 போலீசுக்காரர்களும் உயிரிழந்தனர்; பலர் படுகாயமுற்றனர். அந்த பாலத்திற்கும் வாகனங்களுக்கும் தீவைத்தும் வெறியாட்டம் போட்டது ராணுவக் கும்பல்.

வழக்கம் போலவே ராணுவமும் அரசும் இவை "தீவிரவாதிகளின் தாக்குதல்" என்று கூசாமல் புளுகின. ஆனால் ராணுவத்துக்கும் போலீசுக்கும் உள்ள முரண்பாடு காரணமாக உண்மை வெளியே வந்ததும் அரசு விசாரணை நாடகம் எல்லாம் நடத்தி முடித்தது. இப்படி ராணுவத்தின் கோரத்தாக்குதல் - கொலைகளுக்கு லால்சௌக், சோபோர், குப்வாரா என பல சம்பவங்கள் உதாரணங்களாக தொடர்ந்து கொண்டே போகின்றன.

மேலும் அண்மைக்காலமாக, குறிப்பாக எல்லையோரப் பகுதிகளில் பாகிஸ்தான் ஆதரவுப் பெற்ற மதவெறித் தீவிரவாதிகளுக்கும் இந்திய ராணுவத்திற்கும் இடையிலான மோதலிலும், இந்திய ராணுவத்தின் தேடுதல் வேட்டையிலும் அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்துள்ளனர். கடந்த 20 நாட்களில் பூஞ்ச், ராஜௌரி, பெரமுல்லா மாவட்டங்களில் 30-க்கும் மேற்பட்ட தீவிரவாதிகளும் 20-க்கும் மேற்பட்ட அப்பாவி மக்களும் கொல்லப்பட்டனர். ஜம்மு-காஷ்மீர் முழுவதும் ராணுவத்தின் கொடுங்கோலாட்சி தான் நடக்கிறது. ராணுவ பயங்கரவாதத் தாக்குதலால் மக்களிடையே பீதியும் பதட்டமுமே நிலவுகிறது. வெளியே தலைகாட்ட முடியாத - அறிவிக்கப்படாத ஊரடங்குதான் அமுலில் இருக்கிறது. சிறு தொழிலகத் தொழிலாளர்கள், வியாபாரிகள், கூலி உழைப்பாளிகள், படகோட்டிகள் போன்ற சுற்றுலாவை நம்பி வாழ்ந்த உழைப்பாளிகள் எல்லோரும் வேலையிழந்து பட்டினியோடு போராடிக் கொண்டுள்ளனர். அரசின் நிர்வாக - உதவிப் பணிகளும் பலபகுதிகளில் நிறுத்தப்பட்டுவிட்டன. பெரும்பாலான பகுதிகளில் குடிநீர், மின்சாரம், மருத்துவம், கல்வி எதுவும் அறவே இல்லை. குறிப்பாக பூஞ்ச் ராஜௌரி எல்லைப் பகுதிகள் இருண்ட காடுகளாக காட்சியளிக்கின்றன. ஆசிரியர்கள், மருத்துவர்கள், சமூக அக்கறையுள்ளோர் பலர் தமது முயற்சியால் மக்களிடம் நிதி திரட்டியே கல்வி, மருத்துவம் மற்றும் பொது மராமத்துப் பணிகளை செய்து வருகிறார்கள். இந்திய அரசோ, ஜம்மு-காஷ்மீருக்கு நிர்வாக - உதவிப் பணிகளுக்கு ஒதுக்கும் குறைந்த தொகை நிதியைப் பற்றி ஜம்பம் அடித்துக் கொள்ளும் அதேசமயம் இப்பகுதி ராணுவத்தினருக்கு நிதியை கோடிக் கணக்கில் கொட்டுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ, குப்வாரா படுகொலைக்குப் பின் காஷ்மீரில் ஹிட்லரை ஒத்த இனவெறித் தாக்குதல், மனித உரிமை மீறல்கள் நடப்பதாகக் கூறி காஷ்மீரை பிரச்சினைக்குரிய பகுதியாக அறிவிக்கக் கோரி வருகிறார். "காஷ்மீரை விடுதலை செய்வோம்" என்ற கூச்சலோடு இந்தியாவைக் கண்டித்து நரசிம்மராவின் உருவ பொம்மைகளை கொளுத்தி, ஒரு நாள் அரசு "பந்த்" - தையும் நடத்தி முடித்துள்ளார். ஜெனிவாவில் கூடிய ஐ.நா. சபைக் கூட்டத்திலும் ஐ.நா. மனித உரிமை குழுமத்திலும் பாகிஸ்தான் கிளப்பியது. மறுபுறம் எல்லை மாவட்டங்களில் தனது உளவுத் துறை ஐ.எஸ்.ஐ. மற்றும் மத தீவிரவாத அமைப்புகள் (ஹிஸ்புல் முஜாகிதீன் குழு, ஜமாத் - இ - இஸ்லாமி, ஹர்கட் - உல் - அன்சார் குழு, முசல்மான் குழு போன்றவை) மூலம் குண்டுவெடிப்பு - ராக்கெட் தாக்குதல்களையும், ஆயுத மோதல்களையும் தூண்டி நடத்திவருகிறது.

கிளிண்டன் நேரடியாக, குலாம் நபி எனும் பாக். ஆதரவு காஷ்மீர் போராளிக்கு ஆதரவு தெரிவித்துக் கடிதம் எழுதியது போல் அமெரிக்காவின் தெற்காசிய வெளியுறவுத்துறை அதிகாரி ராபின் எல். ரெபல் அறிக்கையும் சர்ச்சைக்குள்ளானது. "காஷ்மீர் பிரச்சினைக்குரிய - பேசி தீர்க்க வேண்டிய பகுதியே" என்றும், போஸ்னியா, ஆப்கானோடு காஷ்மீர் பிரச்சினையை ஒப்பிட்டும் ரெபல் பேசினார். இந்தியாவில் மனித உரிமை மீறல் தொடர்பாக காஷ்மீர், பஞ்சாப்பைச் சுட்டிக்காட்டி குற்றம் சாட்டியதையும் ரெபல் உறுதிப்படுத்தினார். உலகளவில் இப்பிரச்சினையில் தற்போது இந்தியா நன்றாகவே தனிமைப்பட்டு செய்வதறியாது விழிபிதுங்கி நிற்கிறது. வெற்றுச் சவடால்கள், அவதூறுகள், தகிடுதத்தங்கள் மூலமே சமாளிக்க முயல்கிறது.

பாகிஸ்தானின் மனித உரிமை மீறல், சிந்தி - பலுச்சிஸ் தானியர்கள் மற்றும் அகமதியர்கள் - ஷியா பிரிவு சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை எல்லாம் எதிராக நிறுத்தி பெனாசிருக்கு பதிலடி கொடுக்கும் ராவ் கும்பல், அமெரிக்காவிடமோ கெஞ்சுகிறது. அமெரிக்கா காஷ்மீர் மீதான தனது கருத்தைத் தெளிவாக்க வேண்டும் என்கி

பெனாசிர் கொடும்பாவியை எரிக்கும் காங்கிரசு இளைஞர்கள்; 'தேசிய' வெறியூட்டி ஆதாயம்





படிப்பகம்

www.padippakam.com

றது. மனித உரிமை மீறல்கள் இல்லை; அணு ஆயுதத் தடுப்பு ஒப்பந்தம் மீறப்பட வில்லை என்று ஆதாரம் காட்டுகிறது. அமெரிக்க அதிகார வர்க்கத்தில் தமக்கு விசுவாசமாக உருவாக்கி வைத்திருக்கும் ''லாபி'' எனப்படும் கும்பல் மூலம் சிலரை இந்தியாவிற்கு ஆதரவாக அறிக்கை விட வைத்தார்கள். பிரிட்டன், ஜெர்மன், செக் அதிபர்கள் பேசிய பொது வான பேச்சுக்களை எடுத்து விளம்பரப்ப டுத்தி இந்தியாவை ஆதரிப்பதாகக் கூச்ச லிட்டு திருப்திப்பட்டுக் கொண்டார்கள், மத்திய ஆட்சியாளர்கள். ஐரோப்பிய பிர திநிதிகள் காஷ்மீரில் சுற்றுப் பயணம் செய்ததைக் காட்டியும் உலக மனித உரிமை கமிஷனை உண்மையறிய நிபந் தனை அடிப்படையில் வரவேற்று ஜம்பம் அடித்தும் தம்மை உத்தமனாக காட்ட முயல்கிறது இந்தியா.

பெனாசிரும், நரசிம்ம ராவும் பதவி யேற்றதிலிருந்து விலையேற்றம், தனி யார் மயமாக்கம், பன்னாட்டுக் கொள் ளைக்குப் பாய்விரிப்பு, அடக்குமுறை போன்றவைகளால் அம்பலப்பட்டு மக்க ளின் எதிர்ப்புணர்வுகள் அதிகரித்து வரு கிற நெருக்கடி உள்ளது. போதாதற்கு பெனாசிருக்கு அவரது தாயால் தலை வலி; நரசிம்மராவுக்கு உட்கட்சி கோஷ்டி களால் தலைவலி. இவற்றிலிருந்து எல் லோரையும் திசைதிருப்ப இரு கும்பலுக் கும் தேசவெறி, யுத்தவெறியூட்டுவது அவசியமாக உள்ளது. காஷ்மீர் - பாகிஸ் தான் தாக்குதலைக் காட்டியே கூச்சலிட்டு ராவ் கும்பல் இவ்வாண்டு பட்ஜெட்டில் மக்கள் விரோத கொள்கைகளையும், டங் கல் திட்டத்தையும் நிறைவேற்றிவிடும். அமெரிக்காவோ, இந்தியாவின் மனித உரிமை மீறல் என்றும் பாகிஸ்தானின் அணு ஆயுத சோதனை என்றும் மிரட்டி இரு நாடுகளின் குடுமியையும் தன் கைப் பிடிக்குள் வைத்துள்ளது. தனது தேவை - ஆதாயத்தை ஒட்டி ஒரு குடுமியை இழுத்துப்பிடித்தும் மற்றொன்றை சற்றே தளர்த்தியும் காரியம் சாதித்துக் கொள்கி றது.

இந்தியா, பாகிஸ்தான், அமெரிக்கா மூன்றும் காஷ்மீர் மக்கள் பிரச்சனையில் குளிர் காய்கின்றனவே ஒழிய, தீர்வுகாண முற்படவில்லை. எந்த நாடும் காஷ்மீர் மக்களின் விருப்பம் - ஓட்டெடுப்பு அடிப் படையிலான சுயநிர்ணய உரிமையைப் பற்றி வாய்திறக்காததே இதற்கு சாட்சி. ஆனால் இங்குள்ள போலி கம்யூனிஸ்டு கள், ஜனதாதளம் முதலான கட்சிகளும் ''பேச்சு வார்த்தைகளின் மூலம், அரசி யல் தீர்வுகாண வேண்டும்'' என்று புளித் துப் போன கூச்சலோடு பா.ஜ.க.. காங்கி ரசு கும்பலின் தேசிய வெறிக்கும் உடந் தையாக உள்ளன. இவற்றையெல்லாம் சாதகமாக்கிக் கொண்டு காங்கிரசு கும்பல் மேலும் காஷ்மீர் மக்களை பாய்ந்து குத றவே செய்கிறது.

● பழநி.

# வீரமணியிடமிருந்து பெரியாரை விடுதலை செய்வோம், வாரீர்!

திராவிடர் கழகத்தின் வீர மணி பிரிவு நடத்திவரும் நாளேடு விடு தலை, கடந்த ஜனவரி 4-ந் தேதி முதல், ''பார்ப்பனீய எதிர்ப்பு அமைப்புகளில் பார்ப்பனர்களைச் சேர்ப்பது சரியா?'' என்கிற தலைப்பில் ஒரு தொடர் கட்டுரை வெளியிட்டுள்ளது. ''புதிய ஜனநாயகம் புரட்டலுக்கு மறுப்பு'' என்பது அத்தொ டருக்குத் தரப்பட்டுள்ள இன்னொரு தலைப்பு.

அத்தொடர் வந்த ஆறு நாட்களிலும் பின்வரும் குறிப்புடன் வெளியிடப்பட் டுள்ளது. '' பார்ப்பனீய எதிர்ப்பைக் கொண்ட அமைப்புகள் பார்ப்பனர்க ளைச் சேர்த்துக் கொள்ளலாமா என்பது பற்றி - இப்போது, சில அமைப்புகளில் விவாதம் நடக்கிறது; 'மக்கள் கலை இலக் கியக் கழகம்' - பார்ப்பனர்களைச் சேர்ப் பது பற்றி 'புதிய ஜனநாயகம்' ஏட்டில் தந்துள்ள விளக்கத்துக்கு இது ஒரு ஆணித்தர மறுப்பு'' (விடுதலை ஜன. 4-9, 1994).

எந்த எந்த அமைப்புகளில் அப்படி விவாதம் நடக்கிறது என்று ''விடுதலை'' எழுதவில்லை; பார்ப்பனர்களைத் தமது அமைப்பில் சேர்ப்பதில் தவறில்லை என்று வாதிட்டு வரும் பிற ''பார்ப்பனீய எதிர்ப்பு'' அமைப்புகளின் நிலைப்பாடுக ளுக்கு விடுதலையில் மறுப்பு இல்லை. ஆனால் 'புதிய ஜனநாயகம்' ஏட்டின் நிலைப்பாட்டிற்கு மட்டும் 'ஆணித் தர மறுப்பு' என்று சொல்லிக் கொண்டு ஒரு தொடர் எழுதியுள்ளது! ஆனால் அது




அப்படி ஆணித்தர மறுப்பு அல்ல; வெறும் மழுப்பல்; பக்கவாட்டில் கால் வைத்து நழுவிஓடும் முயற்சி; அப்படி நழுவி ஓடும்போதே வழக்கம்போல ''பார்ப்பன முத்திரை'' குத்தி சேறுவீசும் முயற்சிதான்!

அப்படி ஆணித்தரமான மறுப்பாக இருந்தால் நேரடியாக அதை ''விடுதலை'' செய்யலாமே! அதற்கு மாறாக எமக்கு எதிராக முதலில் வாசகர்களின் வெறுப்பு ணர்வைக் கிளறிவிட்டு தனது நியாய மற்ற வாதங்களை ஏற்பதற்குத் தயார்ப டுத்தும் வழக்கமான, கீழ்த்தரமான இரு பீடிகைகளுடன் தனது தொடரை ''விடுத லை'' தொடங்குகிறது.

★ முதலாவதாக, ''நமது இயக்கத் தையும் நமது தலைவர்களையுமே 'புதிய ஜனநாயகம்' கேலியும் அவதூறும் செய் துவிட்டது'' என்று புளுகி வாசகர்களின் வெறுப்புணர்வைத் தூண்டிவிடுகிறது; வாதங்கள் - பிரதிவாதங்களின் சரி - தவ றுகளை பகுத்தறிவு கொண்டு பரிசீலிக்க முடியாதவாறு தடுக்கிறது. இந்த நோக்கத் தோடுதான். ''வாசகர்களின், ''குறிப் பிட்ட கேள்விகளுக்கு சரியான பதி லையோ, தெளிவான விளக்கத்தையோ கொடுக்க முடியாத - 'புதிய ஜனநாயகம்' ஒரு பெரியார் இயக்கத்தையும், பெரியா ரையும், அம்பேத்கரையும் பற்றி கேலியா கவும் அவதூறாகவும் விமர்சித்துள்ளது'' என்ற புளுகுடன் தனது வாதத்தை ''விடு தலை'' தொடங்குகிறது.

கடைசியாக, இந்த வீரமணி பிரிவு ''புதிய ஜனநாயக''த்துடன் நடத்திய விவாதத்தின் போது விடாது பிடித்துக் கொண்டு தொடங்கிய அதற்குப் பிடித்த மான வாதம், ''எங்கள் விளக்கத்தை முழுமையாக வெளியிடத்தயாரா?'' என் பதுதான். அப்படிச் செய்வதைத் தனது நேர்மையைக் குறிக்கும் மரபு என்று அது பீற்றிக்கொண்டது. அந்த மரபுப்படி விடு தலையும் 'புதிய ஜனநாயகம்' ஏட்டில் தந்துள்ள நிலைப்பாட்டை முழுமையாக வெளியிட்டிருக்க வேண்டும். அப்படி செய்திருந்தால். 'புதிய ஜனநாயகம்' தந் துள்ளது சரியான பதிலா - தெளிவான விளக்கமா, இல்லையா என்று தெரிந்தி ருக்கும் அதேபோல பெரியார் இயக்கத் தையும், பெரியாரையும் அம்பேத்காரை யும் பற்றி கேலியாகவும் அவதூறாகவும்

www.padippakam.com




புதிய ஜனநாயகம் விமர்சித்துள்ளதா, இல்லை ''விடுதலை''தான் புளுகுகிறதா என்பதும் தெரிந்திருக்கும். அதற்கு மாறாக, ''புதிய ஜனநாயகம் - மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கு கொடுத்துள்ள பதிலின் சாராம்சத்தை மேற்கோளில் காட்டி நமது விளக்கத்தைத் தர விழைகிறோம்'' என்று கூறிக்கொண்டு ஆங்காங்கே சில பகுதிகளைப் பிய்த்துப் போட்டு திரித்துப் புரட்டி மழுப்பியிருக்கிறது, ''விடுதலை'' ஏடு.

★ பகுத்தறிவு பூர்வமாகவும், தர்க்க ரீதியாகவும் எதிராளியின் வாதங்கள், செயல்பாடுகள் எப்படிப் பார்ப்பனத் தன்மையுடையன என்று நிரூபிப்பதற்கு முன்பாகவே, எடுத்த எடுப்பிலேயே பார்ப்பன முத்திரை குத்தி வாசகர்களிடம் ஒரு தலைப்பட்சமான கண்ணோட்டத்தை உருவாக்கிவிடுவது. (தஞ்சை வல்லத்தில் இவ்வளவு காலமும் தாமே விருந்துண்ட ஒரு தாழ்த்தப்பட்ட மருத்துவர் வீட்டை ஆக்கிரமிக்க இடித்துத் தள்ளிய வீரமணி கும்பல் ''அவர் ஒரு ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கைக்கூலி'' என்று முத்திரை குத்தியதை நினைவு படுத்திக் கொள்ளவும்.) இதன் மூலம் எதிராளியின் வாதங்கள், செயல்பாடுகளை எதிர்மறைக் கோணத்திலேயே அணுகும்படியும் தனது நியாயமற்ற, சாரமற்ற வாதங்களுக்கும் செயல்பாடுகளுக்கும் செயற்கையான முட்டுக்கொடுத்துக் கொள்வதைக் காணாதவாறும் வாசகர்களைத் திணறடிக்கிறது. இந்த நோக்கத்தோடு ''விடுதலை''த் தொடரின் இரண்டாவது பீடிகை அமைந்துள்ளது. அது பின்வருமாறு.

''புராண காலத்திலிருந்தே பார்ப்பனர்கள் ஒரே பொய்யை பலமுறை திரும்பத் திரும்பக் கூறுவதன்மூலம் பொய்யானதை பாமரமக்களை நம்பச் செய்து அதில் தங்கள் வாழ்வை - ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வருபவர்கள். அதேபோல் தான், 'புதிய ஜனநாயகத்தின் அவதூறும் கேள்விகளும் அமைந்துள்ளன. திரும்பவும் நாம் 'புதிய ஜனநாயக'த்திற்குப் பதில் என்று நமது நேரத்தையும், உழைப்பையும் விரயப்படுத்துவது வீண்தான்''.

அப்படி ''விடுதலை'' இத்தொடர்மூலம் பதில் சொல்ல எடுத்துக் கொண்டிருக்கும் 'புதிய ஜனநாயக'த்தின் வாதங்கள் ஏதாவது ஏற்கனவே திரும்பத் திரும்ப நாம் சொன்னவையா? அப்படி இந்த வாதங்களுக்குத் திரும்பவும் பதில் சொல்லுவது வீண் என்று கருதும் அளவு எங்காவது விடுதலை ஏற்கனவே எழுதியிருக்கிறதா? இரண்டுமே இல்லை. வெறுமனே பார்ப்பன முத்திரை குத்துவதற்காக வீண் ஜம்பம் அடிக்கிறது ''விடுதலை''

அதற்கு மாறாக விடுதலை ஏற்கனவே திரும்பத் திரும்பச் சொல்லிவரும் பொய்யை மீண்டும் இத்தொடரில் எழுதி உள்ளதற்கு நாம் சான்று காட்ட முடியும். சான்றாக, நீதிக் கட்சி பார்ப்பனரல்லாதார் அனைவரின் நலனுக்காகவும் பாடுபட்டதாக தி.க. கூறிவரும் புளுகு இத்தொடரிலும் இடம் பெற்றுள்ளது. ஆனால் நீதிக் கட்சி மேட்டுக்குடி மேல்சாதி நலன்களுக்காக மட்டுமே பாடுபட்டது என்பதை மண்டல் கமிசனின் ஆய்வறிக்கையும், மேலைநாட்டு ஆய்வாளர்களும் நிரூபித்துள்ளனர். இதை ஏற்கனவே ஆதாரத்துடன் 'புதிய ஜனநாயகம்' எழுதியுள்ளது; ஆனால் தானே கூறும் பார்ப்பனத்தனமாக மீண்டும் புளுகியிருக்கிறது, விடுதலை. திராவிடர் கழகம் என்பது 'பள்ளன் கட்சி', 'பறையன் கட்சி' என்றழைக்கப்பட்டதாக ''விடுதலை'' புளுகுவது அதன் பார்ப்பனத்தனத்துக்கு இன்னொரு சான்று. இந்தப் பொய்யும் ஏற்கனவே ''விடுதலை''யில் வந்ததுதான்.

அதேசமயம், ஏற்கனவே 'புதிய ஜனநாயகம்' எழுப்பியுள்ள பல கேள்விகளுக்கு வீரமணி பிரிவு தி.க. விடம் இருந்து இன்னமும் பதில் வராததையும் சுட்டிக் காட்ட முடியும். முன்பு ''மார்க்சிய - லெனினியக் குழுக்களுக்கு ஒரு அறை கூவல்'' என்று எழுதிய வீரமணி பிரிவின் இன்னொரு ஏடான 'உண்மை' தேசிய இனப்பிரச்சினையில் நாம் ஏதோ திடீர் ஆர்வம் காட்டுவதாக புளுகி இருந்தது. அதை மறுத்ததோடு, தமிழ்தேசியத் தன்னுரிமை தனது இலட்சியம் என்று பகிரங்கமாக அறிவித்து, அதற்காகப் போராடத் தயாரா என்று கேட்ட நமக்குப் பல ஆண்டுகளாகியும் பதில் இல்லை.

> ''நாய் காத்த தெங்கம் பழம்'' போல பெரியாரின் அறிவுச் சொத்துக்களைக் காத்துக் கொண்டு பெரியாரின் நிதிச் செல்வத்தை மட்டும் ஆண்டு அனுபவித்து வருகிறார், வீரமணி.

அதற்கு முன்பாக பெரியார் பண்பாட்டு மையம் என்கிறபெயரில் எமக்கு எதிராக வைத்த ''விடுதலை'' வாதங்களுக்கு எமது தோழமை ஏடான ''புதிய கலாச்சாரத்தில்'' எழுதியவற்றுக்கும் ''விடுதலை'' யிடம் இருந்து பதில் இல்லை. பின்பு, திராவிடக் கட்சிகளை மண்டல் கமிசன் ஆய்வறிக்கை விமர்சித்திருப்பதால்தான் அக்கட்சிகள் எதுவும் அந்த அறிக்கையைத் தமிழில் முழுமையாக வெளியிடவில்லை என்று நாம் கூறினோம். ''அப்படி எதுவும் மண்டல் ஆய்வறிக்கையில் கிடையாது, இருந்தால் 'புதிய ஜனநாயகம்' வெளியிடலாமே'' என்று வீரமணி பிரிவினர் சவால்விட்டனர். அதை ஏற்று ம்ண்டல் ஆய்வறிக்கையின் அப்பகுதியை நாம் வெளியிட்டோம். அப்புறம் வீரமணி பிரிவினர் அதற்குப் பதில் கூறாது வாய்மூடிக் கொண்டனர். கடந்த மூன்றாண்டுகளாக இந்த வீரமணி பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் பாதந்தாங்கியாக இருப்பதைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகிறோம். அதற்கும் பதில் கிடையாது. இப்போது, ''திரும்பவும் நாம் 'புதிய ஜனநாயக'த்திற்கு பதில் என்று நமது நேரத்தையும் உழைப்பையும் விரயப்படுத்துவது வீண்தான்'' என்று ஜம்பமடிக்கிறது.

இருந்தாலும் பின்வரும் காரணத்தை கூறி 'புதிய ஜனநாயக'த்திற்கு 6 நாள் தொடர் எழுதியிருக்கிறது விடுதலை: ''என்றாலும், பழைய வரலாற்றுச் செய்திகள் இக்கால புதிய இளைய தலைமுறையினருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இதனை இளைஞர்கள் தெரிந்து கொள்ளாமல் செய்வதிலும் பார்ப்பனர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு வருகின்றார்கள். அத்தோடு, 'புதிய ஜனநாயக'த்தின் போலிப் புரட்சியாளர்களால் திரித்துக் கூறப்படும் அவதூறுகளை உண்மையென நம்பிக் கொண்டிருக்கும் நமது மதிப்புக்குரிய உடன்பிறவா தாழ்த்தப்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்கள் உண்மை எது? பொய் எது என்று தெளிவு பெறுவதற்காகவும், 'புதிய ஜனநாயக'த்திற்கு பதில் தருவது கடமை எனக் கருதி பதில் தர விழைகிறோம்.'' (விடுதலை ஜன.4, 1994)

பழைய வரலாற்றுச் செய்திகளை இக்கால புதிய இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்ளாமல் செய்வதற்காக பார்ப்பனர்கள்தான் சமார்த்தியமாகச் செயல்பட்டு வருகிறார்கள். சரி, அந்த பழைய வரலாற்றுச் செய்திகளை இக்கால புதிய இளைய தலைமுறையினர் தெரிந்து கொள்வதற்கு வீரமணியார் தேவையான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரலாமே! அதற்கு யார் தடையாக இருக்கிறார்கள்? ''நாய் காத்த தேங்காய்ப் பழம்'' போல பெரியாரின் அறிவுச் சொத்துக்களைக் காத்துக் கொண்டு(பெரியார் நூலகத்துக்குள் நுழைவதற்கே ஆயிரத்தெட்டு கேள்விகள், தடைகள், 10 முதல் 5 வரை என்று தினசரி அலுவலக நேரம், பிரதிகள் எடுக்க அனுமதி மறுப்பு; பெரியார் திடலை கிறித்துவ 'சுகமளிப்பு - நற்செய்தி'க் கூட்டங்களுக்கு அனுமதித்தாலும் புரட்சியாளர்களுக்கு மறுப்பு), பெரியாரின் நிதிச் செல்வத்தை மட்டும் ஆண்டு அனுபவித்துவரும் வீரமணியார் பெரியார் படைப்புகளின் தொகுப்பு நூல் கூட வெளியிடவில்லையே, ஏன்?. அதுவும் ஆனைமுத்து அவர்கள் முயற்சியில் தானே வெளிவந்தது?. பெரியார் கொள்கைகளைப் பரப்புவதாக அவரது பிறந்த நாளில் வீரமணியே அறிவித்த திட்டங்கள் கூட காகிதத் திட்டங்களாகவே முடக்கப்பட்டனவே, ஏன்? திராவிடர் கழகம், சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம் உட்பட எல்லாம் இன்னொரு ''சங்கரமடம்'' ஆக்கப்பட்டது, வீரமணியின் ''புதிய பார்ப்பன'' சாமர்த்தியமே! இதனால் பெரியாரின் கொள்கைகளில் உடன்பாடுடைய இக்கால புதிய, இளைய தலைமுறையினர், வீரமணி தலைமையை ஏற்காமல் பல தமிழினக் குழுக்களாக உள்ளனர். இதுவும் பார்ப்பன சாமர்த்தியம் காரணமாகத்தான் என்று கூற முடியுமா?


எப்படியோ, 'புதிய ஜனநாயக'த்திற்கு பதில் தரும் கடமை ஏன் வந்தது என்று கூறிவந்த ''விடுதலை'' ஏடு ஒரு உண்மையை ஒப்புக் கொண்டுவிட்டது. அதன் மதிப்புக்குரிய உடன்பிறவா தாழ்த்தப்பட் - பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்கள் ''புதிய ஜனநாயகத்தின் போலிப் புரட்சியாளர்களால் திரித்துக் கூறப்படும் அவதூறுகளை உண்மையென நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பது தான் அந்த உண்மை.

தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்கள் புதிய ஜனநாயகத்தின் பின்னே அணிதிரள்வதற்கு காரணம் என்ன? இதுதான் பார்ப்பனீய பனியா பாசிச ஆதிக்கத்தை வீழ்த்தி இச்சமுதாய விடுதலையைச் சாதிக்கக் கூடிய புரட்சிகர அமைப்பு என்று நம்புவதாலா? அல்லது ''விடுதலை'' எழுதியுள்ளவாறு 'புதிய ஜனநாயகம்' திரித்துக் கூறும் அவதூறுகளை உண்மையென நம்பிக் கொண்டிருப்பதாலா?

இப்போது மார்க்சிய - லெனினிய இயக்கத்தில் அணிதிரண்டிருப்பவர்கள், தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்களிலேயே மிகவும் கூர்மையான அறிவுத்தெளிவும், போர்க்குணமிக்க செயலூக்கமுள்ளவர்களும் தான். இவர்கள் வீரமணி, ராமதாஸ், இளையப் பெருமாள் போன்றவர்களின் சவடால்களையும் துரோகங்களையும், 'புதிய ஜனநாயக'த்தின் புரட்சிகர உறுதி, செயல்பாடுகளையும் நன்கு அறிந்தே தான் உள்ளனர். ''அம்பாசிடர்'' என்ன, ''மாருதி''க் கார் போதாது, ''டாடா சியாரா'' வேண்டும்; பள்ளி, கல்லூரி போதாது பல்கலைக் கழகம் வைத்துக் கொள்ளையடிக்க வேண்டும் - என்று சுகபோகங்களையும் சொத்துக்களையும் பெருக்கிக் கொள்ளும் வீரமணியைத் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்கள் பார்க்கிறார்கள். அவற்றைக் காத்துக் கொள்வதற்காக பார்ப்பனீயக் கைக்கூலி எம்.ஜி.ஆர். பார்ப்பன ஜானகி, பார்ப்பன - பாசிச ஜெயா மட்டுமல்ல, பார்ப்பன - பாசிச இந்திரா,ராஜீவின் கால்களிலும் விழுந்து துரோகம் செய்யும் வீரமணியைப் பார்க்கிறார்கள்.

அதேசமயம், சகல துறைகளிலும் பார்ப்பனீய - பனியா ஆதிக்கத்தையும், தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்கள் மீதான ஒடுக்குமுறையையும் புதிய கலாச்சாரம், புதிய ஜனநாயகம் ஏடுகள் தமது துவக்க காலத்தில் இருந்தே எதிர்த்து வருவதைப் படிக்கிறார்கள். வீரமணியைப் போல சொத்து சுகங்களை நாடிப்போய், அவற்றைப் பெருக்கிக் கொள்வது, காத்துக் கொள்வது என்ற முயற்சியில் இறங்காது, புரட்சிகர வாழ்வைப் புதிய ஜனநாயகத்தின் தோழர்கள் மேற்கொள்வதைப் பார்க்கிறார்கள். குறிப்பாக ராஜீவ் கொலைக்குப் பிந்திய நாட்களில் ராஜீவைக் கொன்ற சிவராசன், தானு, சுபா ஆகியோர் சி.ஐ.ஏ, இந்திய உளவுப் படைக் கைக்கூலிகள், காங்கிரசுக் கூட்டாளிகள் என்று அவதூறு பேசியும், பார்ப்பன பாசிச ஜெயாவுக்குப் பொன்னாடை போர்த்தியும் கையூட்டு வாங்கிக் கொண்டார் வீரமணி; சி.பி.ஐ. சிறப்புப் படையால் வேட்டையாடப்பட்ட தி.க. அடிமட்ட தொண்டர்களைக் கூட கைகழுவிவிட்டார். ஆனால் புதிய ஜனநாயகமோ, ராஜீவின் கொலை அவரது ஈழ ஆக்கிரமிப்புக் குற்றங்களுக்கான தண்டனை; அவரைக் கொன்றவர்கள் எவருடைய கைகூலியும் கூட்டாளியும் கிடையாது என்று துணிந்து எழுதியும், தொடர்ந்து ஈழ ஆதரவு நிலை எடுத்தும் அதற்காக சி.பி.ஐ. மிரட்டலுக்கும், 124 ஏ, ''தடா'', தே.பா.சட்டத் தாக்குதலுக்கும் இலக்கானோம் என்பதை தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்கள் பார்த்தார்கள்.

வீரமணி, பெரியார் திடலுக்குள் ''அடையாளப்'' போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கையில் ''புதிய ஜனநாயகம்'' பார்ப்பன சனதான இந்து பாசிச வெறியர்களைக் களத்திலே சந்தித்தது. பேருந்து - ரயில் பெட்டிகளில் தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட - சிறுபான்மைச் சமுதாயத்தின் குரலாய் ஒலித்தது. வருணாசிரம - சாதி முறையை நியாயப்ப




**ம.க.இ.க.வின் பார்ப்பனீய எதிர்ப்பு இயக்கங்கள்; வீரமணி நடத்தும் அடையாளப் போராட்டங்கள் போன்றது அல்ல இவை.**



படிப்பகம்

www.padippakam.com

டுத்தி தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்திப் பேசிய சங்கராச்சாரி படத்துக்கு செருப்பு மாலை 'மரியாதை' செலுத்தப்பட்டது; ராமன் பட எரிப்பு, கருவறை நுழைவு, தமிழ் மக்கள் இசைவிழா எனத் தொடரும் பல இயக்கங்கள். இவை தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்களை மட்டுமல்ல, முதியவர்களைக் கூட "வீரமணி பெரியாருக்குத் துரோக செய்துவிட்டார்; நீங்கள் தான் அந்தக் காலத்தில் பெரியார் விட்ட பணிகளை எடுத்துத் தொடர்ந்து நடத்துகிறீர்கள்; உங்கள் பணிகள் தொடர முழு ஒத்துழைப்பும் தருகிறோம்" என்று "புதிய ஜனநாயக"த்துடன் இணைய வைத்தன. குறிப்பாக, திருச்சி - தஞ்சை தி.க., தி.மு.க., பா.ம.க. இளைஞர்கள், மதுரை - முகவை தலித் சிறுத்தைகள், இமானுவேல் பேரவை தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் கருவறை நுழைவுப் போராட்டத்திற்கு பெருமளவு ஆதரவாகத் திரண்டனர். இதனால் பதறிப்போன வீரமணி மூன்று மாதங்களுக்கு மேலாக அம் மாவட்டங்களில் முகாமிட்டு 'புதிய ஜனநாயக'த்துக்கு எதிராக பார்ப்பன முத்திரை குத்தி அவதூறு செய்தார். அதன் தொடர்ச்சிதான் "விடுதலை"யில் வெளிவந்துள்ள இந்தத் தொடர் அவதூறுக் கட்டுரை.

சுருங்கக் கூறின், வீரமணியின் சந்தர்ப்பவாதங்கள், துரோகங்களைக் கண்டு கொண்டு, 'புதிய ஜனநாயக'த்தின் சொல்லும் செயலும் புரட்சிகரமானதாக இருப்பதை உணர்ந்து தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்கள் எம்மோடு இணைகிறார்கள். ஆனால் நாம் ஏதோ திரித்துக் கூறும் அவதூறுகளை உண்மையென நம்பிக் கொண்டிருப்பதாகவும், தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட சமுதாய இளைஞர்களுக்கு உண்மை எது? பொய் எது? என்று தெளிவுபடுத்துவது தனது கடமை எனக் கருதி பதில் எழுத விழைவதாகக் கூறுகிறது, "விடுதலை".

ஆனால் தொடர்ந்து வருவதோ பொய்யும் அவதூறும் மட்டுமல்ல, வீரமணி கும்பலிடம் ஊறிப்போன ஆள்காட்டித் துரோகத்தனம் தான்! "பிறப்பால் பார்ப்பனர்களாகவும் - இருப்பால் சூத்திரர்களாகவும் - பஞ்சமர்களாகவும் வாழும் ஒரு சில தோழர்கள், எமது அமைப்பின் முக்கியப் பொறுப்புகளில் இருப்பது உண்மையே! இதை நாங்கள் பகிரங்கப்படுத்தவோ, மூடிமறைக்கவோ வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்கள்தான் எமது அமைப்பின் தலைமையாக இருப்பதாகக் கூறுவது அப்பட்டமான பொய்யும் அவதூறும் ஆகும்" - என்ற "புதிய ஜனநாயக"த்தின் விளக்கத்தையும் அதைத் தொடர்ந்து வந்த ஒரு பகுதியையும் விடுதலை மேற்கோள் காட்டுகிறது. உடனேயே பின்வருமாறு கேள்வியும் கேட்கிறது "விடுதலை":

> புரட்சியாளர்களின் 'அமைப்பு முறைகள்' தெரிந்தும் பொறுப்பாளர்களை வெளியிடச் சொல்லி ஆள்காட்டும் வேலை செய்கிறது. விடுதலை.

"பார்ப்பனர்கள் புதிய ஜனநாயக (ம.க.இ.க.)த்தில் முக்கியப் பொறுப்புகளில் இருப்பதாக ஒத்துக் கொண்டதற்கு நன்றி. அத்தோடு புதிய ஜனநாயகத்தில் முக்கிய பொறுப்புகளில் உள்ள பார்ப்பனர்கள் யார் என்பதையும் தலைமையில் உள்ள பார்ப்பனர்கள் யார் என்பதையும் விளக்குவார்கள் என எதிர்பார்க்கிறோம். ஏனெனில் இவை மறைக்கப்பட வேண்டியவை அல்லவே!" (விடுதலை 4-1-94 பக்.2). இது பொய்யும், அவதூறும் ஆள்காட்டித் துரோகமும் தவிர வேறென்ன?

"இது ஒரு மார்க்சசிய - லெனினிய அமைப்பு. இங்கே கம்யூனிஸ்டுகளிடையே சாதி அடிப்படையிலான வகைப் பிரிவுகள் இல்லை" (பு.ஜ.) என்றும் இதிலுள்ள தோழர்களிடையே பார்ப்பனர், பள்ளர், பறையர், கவுண்டர், வேளாளர், கோனார், வன்னியர், முதலியார், முக்குலத்தோர் என்று சாதி பார்த்து எதையும் தீர்மானிப்பதில்லை! அதாவது இதன் உறுப்பினர்கள் இந்தப் பிறப்புச் சாதியினர் என்று கருதுவதும் நடத்துவதும் கிடையாது என்று தெளிவுபடுத்திய பிறகும் பார்ப்பனர்கள் 'புதிய ஜனநாயக'த்தின் முக்கியப் பொறுப்புகளில் இருப்பதை ஒப்பு கொண்டதாகப் புளுகி நன்றி தெரிவிப்பது அவதூறுதானே!

"எமது அமைப்பு பார்ப்பனத் தலைமையிலானது என்பதே அப்பட்டமான பொய்யும் அவதூறுமாகும்" என்று மறுத்த பிறகும் தலைமையில் உள்ள பார்ப்பனர்கள் யார் என்று கேட்பது அடாவடித்தனமான அவதூறும் பொய்யும் தானே! இதை விட முக்கியமானது எமது அமைப்பின் முக்கியப் பொறுப்புகளிலும் தலைமையிலும் யார் யார் இருக்கின்றனர் என்று கேட்டு "இவை மறைக்கப்பட வேண்டியவை அல்லவே" என்று கூறுவது ஆள்காட்டித் துரோகத் தனம் தானே!

ஆட்களையும் அமைப்பையும் காப்பாற்றிக் கொள்வதற்காக (1955-இல் பெரியார் ஈரோட்டுத் திட்டத்தையும், 1962-இல் அண்ணாதுரை திராவிட நாடு கோரிக்கையையும்) இலட்சியத்தையும் திட்டத்தையும் காற்றில் பறக்கவிடும் திராவிட இயக்கப் பாரம்பரியத்தைக் கொண்டதல்ல "புதிய ஜனநாயகம்". பார்ப்பன - பனியா அரசு விதிக்கும் சட்ட வரம்புகளுக்குள் கோழைத்தனமாக முடங்கிக் கொள்வதும் பெரியார் திடலுக்குள் சவடால் அடிப்பதும் அல்ல. புதிய ஜனநாயகப் புரட்சியை எமது திட்டமாகக் கொண்டுள்ளோம்; அதை நாடாளுமன்ற சமரச சந்தர்ப்பவாதப் பாதையில் அடைய முடியாது என்பதால் மக்கள் யுத்தப் பாதை என்னும் புரட்சிகர வழியையும் தெரிவு செய்து பணியாற்றுகிறோம்; அதற்குத் தேவையான சட்டபூர்வ, சட்டவிரோத, இரகசியமான, வெளிப்படையான புரட்சிகரக் கட்சி மற்றும் பிற அமைப்புகளைக் கட்டி இயக்குவது இன்றியமையாததாகும். மார்க்சிய - லெனினிய புரட்சியாளர்கள் மத்திய - மாநில அரசுகளின் உளவுப் படைகளது தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்கள். குறிப்பாக மார்க்சிய - லெனினியப் புரட்சியாளர்களை வேட்டையாடுவதற்கு என்றே "கியூ" பிரிவு உளவுப்படையை கருணாநிதி உருவாக்கினார். அது தனது முதல் பலியாக தோழர் அப்புவைக் கொன்றது. கருணாநிதியின் அடியொற்றி மோகன்தாஸ்-தேவாரம் தலைமையில் "கியூ" பிரிவு உளவுப்படையை ஏவி வடாற்காடு, தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் முப்பத்துக்கும் மேற்பட்ட புரட்சியாளர்களைச் சுட்டுக் கொன்றார் எம்.ஜி.ஆர். திராவிட இயக்கத்தின் பரிணாம வளர்ச்சியான ஜெயலலிதா அதே "கியூ" பிரிவு உளவுப் படையை புரட்சியாளர்களுக்கு எதிராக மட்டுமல்லாது, ஈழப் போராளிகளுக்கு எதிராகவும் ஏவி விட்டுள்ளார். இந்நிலையில் ஒரு புரட்சிகர அமைப்பு எத்தகைய "அமைப்பு முறைகளை" மேற் கொண்டு இயங்கிவருகிறது என்பதை அறிந்தே அமைப்பு இரகசியங்கள் "மறைக்கப்பட வேண்டியவை அல்லவே!" என்று கேட்டு ஆள்காட்டித் துரோகத்தை அப்பாவி பாணியிலே செய்கிறது "விடுதலை".

— தொடரும்

மார்ச் முதல் வாரத்திலிருந்து., சென்னையில்...
முற்போக்கு நூல்கள், ஒலி-ஒளி நாடாக்கள் கிடைக்குமிடம்
கீழைக்காற்று
வெளியீட்டகம்
விற்பனையகம்
EAST WIND
PUBLICATION
BOOK STALL
10, ஔலியா சாகிப் தெரு, எல்லீஸ் சாலை, சென்னை - 600 002
(அண்ணாசாலை - தேவி திரையரங்கம் பின்புறம்)



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

● சென்ற சனவரியில் ஆந்திராவிற்கு ராவ் வந்தபொழுது டங்கல் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த முற்போக்கு மகளிர் அமைப்பின் மாநில துணைத் தலைவி சந்தியாவை 'தடா'வில் உள்ளே தள்ளியுள்ளது காங்கிரசு அரசாங்கம். இதை எதிர்த்து கர்நூல் மாவட்டம் முழுவதும் ஒரு நாள் கடையடைப்பு நடைபெற்றுள்ளது. சந்தியா தன்னை எதிர்த்துப் போட்டியிட்டதற்கும், கள்ளச் சாராயத்தை எதிர்ப்பதற்கும் பழிவாங்கும் முகமாக ஆந்திர முதல்வர், பிரதமர் முன் ஆர்ப்பாட்டம் செய்ததை வாய்ப்பாகப் பயன்படுத்தியுள்ளார் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

● பணக்காரர்கள் எவ்வித இடையூறு இன்றியும் தங்கி ஓய்வெடுத்து பொழுது போக்குவதற்காக கடற்கரைகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது இந்திய சுற்றுலாத் துறை. கேரளாவில் பேகல், ஒரிஸ்ஸாவில் கோனார்க், மகாராஷ்டிராவில் சிந்துதுர்க், தமிழ்நாட்டில் மகாபலிபுரம் மற்றும் டையூ தீவுகள் என ஐந்து இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் ஐந்து நட்சத்திர விடுதிகளோடு ஆடல் பாடல்களுக்கான கலையரங்கங்களும் வணிக மையங்களும் கட்டப்படும். அரைகுறை பணக்காரர்கள் கூட இதில் நுழைந்துவிடக் கூடாது என்பதில் அதிக அக்கறை செலுத்துகிறதாம் மத்திய அரசு!

● கடந்த 1986-ல் பீகாரின் கன்சாரா பகுதியைச் சேர்ந்த விவசாயக் கூலிகள், தாங்கள் கூலியாக வாங்கும் 1 கிலோ அரிசியை மூன்று கிலோவாக உயர்த்த வேண்டும் என நக்சல்பாரிகள் தலைமையிலான விவசாயிகள் சங்கத்தில் இணைந்து போராடினர். மேல்சாதி பூமிகார் நில முதலைகள் கூலி த மறுத்ததுடன், தங்களின் சொந்த இராணுவத்தைக் கொண்டு எட்டு விவசாயிகளைக் கொன்றொழித்தனர். அரசாங்கமோ கொலையாளிகளுக்குப் பாதுகாப்பாக செயல்பட்டது. இதனால் விவசாய சங்கத்தினர் அப்பகுதியைச் சேர்ந்த 26 பூமிகார் சாதி நில முதலைகளின் நிலத்தில்தாழ்த்தப்பட்டோர் உழக்கூடாது என முடிவெடுத்தனர். நிலத்தை உழ வெளியூரில் இருந்து கூலியாட்களைக் கூட்டி வந்தபொழுது அவர்களிடம் விளக்கி திரும்பி போகச் செய்துள்ளனர். இதனால் நிலப்பண்ணைகளின் பொருளாதார பலம் சரிந்தது; அதோடு சென்ற வருடம் ஆகஸ்டில் பூமிகார் இராணுவத்தின் தளபதியையும் அவ்வமைப்பினர் அழித்தொழித்தனர். இதனால் அரண்டு போன அந்த நிலப்பிரபுக்கள் இரண்டாயிரம் பேருக்கு மேல் கூடியிருந்த மக்கள் நீதி மன்றத்தின் முன் சரணடைந்து மன்னிப்புக் கேட்டுள்ளனர். ஆயுத மோதலில் இறந்து போன எட்டு விவசாய குடும்பங்களுக்குத் தலா 2.5 ஏக்கர் நிலமும் இரண்டு லட்ச ரூபாயும் தர வேண்டும் எனத் தீர்ப்பளித்து மன்னிப்பு அளித்துள்ளது மக்கள் நீதிமன்றம்.

● பாகிஸ்தானில் 70 சதவீத பெண் கைதிகள் போலீசாரின் பாலியல் வன்முறைக்குப் பலியாகின்றனர். ஆனால் எந்தப் போலீசாரும் இதற்காகத் தண்டிக்கப்பட்டது கிடையாது. சாட்சியங்கள் பலமாகவுள்ள கற்பழிப்பு வழக்குகளிலும் இதுதான் நிலை. 80 சதவீத பெண் கைதிகள் கல்வியறிவு அற்றவர்கள்; 90 சதவீதம் பேருக்கு தாங்கள் எந்த சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளோம் என்பதே தெரியாது. விபச்சார வழக்கு களில் தரகர்கள் கைது செய்யப்படுவது அரிது. 50 முதல் 80 சதவீத பெண்கள் ''ஹுதூத்'' எனும் இஸ்லாமிய சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இச்சட்டத்தின்படி ஓர் ஆணைத் தண்டிக்க நான்கு ஆண்கள் சாட்சி சொல்ல வேண்டும். பெண் என்றால் சந்தேகத்துக்கு இடமானவள் என்ற தோற்றமே போதுமானது!

● கல்கத்தாவில் நடந்த ஒரு மத விழாவில் கலந்து கொண்ட பூரி சங்கராச்சாரியர், அங்கு பெண்கள் வேதம் ஓதத் தொடங்கியதைக் கண்டு ஆத்திரமுற்று, ''இது தனக்கும் மதத்திற்கும் செய்யும் அவமரியாதையென்றும், தான் உயிரோடு இருக்கும் வரை பெண்கள் வேதங்கள் ஓதுவதை அனுமதிக்க முடியாது'' என்றும் எச்சரித்துள்ளார். மறுநாளே இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்திய முற்போக்கு மகளிர் அமைப்பினரை ''அந்த முட்டாள்களைத் துரத்தியடியுங்கள்'' என அடியாட்களை அனுப்பியுள்ளார். தற்பொழுது நாலாபுறமும் இருந்து எதிர்ப்பு கிளம்பவே ''எனது சடங்குகளை முடித்த பின் வேதங்களை ஓதுங்கள் என்று சொன்னதாகவும், பத்திரிகைகள்தான் பெரிதுபடுத்திவிட்டதாகவும்'' புலம்பியுள்ளது இம்மதப் பண்டாரம்!

● இளம் பெண் கடத்தல் தொடர்பாக ஜுக்தர்ராம் என்பவரை விசாரணைக்கு அழைத்துச் சென்ற இராசஸ்தான் மாநில போலீசு, அவரது ஆண் குறியைக் கூரிய பிளேடால் அறுத்தெறிந்துள்ளது. போலீசின் முதல் தகவல் அறிக்கையில் கூட இவரது பெயர் குறிப்பிடப்படவில்லை. இதனால் கொதித்துப் போன ஜெய்ப்பூர் பர்மர் பகுதி மக்கள் ''காட்டுமிராண்டி களைக் கைது செய்ய''க் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். இதன் பின் மாநில அரசு ஐந்து போலீசுகாரன்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்வதற்கான உத்தரவினை மட்டும் தற்பொழுது இட்டுள்ளது.

● ''டெல்லியில் இயங்கிவரும் அனைத்திந்திய மருத்துவ விஞ்ஞான கழகத்தின் பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கு நடந்த நுழைவுத் தேர்வில் தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு கிடையாது; 'தகுதி' அடிப்படையில் தான் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டும்'' என மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இதைக் காரணம் காட்டி அதிகாரிகள் மேல் சாதி மாணவர்களை விட அதிக மதிப்பெண்கள் பெற்ற தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும் இடம் கிடையாதென மறுத்துள்ளனர். இதை எதிர்த்து அக்கழகத்தின் மாணவர் தலைவர் தனது பதவியிலிருந்து விலகிவிட்டார். பலரும் இதை 'மகாபாரதத்தில் திறமையான ஏகலைவனின் கட்டைவிரலைப் பிடுங்கியதுடன்'' ஒப்பிட்டு அம்பலப்படுத்தியுள்ளனர். ஆனாலும் மத்திய அரசு அசைந்து கொடுக்கவில்லை. இதுதான் காங்கிரசின் 'சமூக நீதி'!

**சனாதன - ஆணாதிக்க வெறியன் பூரி சங்கராச்சாரியுடன் வாக்குவாதம் புரியும் மகளிர் அமைப்பினர்.**



*Published and owned by R.SHANMUGARAAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015*
*Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAAJ*

படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd.No. TN/MS(S) 622
www.padippakam.com

சுருட்டி வைக்கப்பட்டு இருக்கும் மூங்கிலால் பின்னப்பட்ட குடை, தோளிலுள்ள நீளமான புல்லாங்குழல், அருகில் உள்ளவர் கையில் பிடித்திருக்கும் மீன் கூடை, தரையில் பரப்பியிருக்கும் மீன்பொறி, காய்கறி கூடை - இவையெல்லாம் ஒரிஸ்ஸாவின் கோயா பழங்குடி மக்களின் கைவினைத் திறனுக்குச் சான்று கூறுபவை. இதோடு, இவை போன்ற 50-க்கும் அதிகமான மூங்கில் கைவினைப் பொருட்கள்தான் பரம்பரை பரம்பரையாக இம்மக்களின் பிழைப்புக்கான ஆதாரமும் கூட. ஆனால் இதுவெல்லாம் நேற்றுவரை தான்; இன்றோ ஒரிஸ்ஸா மாநில வனத்துறை, மூங்கில் காடுகளைத் தனியார் காகித ஆலை அதிபர்களுக்குத் தாரை வார்த்ததுடன், இப் பழங்குடியினரை எந்தவொரு காட்டு விளை பொருளையும் தங்கள் சொந்த உபயோகத்திற்குக் கூடப் பயன்படுத்தக் கூடாது எனத் தடையுத்தரவும் போட்டுவிட்டது. இன்று மூங்கிலை வெட்டி ஆலையில் கொடுத்து அதில் கிடைக்கும் கூலியைக் கொண்டு காலந் தள்ளுகிறார்கள்.



# இதுதான் இன்றைய இந்தியா

இது பிரதமர் ராவ், குஜராத் மாநில பழங்குடி மக்களைத் தனது இல்லத்தில் சந்தித்த காட்சி. அப் பழங்குடி மக்களின் ''தர்பா'' எனும் வாத்தியத்தை ஊதிக்காட்டி வஞ்சகமற்ற அம்மக்களைத் திக்கு முக்காடச் செய்கிறார். இப்படி இசைக் கருவிகளை இசைத்தும், அவர்களின் உடைகளை அணிந்தும், அவர்களோடு நடனமாடியும், கருத்தரங்குகள், வளர்ச்சித் திட்டங்கள் என்றும் 'குடியரசு, சுதந்திரதின' விழா நிகழ்ச்சிகளில் அவர்களை நடனமாட வைத்தும் நாடகமாடும் இந்த ஆட்சியாளர்கள் மறுபுறம் ''அணை கட்டுகிறேன்; சுரங்கம் வெட்டுகிறேன்'' என்ற பெயரில் அவர்களின் நிலங்களைப் பறித்துக் கொள்கின்றனர். அம் மக்களின் வாழ்க்கை முறையினையும், சூழலையும் பாழாக்கி சூறையாடிவருகின்றனர்.



பட்டினிச் சாவுகள் தொடரும் மாநிலத்தில் வாழும் கடைகோடி மக்கள் இவர்கள்; ஆனாலும் மண்ணின் மைந்தர்களை அடித்துத் துரத்தி அந்நிய எஜமானர்களுக்கும் அவர்களது அடியார்களுக்கும் சேவை செய்யத் துடிக்கின்றனர் ஆட்சியாளர்கள். இம் மக்கள் விரோத கும்பலை நாட்டை விட்டு நாம் துரத்தியடிக்கப் போவது எப்போது?

படிப்பகம்